# முதல் பருவம்*(SEMESTER 1)*
## Part 2
## Day 19

ஆதி கயிலை அரனா ரிடத்தில்வந்து
வேதியரும் நன்றாய் விளம்புவா ரம்மானை
சூரபற்ப னென்ற சூரக்குலங் களைத்துணித்து
வீரம் பறைந்ததினால் மேலுமந்த அவ்வுகத்தில்
இரணியனாய்த் தோன்றி நின்றஇ ராச்சதனைக்
கொன்னு கிரேதா குவலயமும் நானழித்து
முன்னு கரந்திருந்த ஆறு முகவேசம்
செந்தூரு வாரி திரைமடக்கில் வாழ்ந்திரென்று
வந்தோங் காணய்யா மலர்ப்பாதந் தெண்டனிட
என்றேதா னாதி ஈசுரரோ டேதுரைப்பார்
அன்றேதா னீசர் அருளுவா ராயருக்கு

திரேதா யுகம - இராவணன் பாடு

முன்னே குறோணி முடிந்ததுண் டாறதிலே
இன்னமூணு துண்டம் இருக்குதுகாண் மாயவரே
என்றீசர் சொல்ல எல்லோருந் தான்கூடி
அன்றிருந்த துண்டம் அதிலேயொரு துண்டமதை
உருவாய்ப் படைத்து உயிர்க்கொடுக்கு மவ்வளவில்
அருகே யிருந்த அச்சுதரு மேதுரைப்பார்
முன்னே இவனும் முற்பிறப் பானதிலே
என்னோடே பேசி எதிர்த்தான் காணீசுரரே
ஆனதா லிப்பிறப்பு அரக்க னிவன்தனக்கு
ஈனமில்லாச் சிரசு ஈரஞ் சாய்ப்படையும்
பத்துச் சிரசும் பத்துரண்டு கண்காதும்
தத்துவங் களோடே தான்படையு மென்றுரைத்தார்
மாய னுரைக்க மறையோ னகமகிழ்ந்து
வாய்சிரசு பத்தாய் வகுத்தார்கா ணம்மானை
கூடப் பிறக்கக் குண்டிலிட்ட ரத்தமதை
வாட அரக்கர் குலமாய்ப் பிறவிசெய்தார்
அப்போ படைக்கும் அவ்வளவில் மாயவனார்
மெய்ப்பான மேனிதனில் வியர்வை தனையுருட்டி
விபீஷண னென்று மெய்யுருவந் தானாக்கிக்
கவுசலமா யரக்கன் தம்பியெனக் கருத்தாய்க்
கூடி யிருந்து அரக்கன் குறியறிந்து
வேடிக்கை யாக வீற்றிரென்று தானுரைத்தார்

இராவணன் வரம் வேண்டல்

பத்துத் தலையான பாவி அரக்கனவன்
மற்று நிகரொவ்வா வாய்த்தபர மேசுரரை
வணங்கி வரம்வேண்ட மனதிற் பிரியமுற்று

இணங்கியே ஈசர்பதம் இறைஞ்சிநின்றா னம்மானை
தவத்தருமை கண்டு தலைபத்தெரக்கனுக்கு
சிவ தலைவரானோர் செப்புவார் அம்மானை
காதுரண்டு பத்து கண்ணிடுவது உள்ளோனே
ஏதுவரம் வேணும் இப்போது சொல்லும் என்றார்
அப்போது ஈசுரரை அரக்க னவன்வணங்கி
இப்போது ஈசுரரே யான்கேட்கு மவ்வரங்கள்
தருவோ மெனவே தந்தி முக வ ன்பேரில்
உருவா யெனக்கு உறுதிசெப்பு மென்றுரைத்தான்
அப்படியே ஈசர் ஆணையிட்டுத் தான்கொடுக்க
சொற்படிகேட் டேயரக்கன் சொல்லுவா னப்போது
மூன்றுலோ கத்திலுள்ள முனிவர்தே வாதிகளும்
வேண்டும்பல ஆயுதமும் விதம்விதமா யம்புகளும்
வீரியமாய் நானிருக்கும் வி ட்ட கோட்டைசுற்றி யந்த
சூரியனுஞ் சந்திரனும் சுற்றியது போய்விடவும்
சிவனா ரொருகோடி செய்ய வரந்தரவும்
புவனம் படைக்கும் பிரம்மா வொருகோடி
உமையா ளொருகோடி உற்ற வரந்தரவும்
இமையோ ரரைக்கோடி இப்படியே உள்ளவரம்
மூணரைக் கோடி உள்ளவர மத்தனையும்
தாணரே எந்தனற்கு தாரும் என்றான் அம்மானை
துடுக்கனிவன் கேட்ட சுத்தவரமத்தனையும்
கொடுக்கு மளவில் குன்றெடுத்தோன் தன்தேவி
அலைமேல் துயிலும் அச்சுதனார் தன்தேவி
சிலைவே லெடுத்துச் செயிக்கவல்லான் தன்தேவி
அலங்கா ரமாகி அன்னைப் பொழுததிலே
கலங்கா தான்தேவி கயிலைஉமை யாளருகே
மணிமேடை தன்னில் மகிழ்ந்திருக்கு மவ்வளவில்
கெணியா மலேயரக்கன் கெடுவ தறியாமல்
அம்மை தனைக்கண்டு அயர்ந்து முகஞ்சோர்ந்து
கர்ம விதியால் கைமறந்து நின்றனனே
நின்ற உணர்வை நெடிய சிவமறிந்து
அன்றந்த அரக்கனுக்கு ஆதிவரங் கொடுத்து
கேட்ட வரங்கள் கெட்டியாய்த் தான்கொடுத்து
நாட்ட முடன்சீதை நகையா லழிவையென்று
இரக்கமில் லான்கேட்ட ஏற்றவரங்க ளெல்லாம்
அரக்க னவன்தனக்கு ஆதிமிகக் கொடுத்தார்
ஆதிகொடுத்த அவ்வரங்க ளத்தனையும்
நீதியில் லான்வேண்டி நெடியோன் தனைவணங்கிக்
கொண்டுபோ கும்போது குன்றெடுத்த மாயவனார்
கண்டு மறித்துக் கௌசலமிட் டேமாயன்
அரைக்கோடி வரமாய் ஆக்கிவிட்டார் மாயவரும்
சரக்கோடி மூணும் தான்தோற்றுப் போயினனே

விருத்தம்

ஆதியை தொழுது போற்றி அரக்கனும் வரமும் வேண்டி
சீரிய சீதையாலே சீவனுக்கு, இடறும். பெற்று
வாரிய மூணு கோடி வரமது தோற்றுப் பின்னும்
மூரியன் மூணு லோகம் முழுதுமே யடக்கி யாண்டான்

விளக்கம்:-

ஆதி நாராயணர் ஆதி சிவன் இடம் செல்ல செந்தூர் பதியை விட்டுப் புறப்பட்டார். கைலாயம் சென்றுச் சிவபெருமானை வணங்கித் திருவாய் மலர்ந்து உரைப்பார். சூரபத்மனையும் அவனுடையக் குறையும் இல்லாமல் அழிந்து விட்டேன். மறுபடியும் அதேக் கிரேதாயுகத்தில் அவனை இரணியனாகப் பிறவி செய்து அவன் ஆணவத்தை அடக்க அவனுக்கு மகனாக பிறந்து அவனுடைய மமதையும் அடக்கி அவனையும் சங்காரம் செய்து கிரேதா யுகத்தையும் அழித்து முடித்தேன் என்றார்.

அது கேட்ட சிவபெருமான் திருமாலே! நீடிய யுகத்தில் தோன்றிய குறோணியின் துண்ட மதில், மூன்று துண்டம் பிறவிச் செய்து அழித்து விட்டோம். இன்னும் மூன்று துண்டம் மீதம் உள்ளது என்று சொன்னது கேட்ட திருமாலும் கைலாசத்தில் உள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து திட்டமிட்டார்கள். அந்த மூன்று துண்டமதில் ஒரு துண்டை எடுத்து அதற்கு உயிர்கொடுக்க நினைத்தார்கள்.

பிரம்மா பிறவிச் செய்தார். சிவன் உயிர் கொடுத்தார். அதைக்கண்ட நாராயணர் அனைவரிடமும் சொல்வார். கிரேதா யுகத்தில் சூரபத்மனாகவும், இரணியனாகவும் பிறப்பு எடுத்த போது என்னையும் என் வீரத்தையும் இழிவாகப் பேசினான். எனவே மீண்டும் கர்மவினையை தொலைக்க இனி மேல் அரக்கனாக பிறகும் அவனுக்கு நான் யார் என்பதை தெரிவிக்க பத்துத் தலைகளையும் இருபது கையுமாக அவன் பிறப்பு எடுக்க வேண்டும். வீரமிக்க தத்துவங்களோடு விளங்கும் அவனை என் இரு கைகளால் கொன்று ஒழிப்பேன் என்றார். அவர் உரை கேட்ட சிவனார் மாய பெருமாள் கூறியபடி பத்துத் தலைகளோடு இருபதுக் கையுமாய் இராவணனை பிறவிச் செய்தார்.

திரேதா யுகம்

திரேதா யுகமும் தோன்றியது. இராவணனுக்கு தம்பியாக பிறவி செய்ய ஒரு குழியில் இருந்த இரத்தத்தை படைக்க சொன்னார் திருமால். அந்த இரத்தமானது துஷ்ட சிந்தனையுள்ள அரக்கக் குலமாய் செயல்பட்டு உயிர்த்தன்மை அடைந்தது. அதில் கும்பகர்ணன் உருவானான். விசுவரசு என்பவனுக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி சளி என்பாளுக்கு குபேரனும், இரண்டாவது மனைவி கைகேயி என்பவளுக்கு இராவணனும் பிள்ளைகளாக பிறந்தனர். வைகுணடத்தில் துவார பாலகர்களாக இருந்த ஜயன், விஜயர்கள் திரேதாயுகத்தில் இராவணன், கும்பகர்ணன் ஆக பூமியில் பிறந்தார்கள்.

அடுத்ததாக மாய பெருமாளின் சத்திய நெறியான பொன்மேனி உடம்பிலுள்ள வியர்வையின் அழுக்கை, உருட்டித் தத்துவரீதியாக உத்தம குணமுடைய விபீஷணன் என்னும் நேர்மையான வனையும் தம்பியாகப் படைத்தார். அவனால் தனக்கு நன்மை வரும்படியான நல்ல குணம் பெற்று இராவணனுக்கு தம்பியாக இருக்கும்படி செய்தார். பத்துத் தலைகளை உடைய அரக்கன் இராவணன், பாவச் செயல்களைச் சிந்தனையாகக் கொண்டுப் பேராசையுடன் தவம் செய்து வரம் வேண்ட எண்ணம் கொண்டான்.

மனிதனுக்கு மூன்று குணங்கள். அவை சத்வகுணம், ரஜோ குணம், தாமச குணம் என்னும் முக்குணம். இராவணன் போகமும், ஆசையும், ஆற்றலும் கூடிய ரஜோ குணம் உள்ளவன், தமோ குணமாயிருப்பவன் கும்பகர்ணன். தூக்கமும் பெரும் தீனியும் அடிப்படையாக கொண்டவன். தூயக் குணம் கொண்டவனும் தூய வாழ்வுக்குத் துணையாய் இருப்பவனும் விபீஷணன் சத்வ குணம் கொண்டவன். இராஜோ குணமே வடிவெடுத்தவன் இராவணன்.

போகத்தில் அதிக பற்று வைத்தவன். அவனுக்கு அமைந்த பத்து தலைகளும் அவன் ஆசைக்கு ஏற்றவாறுக் கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஞானேந்திரியங்கள் ஐந்துமாய் பத்து இந்திரியங்களும் சேர்ந்து பத்துத் தலைகளாக உருவாக்கப் படுத்தப்பட்டது.

இராவணன் வரம் வேண்டல் :

பேராசை கொண்டக் இராவணன் சிவபெருமானை நோக்கித் தவம் இருந்தான். தவ மூலப் பொருளாகிய சிவன் இராவணனின் தவ தன்மையை கண்டு மனம் குளிர்ந்த நிலையில் இராவணனிடம் நீ கேட்கும் வரம் நான் தருவேன் என்ன வரம் வேண்டும் என்றார். சிவபெருமான் சொன்னதும் அதைக்கேட்ட இராவணன் நான் கேட்கும் வரங்களை உறுதியாகத் தருவேன் என்று யானை முகம் கொண்ட கணபதி மேல ஆணையிட்டு கூற வேண்டும் என்றான். இராவணன் கேட்டபடி சிவபெருமான் தன் மகன் கணபதி மேல் ஆணையிட்டு நீ கேட்கும் அனைத்து வரங்களையும் தருவேன் என்றார். கொடியவனான இராவணன் எனக்குச் சாகாவரம் வேண்டும் என்று முதலில் கேட்டான். மும்மூர்த்திகளாலும், தேவர்களாலும், அசுரர்களாலும், எந்த சக்திவாய்ந்த ஆயுதங்களாலும் எனக்கு அழிவே இல்லாத வரம் தரவேண்டும்.

இராவணன் பேராசையோடு சூரிய பகவானும், சந்திர பகவானும் என்னை சுற்றி வணங்க வேண்டும். சிவனே நீர் எனக்கு ஒரு கோடி வரம் தரவேண்டும். பிரம்மா ஒரு கோடி வரம் தரவேண்டும். உமையவள் ஒரு கோடி வரம் தரவேண்டும். இமையோர் அரைக்கோடி வரம் தர வேண்டும் என்றான். இப்படியாக தேவர்களிடமும் மற்றும் உள்ள அத்தனை பேர்களிடமும் அவன் வாங்கிய வரம் மூணரை கோடியான வரமாகும். அத்தனையும் சிவன் தந்தேன் என்றார்.

இப்படி மூன்றரைக்கோடி வரத்தை அவன் பெற்று வரம் பெற்றக் களிப்பில் நிற்கின்றபோது, கைலையில் எல்லோரும் அமர்ந்து இருக்கின்றபோது, லெட்சுமி தேவி அழகாக தன்னை அலங்கரித்துக் கொண்டு அம்மை உமையவள் அருகில்

வந்து அமர்ந்தார். இதைப் பார்த்தான் இராவணன். அன்னை லெட்சுமி தேவியின் அழகில் மயங்கித் தன்னை மறந்து நின்றான். இதைப் பார்த்தச் சிவப்பெருமான் சீதையின் நகையால் அழிவாய் என்று சாபமிட்டார். ஆனால் ராவணன் இதையும் வரமாக ஏற்றுக்கொண்டு வந்தான்.

இவ்வாறு இராவணன் அதிகப்படியான வரங்களை பெற்றதாலும் திருமாலின் மனைவியாகிய மகாலட்சுமியின் அழகு கண்டு மெய்மறந்து மயக்கம் கொண்டதாலும், சிறப்பு பெற்ற சீதையால் இவன் அழிவான் என்று வரமாய் சாபத்தையும் கொடுத்தார். பேராசையாலும் பெண்ணாசையாலும் இவன் அழிவான் என்றார்.

நீதி நேர்மை இல்லாத கொடும்பாவி இராவணன் வரத்தை வாங்கிக் கொண்டு பூலோகத்திற்குச் செல்லும் பொழுது அவனை வழிமறித்து மனதை சஞ்சலம் அடைய வைத்து, மாய வேலையைச் செய்து மாய பெருமாள் தந்திரத்தால் மூன்று கோடி வரங்களையும் வஞ்சகமாகப் பிரித்துக்கொண்டு அரைக்கோடி வரமாகக் குறைத்து விட்டார். இராவணன் வாங்கிய மூன்று கோடி வரங்களை வரும் வழியில் தொலைத்து விட்டதால், பேராசையால் சிவபெருமானிடம் தன் அழிவிற்கான சாபத்தை பெற்றதாலும் என்ன செய்வதென்று தெரியாமல் மூர்க்க குணம் படைத்த இராவணன் கோபம் கொண்டான். கையில் கிடைத்த அரைக்கோடி வரத்தைக் கொண்டு பூலோகத்தில் வந்து ஆட்சிச் செய்தான்.

## Day 20

### இராவணன் கொடுமை

முக்கோடி வரத்தை உச்சிக்கொண்டார் மாயவரும்
அக்கரைக் கோடி அரக்கன்வரம் கொண்டேகித்
தேவரையும் மூவரையும் தேவேந்திரன் வரை யும்
நால்வரையும் வேலை கொண்டு நாடள் வார் அம்மானை
வாசுஅரக்கன் மணிமேடை தூராட்டால்
வீசுவேன் வாளால் வெட்டுவேன் பாருவென்பான்
வருணனவன் மேடைவந்து தெளியாதிருந்தால்
மரணம்வரும் வரையும் வல்விலங்கில் வைப்பேனென்பான்
சந்திரருஞ் சூரியருஞ் சாய்ந்துமிகப் போகாட்டால்
சந்துசந்தாக சரத்தாலறுப்பே னென்பான்
தெய்வ மடவார்கள் திருக்கவரி வீசாட்டால்
கைவரைந்து கெட்டிக் கடுவிலங்கில் வைப்பேனென்பான்
நாலுமறையும் நல்ல ஆறுசாஸ்திரமும்
பாலுக்குடஞ் சுமந்து பணிந்து முன்னில்லாவிட்டால்
அஸ்திரத்தால் வாந்து அம்மிதனில் வைத்துரைத்து
நெற்றிதனில் பொட்டிடுவேன் நிச்சயமென் பானரக்கன்
வானவர் களெல்லாம் மலரெடுத் தென்காலில்
தானமது பண்ணி தாழ்ந்து நில்லாதேயிருந்தால்
சாகும் வரைக்கும் தடியிரும்பி லிட்டவரை

வேகும் படிக்கு வேள்விதனிலிட் டிடுவேன்
மாமறலிமூவர் வந்தென் சொல்லை கேளாட்டால்
காமனையும் ஈசன் கண்ணாலெரித்ததுபோல்
என்னுடையக் கண்ணால் எமனையுங் காலனையும்
உன்னுடைய வல்ல தூதனையும் நானெரிப்பேன்
இவ்வுல கத்திலுள்ள ராசாதி ராசரெல்லாம்
முவ்வுகமுங் கப்பமிங்கே முன்னாடித் தாராட்டால்
நெருப்பெடுத் திட்டிடுவேன் நேரேகொண்டு வாராட்டால்
எரிப்பேனோர் அம்பால் ராசாதி ராசரையும்
இப்படியே பாவி இந்திரலோகம் வரையும்
அப்படியே அரக்கன் அடக்கியர சாண்டிருந்தான்
அப்படியே அரக்கன் ஆண்டிருக்கும் மன்னாளில்
முப்படியே விட்டகுறை முடிவாகும் நாளையிலே
தேவாதிதேவர் தினம் ஏவல் செய்திடவே
மூவாதிமூவர் ஊழியங்கள் செய்திடவே
முர்க்கமதால் பாவி ஊழியங்கள் கொண்டதினால்
பொறுக்க முடியாமல் பூலோகத்தார் களெல்லாம்
தெய்வ ஸ்த்திரீயும் தேவாதி தேவர்களும்
அய்யா திருமாலுக் கபயம் அபயமென
அபயமிடும் மொலியை அச்சுதருந் தானமர்த்தி
கபயமிடு வேதன் கயிலையது தானேகி
ஆதிபரமன் அடியை மிகப் போற்றி
சோதித் திருமால் சொல்லுவா ரம்மானை
பத்துத் தலையுடைய பாவி யரக்கனுக்கு
மற்றும்பல கோடி வரங்கள் மிகயீந்த்தினால்
தேவரையும் மூவரையும் தேவேந் திரன்வரையும்
நால்வரையும் வேலைகொண்டு நாடாண்டா னம்மானை

## தேவர்கள் முறையம்

ஆனதால் தேவர் அரிக்கே முறையமிட
ஈனமாய்க் கேட்டு இருக்க முடியுதில்லை
பள்ளி யுறக்கம் பரிவாய் வருகுதில்லை
தள்ளினால் தேவரையும் தற்காப்பா ராருமில்லை
என்ன வசமாய் எடுப்போஞ் சொரூபமது
தன்னிகரில் லாதவனே சாற்றுவீ ரென்றனராம்
மாய னுரைக்க மறையோ னகமகிழ்ந்து
தூயவரு மங்கே சொல்லுவா ரம்மானை
பாவி யரக்கனுக்குப் பண்டுநா மீந்தவரம்
தாவிப் பறிக்கத் தானாகா தென்னாலே

## இராமாவதாரம்

என்றரனார் சொல்ல எம்பெருமா ளச்சுதரும்
அன்றெம் பெருமாள் ஆலோ சனையாகி
என்னை மகவாய் எடுக்கத் தசரதரும்

முன்னே வரங்கேட்டு உலகி லவரிருக்க
அன்னுகத்தி லுள்ள அரசன் தினகரனும்
பொன்னு திருவைப் பிள்ளையென வந்தெடுக்க
நெட்டையா யரசர் நெடுநாள் தவசிருக்க
சட்டமதைப் பார்த்துத் தானனுப்பு மீசுரரே
பின்னும் பெருமாள் பெரியோனைப் பார்த்துரைப்பார்
முன்னு முறையாய் முறைப்படியே தேவரையும்
வானரமாய்ப் பூமியிலே வந்து பிறந்திருக்கத்
தானவரே யிப்போ தான்படைக்க வேணுமென்றார்
ஏவலா யென்றனுக்கு இப்பிறப் பானதிலே
காவலா யென்றனுக்குக் கைக்குள்ளே நிற்பதற்குப்
பள்ளிகொண்டு நானிருந்த பாம்புரா சன்தனையும்
வெள்ளிமணி மெத்தையையும் வீற்றிருக்கு மாசனமும்
இம்மூணு பேரும் என்னோ டுடன்பிறக்கச்
சமூலப் பொருளே தான்படையு மென்றுரைத்தார்
மாய னுரைக்க மறையோ னகமகிழ்ந்து
தூயவரு மந்தப் படியே தெளிந்திருக்கப்
படைக்கும் பொழுதில் பரதேவ ரெல்லோரும்
அடைக்கலமே மாயன் அடியெனத் தெண்டனிட்டார்.

இராம அவதாரம்:

விளக்கம்:-

பூமியிலே, சூரிய வம்சத்தினைச் சேர்ந்த தசரத சக்கரவர்த்தி என்பவர் அயோத்தியை ஆண்டு வந்தார். அவருக்கு கோசலை, சுமித்திரை, கைகேகி என மூன்று மனைவிகள். நீண்ட காலமாக மூன்று பேருக்கும் குழந்தைகள் இல்லாததால் புத்திர காமாட்சி யாகம் செய்து மூவரும் குழந்தைப் பாக்கியம் பெற்றுக்கொண்டனர். கோசலைக்கு மகாவிஷ்ணுவின் அம்சமாகிய ராமனும், சுபத்திரைக்கு சேஷசம்சமாக இலட்சுமணனும், சங்கின் அம்சமாக சத்துருக்கனும், கைகேயிக்கு சக்கரத்தாழ்வார் அம்சமாக பரதனும் பிறந்தனர்.

நான் அடிக்கடி பூலோகத்தில் சென்று பிறப்பு எடுத்தால் வைகுண்டத்தில் திருமகள் மகாலட்சுமியும் தனிமையாகத் தவிக்கிறாள். ஆகையால் எங்கள் இருவரையும் இந்த திறேதாயுகத்தில் தசரத சக்கரவர்த்திக்கு மகனாக என்னையும், ஜனக மகாராஜாவுக்கும் மகளாக மகா லட்சுமியையும் பிறவிச் செய்ய வேண்டும். இராஜாக்கள் இருவருக்கும் பிள்ளைகள் இல்லா கவலையும் தீரும். திருமகளுக்கும் மனக்கலக்கமும் மாறும் என்றார்.

ஈஸ்வரரே! நியாயத் தீர்ப்புச் சட்ட ஆகமத்தைச் சரியாகப் பார்த்துப் பிரம்மாவிடம் நான் கூறியதுபோல் பிறவிச் செய்ய சொல்ல வேண்டும். ஆதிகாலத்து நீதிப் படி, தேவர்களையும் எனக்கு உதவ வானரங்களாகப் பிறவிச் செய்ய வேண்டும். இராவணனை அழிக்க எனக்கு குரங்குப் படைகள் வேண்டும். ஆகையால் தேவர்களை பலம் பொருந்திய குரங்குப் படைகளாக்க வேண்டும்.

நான் பள்ளி கொண்டிருக்கும் ஐந்து தலை நாகமாகிய ஆதி சேடனையும், வெள்ளி மணியால் கோர்த்த மெத்தையையும், நான் மனமகிழ்ந்து அமரும் சிம்மாசனத்தை யும் என் உடன் பிறப்புகளாக பிறக்க செய்ய வேண்டும் என்றுத் திருமால் திருவாய் மலர்ந்தருளினார்.

## Day 21

தெண்டனிட்டுத் தேவரெல்லாம் செப்புவா ரம்மானை
மண்டல மெங்கும் மயமாய் நிறைந்தோனே
எங்களை லோகமதில் இப்போ படைப்பீரால்
மங்களமா யுள்ள வலுவும் பெலமதுவும்
ஆயனுக்கு நாங்கள் அடிபணிந் தேவல்செய்ய
நேயனே நீரும் நெறியாய்ப் படையுமென்றார்
ஈசர் மகிழ்ந்து இப்படியே தான்படைக்க
வாசத் தசரதரும் வந்து தினகரரும்
மகவாசை யுற்று மகாபரனைத் தானோக்கி
அகப்பாச மற்று அதிகத் தவமிருந்து
நாத னறிந்து நன்மறையைத் தான்பார்த்து
பாத னரக்கன் பத்துச் சிரத்தானைத்
தேவர் துயரமறத் திருமால் தசரதற்கு
மூவ ருடன்கூடி உலகமதி லேபிறக்க
அரக்கர் குலமறவே அம்மைசீதா லட்சுமியை
இரக்கம்போ லுள்ள ஏற்ற தினகரற்கு
மகவாய்ப் பிறக்க மறைதான் விதித்தபடி
செகமீதில் ஞான சிருஷ்டி சிவமயமாய்
இப்படியே வேதத்(து)எழுத்தின் படியாலே
அப்படியே ஈசர் அமைக்கத் துணிந்தனராம்
உடனே தசரதற்கு உற்றதிரு மாலைத்
திடமாய்ப் பிறவி செய்ய எனத்துணிந்தார்
அப்போது ராமர் அய்யா திருமாலை
இப்போ துபடைக்க ஈசுரனார் சம்மதிக்கப்
படைக்கும் பொழுது பரமசிவ னாரை
நடக்குந் திருமால் நாதனைப்பார்த் தேதுரைப்பார்
அவ்வுலகி லென்னை அதிகத் தசரதற்கு
இவ்வுலகு விட்டங்(கு) என்னைப் பிறவிசெய்ய
வந்த விபரம் வகைவகையா யீசுரரே
என்றனக்குத் தானமைத்து என்னை யனுப்புமென்றார்
மாய னிதுகேட்க மறையோ னகமகிழ்ந்து
தூயவரு மங்கே சொல்லுகிறா ரம்மானை
பரலோ கமென்ற பைம்பொன் கயிலையதில்
சாலோ கந்தன்னில் தானிருந்த மாமுனிவர்
துசுவீசு மாமுனியும் சுகசீல மாமுனியும்
விசுவாச மாயிருந்து விசாரம திட்டனராம்
வாருந் துசுவீசு மாமுனியே நீர்கேளும்

நீரும் நாமுங்கூடி நீணிலத்தில் போயிருந்து
நானுமொரு பெண்மதலை நல்ல மகவாகத்
தானுமோ ராண்மதலை தலைவன் தனைவாங்கிச்
சம்மந் தமாகித் தானிருந்து நாடாண்டு
உம்மந் தமான உதவிபெற வேணுமென்று
இருபேரு மிருந்து எனைநினைந்து மாமுனிவர்
உருவேற்றி வேள்வி ஓம மதுவளர்க்க
இந்தப் படியே இவர்களிரு மாமுனியும்
எந்தன் தனைநோக்கி இருந்தார் தவசுகண்டீர்

குறு முனி சாபம்

அல்லாமற் பின்னும் அரக்கன்ரா வணன்தனக்குக்
கொல்லாமற் கொல்லவொரு குறுமுனிவன் சாபமுண்டு
அரக்கன் வரம்வேண்டி அவன்போகு மவ்வளவில்
இரக்கமாய் மாமுனியும் இருந்தான் தவசதிலே
தவசுநிலை பாராமல் தலைபத் தரக்கனுந்தான்
பவிசு மதமாய்ப் படுவ தறியாமல்
முனியையவன் காலால் ஒத்தினான் மாபாவி
அநியாயப் பாவி அரக்க னவன்றனக்குக்
கூறினான் மாமுனியும் கொள்ளைகொண்டச் சாபமது
தூறின சாபத் துல்லியத்தை நீர்கேளும்
மாலை மிகப்போற்றி வாய்த்ததவம் நிற்கையிலே
காலெடுத்து ஒத்தினையே கள்ளாவுன் றனக்கு
இந்தத் தவசுதனில் ஈசுரரைத் தானினைந்து
உந்தன் தனையறுக்க ஒருராம பாணமது
வந்து பிறந்திடவும் மாய னதைத்தானெடுத்து
உந்தனுட மார்பில் ஊடுரு வவிடவும்
துசுவீசு மாமுனிவன் தசரதராய்ப் பூமிதனில்
பிறந்து இருந்திடவும் பின்னுஞ் சுகசீல
மாமுனியும் தினகரராய் வந்து பிறந்திடவும்
வேமுனிக்கு லட்சமியும் வில்லோ டுதித்திடவும்
இராமபா ணத்தோடே இராமர் தசரதற்கு
முராகமத் தின்படியே உலகி லுதித்திடவும்
பாணமது தன்னாலும் பத்தினிதன் கற்பாலும்
நாணங்கெட் டரக்காவுன் நல்லதலைப் பத்திழந்து
சேனைத் தளமிழந்து சிரசிழந்து வாழ்விழந்து
வானரங்கள் வந்துன் வையகத்தைச் சுட்டழித்து
உன்சடல மெல்லாம் உழுத்துப் புழுப்புழுத்துத்
தன்சடலப் பட்டுச் சண்டாளா நீ மடிவாய்
வேண்டுவேன் தவசு விமலன் தனைநோக்கி
ஆண்டுபன்னி ரண்டாய் அவன்றவசு நின்றனனே
நின்ற தவத்தின் நிலைமையறிந் துமையாள்
அன்றைக்கு வந்து அருளினா ளாயிழையும்
உரைத்த மொழிகேட்டு உற்ற முனிதனக்குத்
துரைத்தனமா யித்தனையும் சொல்லி விடைகொடுத்தேன்

இப்படியே மாமுனிக்கு ஈந்திருக்கு மிவ்வரங்கள்
அப்படியே துசுவீசு மாமுனியுஞ் சுகசீல
மாமுனியும் நம்மை வருந்திநிஷ்டை செய்யுகிறார்
ஒமுனிக்கு நல்ல ஒழுங்குசெய்ய வேணுமல்லோ
அல்லாமல் தேவாதி அபயம் பொறுக்கரிது
எல்லா மிதுகண்டு இப்பிறவி செய்யுமென்றார்
நல்லதுகா ணென்று நல்லதிரு லட்சுமியை
வல்லமுள்ள பெட்டகத்தில் வைத்தார்கா ணீசுரரும்
இராமபா ணமதையும் நன்றாய்ப் பிறவிசெய்ய
ஶ்ரீராம யம்பகனும் சிவனும் அகமகிழ்ந்து
என்ன விதமாய் இதுபிறவி செய்வோமென்று
பொன்னம் பலத்தோர் புத்திநொந்து தாமிருந்தார்
ஈசுரரு மப்போ இரத்தின கிரிதனிலே
வீசு பரனும் வேள்வி யதுவளர்க்க
வேள்வி வளர்த்து விமல னுருவேற்றத்
தாழ்வில்லா ஆயன் தற்சொரூபந் தானாகித்
ஆவித்திருமால் அப்போது உபாயமதாய்
சோதித்திருமால் சூரன்தனைசெயிக்க
திருக்கணைக் காலில் செய்ய நரம்புருவி
கருக்கணமாய் ராம பாணக் கணையெனவே
உறுதிகொண்டு வேள்விதனில் விட்டெறிந்தா ரம்மானை
பிறிதிகொண்டு லட்சுமியும் பிலத்த திருக்கரத்தில்
தூண்டு விரலில் துய்ய நரம்புருவி
வேண்டும் பெரிய வீரவில் லீதெனவே
ஆராரு மிந்தவில்லை அம்பேற்றக் கூடாமல்
ஶ்ரீரா மரேற்ற சிந்தித்தா ளம்மானை
உடனேயது வில்லாய் ஓம மதில்பிறக்கத்
திடமாக ராமர் திருக்கணைக்கா லுள்நரம்பு
பாணமதாய் வேள்விதனில் பரிவாயப் பிறந்திடவே
தாணரும் வானோரும் சங்கத்தோ ருங்காண
எல்லோருங் கண்டு இதுகண் மாயமெனவே
வல்லோர்க ளான வாய்த்ததே வாதியெல்லாம்
சங்கடங்கள் தீர்ந்ததென்று சந்தோசங் கொண்டாட
அங்கணங்க ளான அலகைமிகக் கூத்தாட
இராமபா ணத்தாலே இராவண சூரனையும்
ஶ்ரீராமர் சென்று தென்னிலங்கை தன்னிலுள்ள
அரக்கர்குல மறுப்பார் அச்சுதனா ரென்றுசொல்லி
இரக்கமுள்ள தேவரெல்லாம் இரங்கிமிகக் கொண்டாட
வில்லோ டுடன்பிறந்த வீரலட்சு மியெனவே
வல்லோர்க ளாராலும் வந்திந்த வில்லதையும்
வளைத்தோர்க்கு நல்ல மாலைசூட்ட லாமெனவே
தழைத்த சுகசீல தாட்டீக மாமுனியைத்
தினகரராய்ப் பூமிதனில் செய்துவைத்து லட்சமியை
மனோகரமாய்ப் பூமியிலே வைத்தபெட்ட கத்தோடே
வில்லோ டேபிறக்க விமல னருளினராம்
நல்ல துசுவீசு மாமுனியை நாடதிலே
தசரதராய்த் தோன்றவைத்துத் தேசாதி ராசனுக்கு

விசமாலை ராமருமாய் வீரக் கணையோடே
கூடப் பிறக்கக் குன்றெடுத்தார் தான்துயிலும்
நீட அரவணையை நீதலட்சு மணராக்கித்
தலையணை மெத்தையையும் சத்துரு பரதனுமாய்
நிலைவரமாய் ஈசன் நெறியாய்ப் பிறவிசெய்யத்
தேவரையும் வானரமாய்ச் சிவனார் பிறவிசெய்ய
மூவரை யும்பிறவி உள்ளதெல்லாஞ் செய்திடவே
கொடுமுடியாய்ப் பிறந்த கோளிலங்கைப் பாவிகளை
முடியடிவே ரில்லாமல் முழுது மறுப்பதற்கு
வேண்டும் பிறவியெல்லாம் விமல னருளிமிகத்
தாண்டவ சங்காரம் தானிதென்றா ரம்மானை

விருத்தம்

இராவணன் தன்னைக் கொல்ல இராம பாணங்க ளோடே
ஸ்ரீராம ராய்மாயன் தானும் தசரதன் தனக்குத் தோன்ற
விராகன மாது சீதை வில்லுட னுதிக்கத் தேவர்
மராம ரக்குலங் களாகி வந்தனர் புவியின் மீதே

இராவணன் தேவர்களாலும் மும்மூர்த்திகளும் அசுரர்களாலும் எந்த வலுவான ஆயுதங்களாலும் தான் சாகா வரம் வாங்கினானே தவிர மனிதர்களாலும் மிருகங்களாலும் மற்ற உயிரினங்களாலும் சாகக் கூடாது என்று வரம் கேட்கவில்லை. ஆகையால் சிவனிடம் மாய பெருமாள் தன்னை

மனிதனாகவும் தேவர்களை குரங்குகள் ஆகவும் பிறவி செய்யும்படி சூட்சமமாகக் கூறினார்.

அதைக் கேட்ட தேவர்கள் எல்லோரும் சேர்ந்து சிவபெருமானிடம் பெருமாளே! நாங்கள் திருமாலுக்கு உதவிச் செய்யவும் மிகவும் பாதுகாப்புடன் பகவான் நாராயணருக்கு பணிவாய் அன்பு மாறாமல் பணிச் செய்யவும் நல்ல மனமும் நல்ல குணமும் அமையும் படியான வரமும் தர வேண்டும் என்று சிவபெருமானிடம் பணிந்து வேண்டினார்கள்.

மறுபடியும் சிவ பொருளே! வாயு, வருண,சந்திர, சூரிய, நட்சத்திர அக்கினி திரிசங்கு ஆகிய ஏழு மண்டலங்களிலும் நிறைந்து மாயமாய் நிற்கின்ற மறை பொருளே! கடைசிவரை நாங்கள் தளர்ந்து போகாத வலிமையான உடலமைப்பையும் திருமால் சொல்லும் வேலைகளை மரியாதையோடு கடமை உணர்வோடுச் செய்யவும் நீதிநெறி தவறாமல் பணிந்து நடக்கவும் மன உறுதியை தந்து எங்களை பிறவிச் செய்யவேண்டும் என்று வேண்டினார்கள்.

ஈஸ்வர் மிகவும் சந்தோஷம் கொண்டு அவர்கள் விரும்பிய படியே பிறவிச் செய்தார். அவர்களும் பிறவி எடுத்துக் காத்திருந்தனர். பூலோகத்தில் தசரதருக்கும், ஜனகருக்கும் பிள்ளையில்லாக் குறைத் தீர பரந்தாமனாகிய திருமாலை நினைத்து தவம் இருந்ததை மேலேப் படித்தோம். அந்த காலநேரம் இப்போது நிறைவேறும் தருணம் வந்தது.

தவ பொருளாகிய சிவன் அறிந்து ஆகமத்தைப் புரட்டிப் பார்த்து இராவணனால் தேவாதி தேவர்களுக்கு ஏற்பட்டத் துயரத்தைப் போக்க திருமாலாகிய மாயன் தசரத மன்னனுக்கு மகனாகப் பிறக்கச் செய்யவும் அரக்கர் குலத்தை அடியோடு அழித்துவிட அம்மை திருமகள் மகாலெட்சுமியை சீதாலெட்சுமியாக பிறவிச் செய்யவும் ஆகமத்தில் உள்ள விதிமுறைப்படி பிறவிச் செய்தார் ஈஸ்வரர். இதுவே வேத ஆகமத்தில் எழுதப்பட்டுள்ள விதி பயன் என்கிற படியால் எல்லாம் நன்றாகவே நடந்தது.

அப்போது திருமால் கைலாயத்தில் தேவர்கள் பூதகணங்கள் சிவகணங்கள் எல்லோருக்கும் நடுநிலையில் அமர்ந்திருக்கின்ற ஈஸ்வரிடம் சொல்வார், ஆகம விதிப்படி என்னை பூலோகத்தில் பிறவிச் செய்யும் காரணத்தை எல்லோரும் அறியச் சொல்லவேண்டும் ஈஸ்வர பெருமானே! என்று பணிவாய் வணங்கி கேட்டார். பெருமாள் கேட்டதற்கிணங்க ஈஸ்வரர் எல்லோரும் அறியக் கூறலானார்.

பொன்னான கைலாய மலையில், முக்தி நிலை அடைந்த 'துசுவீசு' முனிவரும், ஆரோக்கியத்தை சக்தியாகக் கொண்ட 'சுகசீல' முனிவரும் ஒருவருக்கொருவர் அன்பான நண்பர்களாய் இருந்தார்கள். அவர்களுக்குள் ஒரு வித்தியாசமான எண்ணம் தோன்றியது. நாம் இருவரும் ஒன்றாக சேர்ந்து நீரும் நிலமும் ஆக இருக்கின்ற பூலோகத்திற்கு சென்றே புதிய வாழ்க்கை வாழ வேண்டும்.

சுகசீல முனிவர் எனக்கு ஒரு அழகிய பெண் குழந்தையும் துசுவீச முனிவராகிய உனக்கு ஒரு அழகிய ஆண் குழந்தையும் வேண்டும் என்று சிவபெருமானிடம் வரம் வேண்டி அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்வித்து நாம் நாட்டை ஆளவேண்டும் என்று பேசிக் கொண்டனர். நாம் சம்பந்திகளாக

ஆக வேண்டும் என்று சுகசீல முனிவர் துசுவாச மாமுனியிடம் கூறினார். உடனே அவரும் சம்மதித்து இருபேருமாக சிவப்பெருமானை நினைத்து தவம் இருந்தார்கள்.

அதன்படி யாககுண்டம் வளர்த்து, யாக குண்டத்தின் அருகில் துசுவீசு முனிவரும் சுகசீல முனிவரும் ஒன்றாக அமர்ந்து ஒரே நோக்கத்தோடு ஈஸ்வரப் பெருமானாகிய என்னையேத் தியானித்து வேண்டுதலோடு என் அருளைப் பெற்றார்கள்.

குறுமுனிசாபம்:

அது மட்டுமல்லாது இன்னுமொரு விஷயம் என்னவென்றால் அரக்கனாகிய ராவணனுக்கு, மேலும் ஒரு சாபம் ஒன்று உள்ளது. அவன் சாகாமல் உயிரோடுச் சித்திரவதை அனுபவிக்கும் படியானத் தீமையைச் செய்ததால், முனிவருடையச் சாபம் ஒன்றும் இருக்கிறது. இராவணன் வரம் வேண்டுவதற்காக கைலாயம் நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த சமயத்தில் நாட்டு மக்களுக்கு நன்மைச் செய்ய வேண்டும் என்று குறு முனிவர் தவத்தில் இருந்தார்.

குரு முனிவர் தவத்தில் இருப்பதை மதிக்காமல் பத்துத் தலை இராவணன் ஆணவத்தால் காலால் குறு முனிவரை மிதித்து விட்டான் தன்னை விட பெரியவன் இல்லை என்ற வீரத்தில் அவனுக்கு வரப்போகும் வினையை அறியாமல் குறு முனிவரைக் காலால் மிதித்துத் தள்ளி விட்டான். அதனால் கோபம் கொண்டக் குறு முனிவர் சாபமிட்டார்.

அவர் சபித்தச் சாபத்தின் தன்மையைச் சரிபார்த்துச் சிவபெருமான் திருமாலுக்கு சொல்கிறார். நான் திருமாலை நோக்கி மக்களுக்கு நன்மை மட்டுமே செய்வதற்காகத் தவம் செய்யும் போதுத் தீய எண்ணம் கொண்ட உன் காலால் என்னை மிதித்தாயே கள்ளா? கள்ளம், கபடுள்ள உன்னை நான் விடமாட்டேன். இனி நான் சிவபெருமானை நோக்கி மிகப்பெரியத் தவம் செய்து உன்னை இல்லாமல் ஒழிக்க ராமபாணமாகிய அம்பு ஆயுதமாக நான் பிறக்க வேண்டும்.

மாய பெருமாள் அதை எடுத்து அவர் கையால் உன் மீது அம்பை எய்து விட வேண்டும். தூய்மையைக் குணமாகக் கொண்ட துசுவீசு முனிவர் தசரத மன்னராய் பூலோகத்தில் பிறக்க வேண்டும். ஆரோக்கியத்தை குணமாகக் கொண்ட சுகசீல முனிவரும் மாபெரும் சக்தியோடு ஜனக மகாராஜாவாய் பூலோகத்தில் அவரும் பிறக்க வேண்டும்.

இராம பாணமாகிய அம்பு ஆயுதத்தோடு இராமபிரான் துசுவீசு முனிவராகிய தசரத மன்னனுக்கு மகனாகப் பிறக்க வேண்டும். இது முன்வினை ஆகமத்தின் விதிப்படியே நடந்தச் செயலாகும். இராமனுடைய அம்பு, ஆயுதத்தாலும, சீதாதேவியின் கற்புநெறித் தவறாமையினாலும், இராவணனுக்கு அழிவு நிச்சயம் உண்டு. உன்னுடைய கேடுகெட்ட பத்துத் தலைகளையும் நீ இழப்பாய். வானரப் படைகள் வந்து உன்னுடைய நாட்டைத் தீயால் எரித்து அழிக்கும்.

உன்னுடைய வீர படைகள் ஆணவத்தால் வாழும் வாழ்க்கையும் பத்து தலைகளையும் இழந்து உடல் அழுகி புழு வைத்து உனக்கு மரணம் ஏற்பட்டு சண்டாள பாவியாகிய நீ சாக வேண்டும் என்று சாபமிட்டு மன வேதனையோடு சிவபெருமானை நோக்கி பன்னீரண்டு ஆண்டுகள் தவநிலையில் நின்றார். தீமையை அழிக்கின்றக் குறு முனிவர் நின்றுத் தவம்செய்தத் தன்மையைக் கண்டுக் கேட்டவரம் கொடுத்தோம்.

அதுமட்டுமல்லாதுத் தேவர்களுடைய அபயக் குரலும் என்னால் கேட்டுத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பொறுக்கமுடியாமல் இந்தப் பிறவியை இப்படிச் செய்தோம் என்றார். இதனால் நன்மையானக் காரியம் நடக்கும் என்று நேர்மையான திருமாலுடைய மனைவியான மகாலட்சுமியை குழந்தையாக பிறவிச் செய்துத் தங்கத்தினாலானப் பேழையில் அழகாய் வைத்தார் ஈஸ்வரர்.

ராமருடைய அம்பு, ஆயுதத்தையும் நன்றாகச் செயல்படும் படியாய் பிறவி செய்தார். எல்லோரும் ஸ்ரீ ராம நாமம் நாவினிக்கச் சொல்லுகின்ற அளவில் மாய பெருமாளும் சிவ பெருமானும் எப்படிப்பட்டத் தன்மையோடு இதைப் பிறவிச் செய்வார்கள் என்று சொர்க்கத்தில் உள்ளவர்கள் மனப் போராட்டத்துடன் இருந்ததை அழிந்த உலக நாயகனான ஈஸ்வரர், இரத்தினத்தினால் அலங்கரிக்க பட்ட கைலாய மலையில் யாகம் நடத்த முடிவுச் செய்தார். அவரோடு

முனிவர்களும் மற்றும் உள்ளவர்களும் சேர்ந்து மிகப் பெரிய வேள்வியை வளர்த்தனர்.

யுகம் நன்றாக வளர்ந்ததும் நெற்றிக் கண்ணையுடைய விமலன் மந்திரத்தைச் சொன்னான். மாய தன்மை பெற்ற திருமால் தன்னுடைய மாயத் தந்திரத்தைப் பயன்படுத்தி அவருடைய வலிமை வாய்ந்தக் காலிலிருந்து நல்லக் காரியம் செய்வதற்காக ஒரு நரம்பை உருவிக் கருத்தோடு தக்கச் சமயத்தில் ராமபாண அம்புக்கு நுனி அழகாய் ஆகும்படி அதற்கு மந்திர வாக்கு கொடுத்து சிவபெருமான் வளர்த்த யாகத்தீயில் தூக்கிப் போட்டார்.

திருமால் செய்தது போல் அதற்கு பதிலாக பண்புடைய மகாலெட்சுமியும் லட்சுமிகரமான அவள் கை தூண்டு விரலில் இருந்த சக்தி வாய்ந்த தூய்மையான நரம்பை உருவி எடுத்து அந்த யாகத்தில் போட்டு இது எல்லோராலும் பாராட்டப்பட்ட மிகப்பெரிய வீரவில் ஆகும் படிப் போட்டாள். இந்த வில் பூலோக மனிதர்கள் எவராலும் தூக்கி நாண் ஏற்றி அம்பு செய்ய முடியாத படியும் நாராயணர் இந்த வில்லை வளைத்து நாண் ஏற்ற வேண்டும் என்றுச் சிவபெருமானை மனதில் நினைத்துத் தியானித்தாள்.

அந்தவுடனே லெட்சுமிதேவியின் நரம்பானது வில்லாக உருக்கொண்டு யாகத்தீயில் பிறவி எடுத்து வந்தது. வலிமையான சக்தியைப் பெற்ற திருமால் உடைய திருகாலிலுள்ள நரம்பானது அம்பாக வடிவம் கொண்டு யாகத்தில் இருந்துக் குதித்து எழும்பி வந்ததை அனைவரும் கண்டு அதிசயம் அடைந்தனர். பிரகாசமாய் காட்சியளித்த அம்பையும் வில்லையும் கண்டு சிவபெருமானும் திருமால் உள்பட தேவ தேவர்களும் கண்ணால் கண்டு ஆனந்தம் கொண்டார்கள். திருமாலின் ஸ்ரீ ராம வடிவம் கண்டு நம்முடையத் துயரமும் துன்பமும் எல்லாம் தீர ராமபிரானாக திருமால் அருள் புரிவார் என்று ஆனந்த களிப்படைந்தார்கள். பூதகணங்களும் வலிமையானச் சக்தியுடைய தேவர்களும் இராமபிரானாகிய ராமபாணம் சக்தி வாய்ந்த அம்பினால் இராவணனையும் அவனை சார்ந்தவர்களையும் அழித்து நம்மை காப்பாற்றும் என்று மனம் உருகி வணங்கினார்கள்.

ஸ்ரீ ராமர் தென்னிலங்கை சென்று அரக்கர் குலங்களை அடியோடு வேரறுப்பார் என்று கோஷமிட்டனர். வீரமிக்க வில்லோடு சேர்ந்து பிறந்தாள் வீரலட்சுமி. வில்லோடு பிறந்தவளை வீரம் கொண்ட பலசாலி யாராக இருந்தாலும் இந்த அபூர்வச் சக்தி வாய்ந்த வில்லை வளைத்து ஒடித்து அவர் சீதையை மணம் முடித்து கொள்ளலாம் என்றுச் சொல்லும் விதமாய் அமைந்திருந்தது. இவையெல்லாம் சிவலோகத்தில் அமைந்தக் கதையாகும்.

இனி பூலோகத்தில் பிறப்பு எடுக்கும் கதையை பார்ப்போம், மக்களுக்கு சுக வாழ்க்கையை நல்லபடி கொடுக்கின்ற சுகசீல முனிவரை பூலோகத்தில் பிறவிச் செய்து ஜனக மகாராஜாவாகப் புகழ் பெறச் செய்தார். பின்னர் லட்சுமி தேவியை தங்கப் பேழையில் வைத்தபடிப் பூமியில் வைக்கப்பட்டு இருந்தவளைப் பூலோகத்தில் அபூர்வச் சக்தி வாய்ந்த வில்லோடுப் பிறக்குமாறு விமலனாகிய சிவன் அருள் கொடுத்தார்.

நாடும் மக்களும் தூய்மையாக இருக்க எண்ணம் கொண்ட துசுவீசு முனிவர் பூலோகத்தில் தசரதர் மன்னராய் புகழ்ந்து போற்றி

விளங்குமாறு பிறந்துத் தேசத்தை ஆளும் படி பிறவிச் செய்தார். இவ்வாறு சீரும் சிறப்புடனும் நாட்டை ஆண்டு வரும் நாளில் தசரத மன்னனுக்கு பிள்ளை கலி தீர்க்க சிவபெருமான் வெற்றி மாலைச் சூடும் திருமாலை இராம அவதாரம் செய்துப் பிறவிச் செய்தார்.

வலிமையான சக்கர அம்பே ஆயுதமும் துணைச் செய்யும் என்று வரமும் அருளினார். இராமருக்கு தம்பியாக இலக்குமணன், பரதன், சத்ருக்கன் என்ற பெயரால் விளங்குவீர்கள். அண்ணனுக்கு உற்றத் துணையாவீர். என்று உடன் பிறப்பாய் பாசம் மாறாமல் வாழச் சாகாவரம் கொடுத்துப்பிறவிச் செய்தார். தெய்வ லோகத் தேவர்கள் அனைவரையும் வனத்தில் வாழும் குரங்குகளாய் ஶ்ரீ ராமருக்கு துணையாகி உதவ சிவன் பிறவிச் செய்தார்.

அரக்கன் குலத்தை அடியோடு முழுமையாக அழிப்பதற்கு யார் யார் எப்படித் தேவையோ அப்படி எல்லாம் பிறவிச் செய்து சிவனுடையச் சக்தியையும் கொடுத்து அருள் புரிந்தார். கடலைத் தாண்டி சென்று இராவணனை தாண்டவ சங்காரம் செய்யவும் சக்தியான வரம் கொடுத்தார். திருமால் ஶ்ரீ ராமராக அயோத்தி நாட்டில் கோசலை வயிற்றில் அவதரித்தார். தசரதருக்கு மகனாக பூலோகத்தில் தர்மம் காக்க வந்துப் பிறந்தார். மரத்தில் கொஞ்சி விளையாடும் குரங்குகளைப் பூலோகத்தில் பிறப்பு எடுக்க அருள் புரிந்தார்.

மிதிலை மாநகரில் செழிப்போடு வாழ்ந்த ஜனக மகாராஜாவுக்கு கழனியில் கண்டெடுத்த தங்கத் திருமகள் வீரம் செறிந்த வீர வில்லோடுச் சேர்ந்து பிறந்தாள். பேழையில் இருந்து பிறந்த பெருமகள் நிலமகளாக அவதரித்தாள். மாமலைக் குறைத் தீர்க்க மகாலெட்சுமி வந்து பிறந்தாள். தேவர்கள் எல்லோரும் வானர கூட்டமாய் தென்னிலங்கையை எரியூட்டக் காத்துக் கிடந்தனர்.

புஷ்ப தந்தராகிய சுக்ரீவன் போர் படை வீரனாகி விஸ்வகர்மனுக்குப் படைத் தளபதியாகவும் நல்ல மந்திரியாகவும் இருக்க அருள் செய்தார். பத்துத் தலை இராவணனுக்கு எதிராக இருந்த இராமருக்கு உதவத் தக்கச் சமயம் பார்த்துக் காத்து கிடந்தனர். ஆகமப்படி நூலின் எழுதப்பட்ட முன்வினை கர்மவினைகளை தீர்க்க எல்லோரும் பூலோகம் வந்துப் பிறந்தார்கள்.

இராமருக்கு உடன்பிறப்பாகவும், உற்றத் துணையாக கைகேயிக்கு பரதனும், சுமித்திரைக்கு இலக்குமணன், சத்ருக்கனும் பிறந்து தசரதச் சக்கரவர்த்திக்கு நான்கு புதல்வர்களாய் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருகிறார்கள். மிதிலையில் ஜனக மகாராஜாவுக்குச் செல்வமாய் பிறந்த மகள் சீதை சிறப்பாய் வளர்கிறாள். சீதை குழந்தை பருவத்தைக் கடந்து சிற்றாடைக் கொடுக்கும் பருவமடைந்தாள்.அவளோடு பிறந்த வில்லும் சேர்ந்து வளர்ந்தது. நீண்டு வளர்ந்த திரு ஜடையுமாய் கண்ணழகும், வாய் அழகும், நிமிர்ந்த நடை அழகும், ஒய்யார இடுப்பழகும், உல்லாசச் சிரிப்பும், ஊக்கமான பேச்சும் காண்பவர் கண்ணுக்கு மகாலட்சுமியைப் போல் காட்சிக் கொடுத்தாள்.

இராமனுடைய அழகு நடை, கையில் வில், சூரியப்பேரொளி, சுறுசுறுப்பான செயல்பாடுகள், அருள் சிந்தும் பார்வை, கருணை மொழி கூறும் திருவாய் கமலம் போன்றக் கண்விழி, சங்கு வண்ணன் திருமாலின் கருநீல நிறம்,கைஅழகும், கால்அழகும், அருள் சிந்து மேனி அழகும், செவ்விதழ் திருமுகத்தில் சிந்தும் புன்னகை, கழுத்தில் கனகமணி பொன் நகையும் பூட்டி, பார்ப்பவர் மனம் பரவசப்படும் படியாய் விளங்கினார். அயோத்தி வாழ் மக்கள் இராமரை புகழ்ந்துக் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

## DAY 22

நடை

ஸ்ரீராமருந்தான் ராவணனைச் செயிக்க ஒருவிதமாய்
இராமபா ணத்தோடே நாட்டில் பிறந்தனராம்
தென்னிலங்கை தான்முடிய சீதை சிறையிருக்கப்
பொன்னரிய வில்ல(டு()உடன்பிறந்தாள் பொன்மாது
தேவரெல்லாம் வானரமாய்த் தென்னிலங்கை சுட்டழிக்கப்
பூவர் சுகுமுனிவர் போர்விசுவ கன்மனெனும்
வானரத்துக் கேற்ற மந்திரி தானாகித்
தானவரையு மனுப்பித் தரணிதனி லெம்பெருமாள்
லட்சும ணரெனவே ஏற்றசத்து ருபரதன்
கட்சியுடன் மாயன் கணையோ டுடன்பிறந்தார்
இப்படியே ராவணற்கு எல்லோ ரும்பகையாய்
முப்படியே உள்ள முறைநூற் படியாலே
வந்து பிறந்தார்காண் மாயவரு மம்மானை
சிந்தாக்குலந் தீர்க்க சிணமே பிறந்தனராம்
இப்படியே ராமர் ஏற்ற தசரதற்கு
அப்படியே பிறந்து அங்கிருந்தா ரம்மானை

சீதா கல்யாணம்

சீதை வளர திருவில்லுந் தான்வளர
கோதைக் குழல்சீதைக் கோமான் மிகவளர
சிராமர் பிறப்போர் சிறப்பாய் வளர்ந்திடவே
இராமர் குலங்கள் இரகசிய மாய்வளர
அரக்கன் கொடுமை அண்டமள வேவளர
இரக்கமில்லா பாவி இப்படியே தான் இருக்க
சீதை வளர்ந்து சிறந்த வயதானதிலே
மாதை மணமிடவே மாதா மனதிலுற்றுத்
தன்புரு சனோடே தையல்நின் றேதுசொல்வாள்
அம்பும்வில் லும்வளர ஆயிழையுந் தான்வளர்ந்து
பக்குவங்க ளாச்சே பைங்கிளிக்கு மாலையிட
ஒக்குவ தென்ன உரைப்பீரென் னுத்தமரே
என்று மடமாது ஏற்ற தினகரரை
நின்று வணங்கி நேரிழையுஞ் சொல்கையிலே

வில்லை வளைத்தல்லவோ மெல்லிமணஞ் சூடுவது
வல்ல கலைக்கோட்டு மாமுனியைத் தான்வருத்தி
இன்னபடி யீதென்று எடுத்துரைக்க மாமுனியும்
அன்னப் பொழுதில் அருளுவான் மாமுனியும்
பூரா சமான புவியைம்பத் தாறிலுள்ள
இராசாதி ராசரெல்லாம் இப்போ வரவழைத்து
வில்லை வளைத்தவர்க்கு மெல்லிமணஞ் சூட்டுமென்று
சொல்லியே மாமுனியும் தசரதனார் கண்மணியைக்
கண்டுநின்று மாமுனியும் கண்ணனார்க் கேதுரைப்பான்
பண்டு உனக்குப் பரம சிவனாரும்
வில்வளைத்து மாலையிட விதியில் விதித்திருக்குச்
செல்லந்த மன்னன் தினகரானர் தன்மகட்கு
இன்று கலியாணம் இப்போது அங்குசென்றால்
பண்டு அமைத்த பலனுனக்குக் கிட்டுமிப்போ
என்று கலைக்கோட்டு மாமுனியுந் தானேகி
சென்றான் தினகரரின் செல்வி மணந்தனிலே
அன்றைம் பத்தாறு அரசருக்கு மாளனுப்பி
தேசாதி தேசர் திசைவென்ற மன்னரெல்லாம்
மேசாதி யானோரும் மேவுந்தெய் வேந்திரனும்
இராவண சூரன் இராமர்முத லானவரும்
இராமர்குல சாதி நல்லமன்னர் வந்தனராம்
வில்லை வளைத்து வில்லில் நாண்பூட்டாமல்
முல்லைமன்ன ரெல்லாம் முகம்வாடிப் போயிருந்தார்
இராம ரெடுத்து இராம சரமேற்றி
ஸ்ரீராமர் மணஞ்செய்தார் சீதைத் திருமாதை
மணம் முகித்துவானோர் மங்களகீ தத்தோடே
துணைவர் தலைவரொடு சென்றா ரயோத்தியிலே
அயோத்தியா புரியில் ஆனதம்பி மாரோடும்
கையேற்று வந்த கன்னி திருவோடும்

விளக்கம்:-

இராமருடன் பிறந்த தம்பி மார்களும் மிகவும் உயர்ந்தப் பண்பு உடையவர்களாய் உள்ளங்கையை அழகு செய்யும் விரல்களைப் போல் இராமரை ஒட்டியே இருந்தார்கள். தம்பியர்களின் தன்மை கண்டு இராமர் தந்தை போல் தம்பியர்களிடம் தண்ணருள் புரிந்து வந்தார். அயோத்தி வாசிகள் மிகவும் பாக்கியம் பெற்றவர்கள் ஆகி ஆனந்தமான பேரின்ப நிலையை அடைந்தார்கள்.

தந்தை தசரதர் மக்களைக் கண்டு மகிழ்ச்சியில் மயக்கம் கொண்டார். மன்னன் மகன் இராமரை அவர் உடல் தாங்கி உயிராய் எண்ணி இன்பம் கண்டார். இராமரைச் சேர்ந்த மன்னர்கள் குலமக்கள் அமைதியும் அடக்கமும் உடையவர்களாய் பண்போடு வாழ்கிறார்கள் இன்பமாகக் கொடிய இராவணனுடைய கொடுமையான உலகம் முழுவதும் வளர்ந்துக் கொடும் கனல் வீசுவது போல் மக்களை அச்சுறுத்தியது. காலங்கள் கடந்தன. சீதையானவள் வளர்ந்து மணப்பருவ வயதை அடைந்தாள். சீதையின் தாயான சுனைனா தன்

மகள் திருமண வயதை எட்டுகின்றாள் என்று உள்ளம் பூரித்து ஜனக மகாராஜாவிடம் சொல்ல எண்ணம் கொண்டாள்.

அயோத்தியில் வாழ்ந்து வந்த இராமர், மற்றும் தம்பியராகிய நால்வரும் வசிஷ்ட முனிவரிடம் கல்வி பயின்று வந்தனர். விசுவாமித்திரர் எனும் முனிவர், தாம் செய்ய விருக்கும் யாகத்திணை அசுரர்களிடம் இருந்து காக்க, இராமன், இலக்குமணன் ஆகியோரை அழைத்து சென்றார். அவர்களுக்கு சில மந்திரங்களையும் உபதேசித்தார். யாகம் முடிந்த பின், விசுவாமித்திரர் இரு இளவரசர்களையும் மிதிலைக்கு அழைத்து சென்றார்.

சீதாகல்யாணம்:

கேட்பிரோ மன்னவரே! நமது அன்பு மகள் சீதா சிறுவயது விட்டு பெரியவர்களாக வளர்ந்து விட்டாள். அவளோடு பிறந்த வில்லும் அம்பும் நிகராய் வளர்ந்து வருகிறது. சிற்றாடை உடை உடுத்தி சீதையும் மணப்பருவம் எய்தி விட்டாள். நம் செல்ல மகள் சீதைக்கு திருமணம் செய்து ஆசை பார்க்க வேண்டாமா மன்னவரே! என்றாள். தங்கக்கிளியான சீதா தேவிக்கு தாலித் தரிக்க வேண்டும் என்று சுனைனா ஜனகருக்கு நினைவூட்டினாள்.

சுனைனா நினைவுப் படுத்தியதை ஜனக மன்னர் மனதில் கொண்டு பதில் சொல்வார். சீதையோடு பிறந்த வில்லை வளைப்பவர்களுக்கல்லவா? மகளை மணம் முடித்துக் கொடுப்பது சிறப்பு. ஆகையால் கலைக்கோட்டு முனிவரை வரவழைத்து நாள் பார்த்துக் குறிப்பை அறிந்து செய்வது நல்லது என்றார்.

கலைக்கோட்டு முனிவரை அழைத்து வந்தார்கள். அவர் நன்றாக பார்த்து விபரம் சொல்லுகிறார். சீதையின் பிறப்பு ஜாதகம் சொன்னதை கலைக்கோட்டு முனிவர் சொல்லலானார். இந்த ஜாதகம் மிகவும் தெய்வத்தன்மைப் பெற்றது. செல்வத்தைத் தருகின்ற திருமகள் ஜாதகம் போல் ஜொலிக்கிறது. இந்த ஜாதகப் பலத்தால் தீமை அறிந்து நாடு நலம் பெறும். செல்வம் பொழியும், இலங்கை அழியும், அரக்கர் குலம் அழியும். ஆனால் இந்த ஜாதகம் பொருந்திய சீதாதேவி வாழ்க்கையில் கூடுதல் அனுபவிப்பது வனவாச வாழ்க்கைதான்.

ஆனால் மாலையிடும் மன்னவன் தெய்வீகத்தின் தோய்ந்த வீரமுள்ள அறிவும் அழகும் பொருந்திய ஆண் மகனான தெய்வ அம்சங்கள் பொருந்திய திருமலை போன்ற நிறம் கொண்டவன் சீதாதேவியின் உடன்பிறந்த வீர வில்லை வளைத்து வீரமுடன் மாலையிட்டு மங்களம் தருவாள் என்று கூறினார்.

இதைக்கேட்ட ஜனக மகாராஜாவும் மனைவி சுனைனாவும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்கள். சீதா தேவிக்கு திருமணப் பேச்சு நிகழ்கின்றது. ஐம்பத்தி ஆறு தேசாதித் தேசத்து மன்னர்களுக்கும் ஓலை அனுப்பினார்கள். என் மகள் சீதா தேவியின் உடன்பிறந்த வீர வில்லை வளைப்பவருக்கே என் மகள் சீதை மாலை இடுவாள் என்று பறை அறிவித்தார்கள்.

அறிவிப்பை ஏற்று பல பல நாட்டு மன்னர்களும் வந்துக் குழுமினார்கள். வந்த மன்னர்களிடம் ஜனக மகாராஜா வீரமான அபூர்வ வில்லைக் காட்டி இந்த வில்லை வளைப்பவருக்கே என் மகள் சீதா தேவி மணமகனாக ஏற்று

மாலை இடுவாள் என்றுப் பகிரங்கமாய் சபையில் அறிவித்தார் மன்னன். கலைக்கோட்டு முனிவர் ஜனகருக்கு விபரத்தைக் கூறிவிட்டுச் செல்லும் வழியில் தசரத மன்னரின் புதல்வனான இராமரைப் பார்த்தார். திருமாலின் திருவுருவத்தைக் கண்ணால் பார்த்துக் கனிந்த மனதோடு அருளுவார். இராமா! உன்னுடைய முன்ஜென்மக் கர்மப் பலத்தால் சிவபெருமான் விதித்த விதிப்படி ஜனகர் உடையச் செல்வி பைங்கிளி சீதைக்கு நீதான் வில் ஒடித்து திருமாங்கல்யம் ஊட்டி சீதாராமனாக காட்சித் தரவேண்டும் உடனடியாக நீ அங்குச் செல்லவேண்டும் என்றார்.

தசரதச் சக்கரவர்த்திக்கு சாந்தை என்று ஒரு பெண் மகள் உண்டு. அம்மகளை கலைக்கோட்டு மகா முனிவர் தான் மணம் புரிந்தவர். அம்முனிவர் புத்திர கமேஷ்டி யாகம், அஸ்வமேத யாகம் போன்ற மிகப்பெரிய யாகங்கள் செய்து வெற்றி கண்டவர். சித்சக்தியை தவத்தின் வாயிலாக நன்கு செயல்படுத்தும் வல்லமை கொண்டவர். முறையாக வேதம் ஓதுவதில் வல்லவர். நன்றாக வேதம் அறிந்தவர். யாகத்தை ஆகம முறையிலும், செய்து வெற்றி அடைவதில் நிபுணர். இவர் பார்வையில் ஸ்ரீ ராமபிரான் தெய்வீகப் பொலிவு கண்டு குறிப்பு அறிந்து சொல்லும் திறமையால் திருமகளை திருமணம் புரிய இராமருக்கே விதிப்படி திருமணப் பலன் உள்ளது. உடனேப் புறப்பட்டுபோ என்றுக் கூறினார்.

ஜனக மாமன்னரின் மகள் திருமண ஏற்பாட்டிற்கு முன் அறிவிப்பாக எல்லா நாடுகளுக்கும் செய்திச் சென்றது. அறிவிப்பை ஏற்றுப் பூலோக மன்னர்களும் தேவாதி தேவர்களும் தெய்வர்க்கெல்லாம் தலைவனான தேவேந்திரனும் வந்து சேர்ந்தான். ஐம்பத்தாறு மணவர்களின் அசுரனாகிய இராவணனும் கலந்துக் கொண்டான். அவர்களோடு ஸ்ரீ இராமபிரானும் கலந்துக் கொண்டார்.

அபூர்வமான வீர வில்லை எடுத்து வளைத்து நாண் ஏற்ற முடியாமல் எல்லோரும் திணறினர். இராமர் அந்த வில்லை ஒரு கையால் தூக்கி இராம பானத்தை நான் ஏற்றி வெற்றி பெற்றார். வெற்றிப் பரிசாக திருமகள் சீதாதேவியைப் பெற்றார்.

ஸ்ரீ ராமருக்கும் சீதா தேவிக்கும் சிறப்பாக தேவகானமும் மங்கலக் கீதமும் ஒலிக்க மங்களமாக திருமணம் முடிந்தது. திருமணம் செய்துக் கைப்பிடித்த மனைவி சீதையோடு ஸ்ரீராமர் சீதாராமராக அயோத்தியா பட்டணம் வந்துச் சீரும் சிறப்பும் பெற்று உற்றார் உறவினர்களோடு இனிதே வாழ்ந்து வந்தார்கள்.

## Day 23

ஸ்ரீராமர்வனவாசம்

வாழ்ந்திருக்கும் நாளில் மாதா கைகேசியம்மை
தாழ்ந்தமொழி சொன்னதினால் தம்பி பரதனையும்
நாடாள வைத்து நல்லஸ்ரீ ராமருந்தான்
கூடவொரு தம்பியோடும் குழல்சீதை மாதோடும்
நாடி நடந்தார் நல்லவன வாசமதில்

வாடிவந்து கானகத்தில் வாழ்ந்திருக்கும் நாளையிலே
லட்சுமண ருமங்கே ஏற்றகனி தான்பறிக்கக்
கட்சியுடன் நடந்து காட்டில் மிகப்போகச்
சூர்ப்பநகை தன்மகனும் துய்ய தவசுநிற்க
ஆர்ப்பரவா யீசர் ஆகாசத் தேவழியே
வாளை அயச்சார் வாய்த்தபர மேசுரரும்
தாழ வரும்போது தாமனந்த லட்சுமணர்
கண்டந்த வாளைக் கைநீட்டித் தான்பிடித்துத்
துண்டம் விழஆலைத் துஞ்சிவிழ வெட்டினர்காண்
பட்டந்த ஆலும் படபடெனச் சாய்ந்திடவே
வெட்டந்து வீழ்ந்தான் மீண்டுதிரம் பாய்ந்ததுவே
அரக்கன்தாய் கண்டு அலறி வெகுண்டெழுந்து
இரக்கமில்லாச் சூர்ப்பநகை இலட்சுமண ரைத்தேடி
தேடி ஸ்ரீராமர் சீர்பாதங் கண்டணுகி
நாடியெனைத் தாவுமென்று நாணமில்லா தேயுரைத்தாள்
என்பாரி யிங்கே இருக்கவே வேறொருவர்
தன்பாரி தன்னைத் தான்விரும்பேன் போடியென்றார்
போடிநீ யென்ற புத்திதனைக் கேட்டரக்கி
தேடியே லட்சுமணரைச் சேரவுற வாடிநின்றாள்
உறவாடி நின்ற ஒயிலை யவரறிந்து
பறபோடி யென்று பம்பத்தன மூக்கரிந்தார்
மூக்கு முலையும் முகமும் வடிவிழந்து
நாக்குரைக்க வாடி நாணங்கெட்டத் தீயரக்கி
தன்னுடனே கூடித் தமய னெனப்பிறந்த
மன்னன்ரா வணன்தமக்கு வகையா யுரைக்கலுற்றாள்
காட்டி லொருபெண் கமலத் திருமகள்போல்
நாட்டிலொவ்வாக் கன்னி நான்கண்ட தில்லையண்ணே
உன்றனக்கு ஆகுமென்று உற்றவளை நான்பிடித்தேன்
என்றனுட மூக்கரிந்தோர் இருவருண் டல்லாது
மற்றொருவ ரங்கே வாழ்ந்திருக்கக் கண்டதில்லை
கற்றொ ருவர் காணாது கையிலம்பு காணாது
மருவனைய அண்ணேவுன் வாய்த்த விரலதிலே
ஒருயிறைக்கே வுண்டு உற்றஅவர் தன்னுயரம்
என்றந்த அரக்கி ஈனம்பல துரைக்க
அன்றந்த ராவணனும் ஆகாசத் தேரேறிப்
பிச்சைக் கெனவே புறப்பட்டான் காடதிலே
அச்சமில்லா லட்சுமணர் ஆனஸ்ரீ ராமருமாய்
மானின் பிறகே மனம்வைத்து நின்றிடவே
வானின் செயலால் வானவர்கள் பார்த்திருக்க
லட்சுமியிடத்தில் நாடியே பிச்சையென்றான்
அச்சமில்லா லட்சுமியும் ஆதிமுறைப்படியே
மிக்கான சீதையென மேதையை ஆக்கிவைத்து
அக்கினியானதிலே அமர்ந்திருக்கும் வேளையிலே
அன்றுவரம் வேண்டி ஆதிமேதை ஆனவளும்
நின்று அரக்கனுக்கு நேராகப் பிச்சையிட்டாள்
நாரா யணர்தேவி நல்லதிரு லெட்சுமியை

ஏராத பாவி இலச்சைகெட்டத் தீயரக்கன்
தேரிலே அம்மைதனைத் திருடிக்கொண் டேகினனாம்
பாரிலே வுள்ள பட்சி பறவைகளும்
கண்டு பதறிக் கதறிமிக அழவே
அண்டர் முனிதேவர் எல்லோருந் தாமழவே
மான்வேட்டையாடி மாரீசனை யறுத்துத்
தான்வேட் டையாடும் தகையாலே தம்பியுடன்
வந்தார்காண் லட்சுமியும் வாழ்ந்திருக்கு மண்டபத்தில்
பந்தார் குழலனைய பாவையரைக் காணாமல்
கலங்கி மிகவாடி கண்ணீர் மிகச்சொரிய
மலங்கியே லட்சுமணர் மண்ணிற் புரண்டழுதார்
என்னே மணியே எனைப்பெற்ற மாதாவே
பொன்னே யமுதே பெற்றவளே யென்றழுதார்
இராமர் முகம்வாடி நாயகியைத் தான்தேடி
ஸ்ரீரா மர்கலங்கி சினேக முடனழுதார்
மனுவாய்ப் பிறக்க மனுவுடம்பு கொண்டதினால்
தனுவா னதையடக்கித் தானே புலம்பலுற்றார்
இளையபெருமாளும் லெட்சுமியைக் காணாமல்
மழையைமிகக் காணாத வனப்பயிர்கள் போலேவாடி
அன்ன மயிலோடும் அன்றில் குயிலோடும்
புன்னை மலரோடும் புலம்பி மிகவழுதார்
வன்னமுள்ள யானை வாய்த்தசிங் கத்தோடும்
பெண்ணமுதைக் கண்டீரோ என்று புலம்பலுற்றார்
இப்படியே ராமர் இளைய பெருமாளும்
அப்படியே சொல்லி அழுதழுது தான்வாடிச்
சோலை மரத்தின்கீழ்ச் சோர்ந்து முகம்வாடி
மாலவருந் தம்பி மடிமேல் துயின்றிருக்க
அஞ்சனை யாள்பெற்ற அனுமனதில் வந்தடைய
சஞ்சல மேதென்று சாரதியுங் தெண்டனிட
மின்செறியு மாயன் விழித்தவனைத் தானோக்கிக்
கவசகுண்ட லமணிந்த கார்குத்தா யாரெனவே
உபசரித்துச் சொன்ன உச்சிதத்தைத் தானறிந்து
அய்யரே யென்னை ஆட்கொண்ட நாயகமே
மெய்யரே நீங்கள் மெலிந்திருப்ப தேதெனவே
கேட்க அனுமன் கிருபைகூர்ந் தெம்பெருமாள்
சேர்க்கையுடன் சொன்னார் சீதையுட தன்வளமை
ஏற்கை யாகக்கேட்டு இயலுனுமன் ஏதுசொல்வான்

விருத்தம்

நல்லது அடியேன் கேட்டேன் நானினி வுரைக்கும் வாறு
சொல்லவுங் கேட்பீ ரெந்தன் திருவடை யாளஞ் சொன்னீர்
வல்லவர் தகப்ப னானீர் வரந்தர வேணு மிப்போ
புல்லர்வா ழிலங்கை சுட்டு அம்மையைக் கூட்டி வாறேன்

ஸ்ரீராமர் வனவாசம்

விளக்கம்:-

இராமரின் சிறிய தாயாராகிய கைகேயின் இருவரத்தின் படி அயோத்தி நாட்டைபரதனிடம் கொடுத்துவிட்டுநல்லக்குணமுடையஸ்ரீராமரும் தம்பியாகிய இலட்சுமணனும், பொறுமையும் அமைதியும் குணமாகக் கொண்ட சீதா தேவியும் புறப்பட்டார்கள். வனம் நாடியே நடந்து மணம் வாடி தமிழ்நாட்டில் அப்போதுள்ள வனக்காடுகளில் வாழ்ந்து வருகிற வேளை இலக்குமணன் கனிகள் பறித்து வர மூவரும் பசி போக்கி வருகின்றபோது- அந்த வனத்தில் இராவணனின் கேடு கெட்ட நேரம் தொடங்க ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இலக்குமணன் வழக்கம்போல் சாப்பிட கனிகள் பறிக்க செல்லும் வேளை இடுப்பில் கச்சைக் கட்டி கை வாழும் கையில் கொண்டு செல்வது வழக்கம். அந்த வனத்தில் மரத்தில் கனிகள் பறிக்கும்போது ஒரு வினோதம் இலக்குமணன் கண்ணுக்குத் தென்பட்டது.

இராவணனின் தங்கையாகிய சூர்ப்பனகையின் மகன் சம்புக்குமாரன் கடும் தவம் செய்து நின்றான். ஆண்டுகள் பல கடந்ததால் மரங்கள் அடர்ந்துப் படர்ந்து அவனை மூடிக்கொண்டது. அந்த மரத்தில் பழங்கள் கனிந்து மணம் வீசின. அதைக் கண்ட இலக்குமணன் மரத்தின்மேல் ஏறிப் பழங்களைப் பறித்துக் கொண்டிருந்தான்.

கால் மேலும் தலைகீழாய் தவ நிலையில் இருந்த சம்புகுமாரனுக்கு முக்தி நிலை அடைந்ததால் அவன் தவத்தை மெச்சி சிவபெருமான் அவன் கேட்ட மந்திர வாள் ஒன்றை அனுப்பினார். கீழே இருந்த சம்புக்குமாரனும் கையை ஏந்தினான். மரத்தின் மேலேக் கனிகள் பறித்துக்கொண்டிருந்த இலக்குமணனும் கையை ஏந்தினான்.

இப்படியாக இருவரும் கையை ஏந்திய உடன் கீழே வந்த மந்திர வாள் திரும்ப மேலே சென்றது. இந்த வினோதத்தை கண்ட இலக்குமணன் அதிர்ச்சி அடைந்தான். ஏனென்றால் மரத்தடியில் தவநிலையில் இருந்தவனை இலக்குமணன் அறிந்தான் இல்லை. மேலேச் சென்ற வாளானது சிவபெருமானிடம் சென்று வணங்கி, சுவாமி! இவர் கை ஓங்கியது , நான் யாரிடம் சேர்வது என்றுக் கேட்க சிவபெருமான் யார் கை முன் நிற்கிறதோ அவன் கை சேர்வாய் என்றார்.

மந்திரவாள் மறுபடியும் திரும்பி வர இலக்குமணன் முன் நின்றதால் அந்த கையில் சேர்ந்தது. இலக்குமணன் கையில் மந்திர வாள் கிடைத்ததும் வாள் ஆயுதத்தைக் கூர்ந்து நோக்கினார். அதில் இந்த மந்திரவாள் யார் கைப்பற்றியதோ அவர்கள்அதைச் சோதனைப் பார்க்கவும் என்று வாசகம் இருந்தது. காரணம் அறியாத இலக்குமணன் திகைப்புற்றான். அங்கும் இங்குமாய் பார்த்தான். சுத்துமுத்தும் வேறெதுவும் தென்படாததால் அவன் ஏறி இறங்கிய மரத்தையே கூர்மைச் செய்தான். அம்மரம் சாய்ந்தது. கூடவேத் தலையும், முண்டமும் இரத்தம், சிந்த துடித்துக் கொண்டு விழுந்தது.

மரமும் இரண்டு துண்டாகச் சாய்ந்து விழுந்தது. அசுரனின் உடலும் இரண்டு துண்டாகி துடித்தது. காரணம் தெரியாத இலக்குமணன் கலக்கம் அடைந்தான். மகனின் தவநிலை முடிவடைந்ததை தெரிந்து கொண்ட சம்பு

குமாரனின் தாயான சூர்பனகை ஏறு வண்டிகளில் சோறு கறி வகையுடன் வந்தாள். மகன் மாண்டு கிடப்பதை கண்ட சூர்ப்பனகை கூச்சலிட்டாள்.

அவள் குரல் அந்த வனத்தையே அதிரச் செய்தது. எதிரொலியால் எங்கும் ஒலித்தது. என் மகனைக் கொன்றது யார் என்று அந்த வனத்தில் அலைந்து பார்க்கின்றபோது பர்ணசாலையில் சீதையோடு ராமர் இருந்த அழகை கண்டு மகன் இறந்தத் தகவலைத துறந்து தன்னை மறந்து தன்னை இழந்து நின்றாள். இராமரின் அழகில் மயக்கம் கொண்டு தன்னை அணைத்துக் கொள்ளும் படி வெட்கமில்லாமல் இராமரிடம் வேண்டினாள். காதல் மயக்கத்தில் ஞானம் என்று ஒன்று இல்லாமல், தன்னை கூடுமாறு வேண்டிய சூர்ப்பனகையிடம் இராமர் நான் திருமணமாகி மனைவியுடன் வாழ்பவன். எனக்கு மனைவி இருக்கும்போது வேறு ஒரு பெண்ணையும் நான் நாடேன் என்றார். இராமரின் அழகில் மயங்கிய அரக்கியானவள், காம இச்சை கொண்டு இலக்குமணனிடம் உறவாடும் நோக்கத்தோடு நெருங்கினாள். ஆனால் கோபம் கொண்ட இலக்குமணன் மின்னல் வேகத்தில் அவள் மூக்கையும் காதையும் அறுத்து பங்கம் செய்தான்.

சூர்ப்பனகை மூக்கு அறுபட்டு முக அழகை இழந்து நாணம் கெட்டு உடன் பிறந்தவனான இராவணனிடம்செல்ல இலங்கைச் சென்றாள். சூர்ப்பனகையின் கணவன் இராவணனுக்கு மைத்துனன் ஆவான். எதிர்பாராத விதத்தில் இராவணன் தங்கையின் கணவன் என்றுப் பாராமல் அவனைக் கொன்று விட்டான். தந்தையைக் கொன்ற தாய்மாமனை சூர்ப்பனகையின் மகன் கொல்ல வேண்டும் என்றுத் தான் சிவபெருமானிடம் தவம் இருந்து மந்திரவாள் பெறத் தலை கீழும், கால் மேலுமாய் நின்றான்.

சூர்ப்பனகை இராவணனிடம் விரோதம் கொண்டவள். அந்த நிலையில் பார்த்தாள் எந்த வழியிலும் இராவணனை கொல்லத் திட்டம் போட்டு இருந்தவள். அந்த எண்ணமும் இதில் ஈடேறச் சூழ்நிலை வாய்ப்பாகக் கூடி வந்தது.

பத்து தலை இருபதுக் கையுமாய் இலங்கையை ஆண்டு உலகத்தில் கொடுமைகள் செய்துக் கொண்டிருந்ததாலும் வன்முறையால், அழகு வாய்ந்த கற்புடைய பெண்களை எல்லாம் பலவந்தப்படுத்திக் கவர்ந்திழுத்து வந்துச் சுகபோக வாழ்வில் சுகித்து இருந்தவன். அந்த நினைவை சூர்ப்பனகையானவள் கருத்தில்கொண்டு சீதையின் அழகை வர்ணித்துக் கூறி அதை விரிவுபடுத்தி அவரை அழிவு என்னும் பாதையில் தள்ளும் சூழ்ச்சியால் இராவணனிடம் அங்கு நடந்தச் சம்பவத்தின் உண்மையைச் சொல்லாமல் தந்திரமாக மாற்றிக் கூறினாள். மகன் மரணம் அடைந்த நிலையையும் அவள் இராவணனிடம் கூறினாள் இல்லை.

அண்ணே! நமது இருப்பிடமாக அமைந்திருக்கின்ற தண்டகாருண்ய வனத்தில், தாமரை மலரில் அமர்ந்திருக்கும் மகாலட்சுமி போல் ஒரு பெண் இருக்கிறாள். அவளை உனக்கு தர வேண்டி என்னோடு வா என்று அழைத்தேன். அழகான கட்டிளம் காளையர்கள் இருவர். மன்மதனும் அந்த அழகுக்கு நிகராகர். அந்த இருவரும் அந்த அழகிக்கு காவலாக துணை நிற்கின்றனர். நான் அருகில் சென்றதும் என் மூக்கையும் காதையும் அறுத்து அலங்கோலம் செய்துவிட்டான் என்று இராவணன் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் படியானச் செயலுக்கு அடிக்கல் நாட்டினாள்.

மீண்டும் அவர்கள் வீரத்தையும், உயரத்தையும் இழிவாகப் பேசி இராவணனின் பலத்தையும், பதவியையும் உயர்த்திப் பெருமைப்படுத்திப் பேசி, அவன் அழிவுக்கு வழி காட்டினாள். சூர்ப்பனகையின் கனிவானச் சொல் கேட்ட ராவணன் பெண்ணழகில் மயக்கம் ஏற்பட்டுக் காம வசத்தில் சிக்குண்டான். அவன் அழிவுக்கும், சிவபெருமான் கொடுத்த வரமான சாபத்திற்கும் அதுவே காரணமானது. பெண்ணாசைக் கொண்டான். பேராசைப் பட்டான் . மாரீசன் உதவியை நாடினான். பொன் மானாக சீதையின் முன்பாக விளையாட ஏவினான். பொன்மான்,சீதையின் முன் விளையாடியது. சீதை ராமரிடம் மானைப் பிடித்துத் தருமாறு வேண்டி நின்றாள். அம்மானின் அழகில் சீதை மயங்கி நின்றாள்.

உண்மையில் பொன்மான் ஒருபோதும் இயற்கையால் உண்டாக்கப்பட்டதல்ல, அதைபற்றி யாரு கண்டதோ கேள்விப்பட்டதோ கிடையாது. அதுவும் , தங்கப் புள்ளிகளைக் கொண்டச் சுவர்ண மாயமான். உண்மையில் இப்படி ஒன்று கிடையவேக் கிடையாது. இயற்கையில் இல்லாத சுவர்ண மாயமான மானை, மாயை என்றுக் கருதாமல் உண்மை என்று நம்பி, ஸ்ரீராமரும் பிடிக்கச் சென்றார்.

அண்ட சராசரங்கள் அத்தனையும் காத்திருக்கின்ற விமலன் ஆகிய கருணாகரன், நம்மைக் காப்பாற்றும் கடவுளான ஆதிநாராயண மூர்த்தியும் மதிமயங்கினார். மனித வாழ்வு மிகவும் துயரமானது.மனித பிறவியில் படைக்கும் கர்த்தாவே வந்தாலும் துன்ப சூழலில் சிக்கித் தவிக்க வேண்டியதுதான். இந்த மனித வாழ்வுக்கு விதிக்கப்பட்ட விதி போலும் பக்தர்கள் உட்பட பகவான் வரையிலும் மனித பிறவி எடுத்துள்ள அனைவருக்கும் இன்ப துன்பங்கள் உண்டு என்பது இதன் மூலம் உறுதியாகிறது.

இல்லை இது ஆசையால் ஏற்படும் விளைவாகும் என்பதுதான் உண்மை. ஆசையே துன்பத்திற்கு காரணம் என்று நிரூபணமாகிறது. பொன் மானை துரத்திச் சென்றார் ராமர். மான் ஓடியது மாயமான் மாயமானது. ஓடி ஓடி அலுத்துப்போய் இராமாபாணத்தை ஏவினார். ஆனால் ராமபாணம் ராமரை ஏமாற்றவில்லை மாரீசனை வீழ்த்தியது. மாரீசன் மாய குரலால் ‘லக்ஷ்மணா’ என்றுக் குரல் எழுப்பியது. குரலைக் கேட்ட சீதை இராமனின் குரல் என்று எண்ணி மனம் கலங்கி, அண்ணனாகிய இராமனைக் காப்பாற்ற இலட்சுமணனிடம், வேண்டினாள்.

அப்போது இலட்சுமணன் அண்ணனுக்கு ஒன்றும் நேராது என்றுக் கூறினார். ஆனால் சீதை மனம் சமாதானம் ஆகவில்லை. ஆகையால் அண்ணனைப் பார்த்து வரக் கூறினாள். அப்போது இலட்சுமணன் சீதை இருந்த இடத்தைச் சுற்றி ஒருகோடு வரைந்து, இதைத் தாண்டி வெளியில் வந்து விடாதீர்கள் என்றுக் கூறிக் கொண்டு, இலக்குமணன் சீதையைத் தனியே விட்டு ராமரை தேடி ஓடினான்.

மாயை பெருமான் குரலொலி போல் மாரீசன் குரல் கேட்டு சீதாதேவியை தனிமையில் விட்டு ஓடியதால் துன்பமும் துயரமும் தொடர்ந்து இலட்சுமணரை வாட்டியது. லக்ஷ்மணன் ராமரை தேடி சென்றவுடன் மறைவாய் நின்ற இராவணன் பண்டாரக் கோலம் கொண்டு யாசகன் போல் சீதாதேவியின் முன் தோன்றினான். அப்போது சீதையிடம் யாசகம் வேண்டி நின்றான். அப்போது

சீதைத் தருமம் கொடுப்பதற்காக லெட்சுமணன் தாண்டக்கூடாது என்றுக் கூறியக் கோட்டையைத் தாண்டாமல் அதற்குள் இருந்து பிச்சைக் கொடுத்தாள்.

ஆனால், அப்போது இராவணன் சீதையிடம் தாயே , தருமம் வீட்டிற்குள் இருந்துக் கொடுப்பது முறையல்லத் தாயே ! வீட்டைவிட்டு வெளியில் வந்துக் கொடுப்பதுதான் தர்மம் செய்யும் முறை என்றுக் கூற, சீதையும் வீட்டையும் இலட்சுமணன் இட்டக் கோட்டையும் தாண்டி வெளியில் வருகிறாள். இது தான் தருணம் என்று இராவணன் சீதையைக் கவர்ந்துச் செல்கிறான். மேலோக ஆகமத்தின் விதியின் அமைப்புக் காரணமாகச் சீதையை இராவணனால் கடத்திச் செல்ல முடிந்தது. கூச்சம் இல்லாத கொடும்பாவியை இராவணன் சீதையை கடத்திச் சென்றான்.

யானை பலம் கொண்ட அரக்கனான இராவணன் மகாலட்சுமியின் மறுவடிவமான சீதாதேவியை, திருமாலின் மறு உருவமான ஸ்ரீராமபிரானின் தர்மபத்தினியைத் தொட்டு தூக்கச் சக்தி இல்லாதப் பாவி திருட்டுத்தனமாக சீதையைப் பர்ணசாலையுடன், அப்படியே தகர்த்து எடுத்துப் பறக்கும் விமானத்தில் வைத்து இலங்கைக்கு கொண்டுச் சென்றான். அதைக் கண்ட அந்த வனத்தில் வாழ்ந்த உயிரினங்கள் அத்தனையும் கதறி துடித்தனர். அண்டச்சராசரங்களில் உள்ள முனிவர்களும், தேவர்களும், இது தர்மம் இல்லை அதர்மம் அதர்மம் என்று கலக்கமுற்றனர். மானை வேட்டையாடிப் பிடிக்கச் சென்ற ராமன் மாயமானைக் கொன்றுத் திரும்பி வரும் வேளை, தம்பி லக்ஷ்மணனைக் கண்டுப் பதறினார். சீதையை தனியாக விட்டுவிட்டு ஏன் வந்தாய் என்று பதட்டத்துடன் இருவரும் பர்ணசாலை வந்து சேர்ந்தார்கள்.

ஆனால் அங்கு பர்ணச் சாலையையும் அங்கிருந்த சீதையையும் காணாமல் இருவரும் கலங்கினார்கள். அன்பு மனைவியைக் காணாமல் வேதனைப்பட்டார். இலக்குமணன் தாங்க முடியாமல் தரையில் புரண்டு அழுதான். ரகுராமன் என் கண் போன்றவளே! சீதா! திருமகளே! ஜனகனின் தவப்புதல்வியே! கற்பில் உயர்ந்தவரே!, பண்பு நிறைந்தவளே! சீதா! சீதா என்று வர்ணித்துப் பெயர் சொல்லி அழைத்து வருத்தம் கொண்டார். எங்கு தேடியும் காணாமல் மரங்களிடமும், பறக்கும் பறவைகளிடமும், ஆடுகின்ற மயில்களிடம் கூவிப் பாடும் குயில்கடளிமும், கர்ஜிக்கின்றச் சிங்கத்திடமும், மதம் கொண்ட யானைப் போல் மனம் கலங்கிக் கேட்டுக் கேட்டு அழுதார். இதுபோன்ற அன்பு வார்த்தைகளைப் பேசி ராமரும், லட்சுமணரும் அழுது, உடலும், உள்ளமும் வாடினார்கள்.

எங்கு தேடியும் காணாமல், உள்ளமும் தவித்தால் களைத்து ஒரு மரத்தடி நிழலில் தம்பியின் மடியில் தலைவைத்து சாய்ந்தார். இவர்கள் மனவாட்டத்தைப் போக்குமாறு அஞ்சனை என்கிற வானரப்பெண்ணின் வயிற்றில் பிறந்தத் தத்துவ வித்தகரான அனுமான் குரங்கு வீரன் என்று அழைக்கப்படும் பிரம்மச்சரிய விரதம் ஏற்ற அஞ்சனை மைந்தன் வந்து இருவரையும் பணிந்து வணங்கினார். ராமரின் வருத்தம் கண்டுக் காரணம் கேட்டால் இன்னும் ஒளி போன்ற மாயம் கண் திறந்து அவனை உற்று நோக்கி கவச குண்டலம் கையில் தாங்கி நிற்கும் குரங்கே நீ யார் என்று கேட்டார் இராமபிரான்.

# DAY 24

நடை

என்தாய் மொழிந்த இயலடையா ளத்தாலே
முன்தானே பெற்ற முதல்வர்தா னென்றனக்கு
அய்யா தானாகும் அடைக்கலமே யாமடியார்
பொய்யாம லென்றன் பேரனுமன் கண்டீரே
இலங்கை தனைச்சுட்டு அம்மையைக் கூட்டிவர
மலங்காதே போவென்று வாக்கருள வேணுமையா
சுக்ரீவன் சாம்புவனும் சுத்தமுள்ள வீரர்களும்
ஒக்கவொரு முகமாய் உடையோன் பதமடைய
கெருடன் மிகமறித்துக் கேலியிட்ட ஞாயமதும்
திருடன் கொடிய தீபாவி ராவணனும்
அம்மை தனைக்கொண்டு அவன்கோட்டை யானதிலே
செம்மையில்லாப் பாவி சிறையில்வைத்த ஞாயமதும்
எல்லா மறிந்து எம்பெருமாள் கோபமுற்று
வெல்லத் துணிந்தார் மிகுபடைகள் தான்திரட்டி
எழுபது வெள்ளம் ஏற்றவா னரங்களையும்
முழுதும் வருத்தி ஒப்பமிட் டெம்பெருமாள்
விசுவகம் மாளனையும் விரைவா யருகழைத்து
வசுவாசு மைந்தன் வாய்த்த அனுமனையும்
அனுமன் தனையேவி ஆன மலையெடுத்துத்
துனும னுடனே தோயக் கடலதுக்குள்
கோட்டைய திட்டுக் குக்குளித் தங்கேகி
ஓட்டனாய் விட்டார் உற்ற அனுமனையும்

அனுமன் தூது

பூட்டமுடன் வாயு புத்திரனுந் தான்மகிழ்ந்து
நாட்ட முடனிலங்கை நாடாளும் பாதகனைக்
கண்டு முடுகிக் கருத்தழியத் தான்பேசி
கொண்டு இலங்கை குப்பையிடத் தீக்கொளுத்தி
மால்கொடுத்த வாளி மாதுகையி லேகொடுத்து
வால்கொண்டு வீசி வனங்காவு தானழித்துக்
கேதார மாமலையும் கீர்த்தியுட னேகுதித்துப்
பாதார மென்று பணிந்தானே ராமரையும்

இராவணன் பாடு

அரக்க னவன்பேசும் அநியாயந் தான்கேட்டு
இரக்கமுள்ள எம்பெருமாள் எழுந்தார் படைக்கெனவே
படைக்கு இவர்நடக்க பார்த்துவி பீஷணனும்
அடைக்கல மென்று அவர்பாதஞ் சேர்ந்தான்காண்
சேர்ந்த வுடனே திருமால் மனமகிழ்ந்து
ஓர்ந்த படையோடே உடன்யுத்தஞ் செய்திடவே

அரக்கன் படையும் அச்சுதனார் தன்படையும்
இரக்க மில்லாமல் இருபேருஞ் சண்டையிட்டார்
படைபொருது வெல்லாமல் பத்துத்தலை யுள்ளோனும்
கடகரியுந் தோற்றுக் கையிழந்தா னம்மானை
பத்துத் தலையும் பார்மீதி லற்றுவிழ
மற்று நிகரொவ்வா மாயத் திருநெடுமால்
அரக்க னுயிரு அங்குமிங்கும் நிற்கையிலே
இரக்கமுடன் நின்றங்)கு ஏதுரைப்பா ரம்மானை
கேளாய்நீ ராவணா கிரேதா யுகந்தனிலே
பாழாய் இரணியனாய்ப் பாரில் பிறந்திருந்தாய்
உன்னிடுக்கங் கண்டு உன்புதல்வ னானாகி
தன்னடுக்கல் வந்துவுன்னைச் சங்காரஞ் செய்தேனான்
மகனாய்ப் பிறந்து வதைத்தேனான் பாரறிய
பகை நானென்று பண்பு மிகக்கூற
அப்போது நீயும் அன்றுரைத்த வார்த்தையினால்
இப்போது உன்குலங்கள் எல்லாங் கருவறுத்து
நாணமில்லா துன்னிலங்கை நகரிதீ யாலழித்துப்
பாணமொன்றா லுன்னைப் படஎய்தேன் கண்டாயே
அல்லாம லுன்றனக்கு அங்கமொரு நூறு
எல்லாரும் வெல்லா ஈசன் கயிலையதும்
எடுத்த பெலமுமுண்டே ஈரஞ்சு சென்னியுண்டே
கடுத்த பெலமுள்ள காலாட்டுகள் போரவுண்டே
இந்திரனை வென்ற ஏற்ற புதல்வருண்டே
சந்திரனுஞ் சூரியனும் தன்னிடத்தி லுண்டல்லவோ
மூணுலோ கத்தாரும் உன்னிடத்தி லுண்டல்லவோ
ஆணுவங்கள் பேசினையே அம்பொன்றில் மாண்டாயே
கோலுபோ லேயுயர்ந்த கொடும்பாவி நீகேளு
நாலு முழமல்லவோ நல்லதலை ஒன்றல்லவோ
என்கை வாளி எடுத்துவிடத் தாங்காமல்
உன்கை காலுமற்று உயிரழிந்து மாண்டாயே
பத்து மலைபோலே பருந்தலைகள் பெற்றதெல்லாம்
இத்தலத்தில் கண்டிலனே என்கையால் மாண்டாயே
மாண்டாய்நீ யென்று வசைகூறக் கேட்டரக்கன்
ஏண்டா மழுப்புகிறாய் இராமனோ கொல்லுவது
தம்பி யெனப்பிறந்து சத்துருப்போல் தான்சமைந்து
என்பெலங்க ளெல்லாம் எடுத்துரைத்தா னுன்றனுக்கு
ஆனதா லென்னுயிரு அடையாளம் பார்த்துலக்காய்
ஊனமுற எய்தாய் உயிரழிந்தே னல்லாது
நீயோடா என்பெலங்கள் நிலைபார்த்துக் கொல்லுவது
பேயா நீபோடா புலம்பாதே யென்னிடத்தில்
அப்போது மாயன் அதிகசீற் றத்துடனே
ஒப்பொன் றில்லாதார் உரைப்பார்கா ணம்மானை

விருத்தம்

உன்னுட தம்பி யாலே உயிர்நிலை யறிந்து யானும்
என்னுட சரத்தால் கொன்றேன் என்றியம்பிய அரக்கா வுன்னைப்

பின்னுகப் பிறப்பு தன்னில் பிறப்புநூ றோடுங் கூடி
அன்னுகந் தன்னில் தோன்ற அருளுவே னுன்னை நானே

விருத்தம்

என்னொரு தம்பி யாலே என்னையுங் கொன்றா யென்று
தன்னொரு மதத்தால் நீயும் சாற்றிய அரக்கா வுன்னைப்
பின்னொரு யுகத்தில் நூறு பிறப்புடன் பிறவி செய்து
இன்னொரு ஆளின் கையால் இறந்திடச் செய்வே னுன்னை

விளக்கம்:-

நான் அஞ்சனைப் பெற்ற மகன் அனுமன் ஆவேன். என்னை குரங்கு என்று அழைப்பார்கள் என்று தன்னை அறிமுகம் செய்தான். ராமன் அன்போடுக் கூறிய அமுத வசனம் கேட்டதும் அனுமன் யார் என்பதை அறிந்துக்கொண்டான்.மும்முறை வலம் வந்து வணங்கினான் பார்த்து பரவசம் கொண்டான். பேரின்பம் கொண்டு ஆனந்த களிப்புற்றான். ஆனால் பார்த்துப் பரவசம் கொண்டான். அண்ணலே! என்று சங்க நமஸ்காரம் செய்தான் தன்மையுடன் சமர்ப்பணம் செய்தால் என் குருவாக இருப்பவர் என்னை ஆட்கொண்டு அருள் புரிய வேண்டும் என்றுப் பணிந்தார்.

என் தகப்பனேச் சக்தி நெறி தவறாத நீங்கள் உடல் மெலிந்து போய் இருப்பதன் காரணம் என்ன என்று அறியக் கூறவேண்டும் என்று கும்பிட்டு நின்றார். அனுமன் மீது அன்புக் கொண்ட ரகுராமன் சீதையுடைய எல்லா விவரங்களையும் சொன்னார். எல்லா விவரங்களையும் அறிந்துக் கொண்ட அனுமன் நான் உங்கள் அடியவன் திருமகளின் அடையாளங்களை எல்லாம் சொல்லி விட்டீர்கள் என் தாய் சீதையின் அடையாளங்களை வைத்து பார்த்தால் என்னைப் பெற்ற தாய் லட்சுமி என்று நான் உணர்கிறேன். தாங்களே எனக்குத் தகப்பனும் எல்லோருக்கும் தகப்பனாக இருப்பவரே! இழிவானக் குலமாகிய அரக்கர்கள் வாழும் இலங்கையை எரித்துச் சாம்பலாக்கி விட்டு சீதாலட்சுமியைக் கொண்டு வருவேன். எனக்கு நீங்கள் வரம் தர வேண்டும் என்றுப் பணிவாகக் கேட்டான்.

அனுமன் தூது

அனுமன் இராமனிடம் வானரங்களின் அரசனாகிய சுக்ரீவனும் அவனுக்கு துணையாக சிரஞ்சீவியாகிய நம்பிக்கையான படைவீரர்கள் கடலளவு கொண்டப் படைகளாகும். நாங்கள் அத்தனை பேரும் தங்களுக்கு துணை நிற்போம் என்றார். அனுமன் ஆறுதல் மொழிக் கேட்ட இராமபிரான் மனதில் ஆர்வம் கொண்டு ராவணனை அழிக்க எண்ணம் கொண்டார். அனுமனிடம் தன் கையில் இருந்த மோதிரத்தை அடையாளமாகக் கொடுத்து சீதையைக் கண்டு வரத் தூது அனுப்பினார். முழு நம்பிக்கையோடு வாயு மைந்தனான அனுமன் மகிழ்ச்சியோடு புறப்பட்டுச் சென்றான்.

இலங்கை சென்ற அனுமன் சீதையைத் தேடி அலைந்தான். அசோகவனத்தில் அனுமன் கண்டான் சீதையை. விவரங்களை எல்லாம் அன்னையிடம் கூறி தேவியின் மலரடி போற்றி வணங்கினான். திருமாலாகிய ஸ்ரீராமர் கொடுத்த கணையாழி மோதிரத்தை சீதையிடம் கொடுத்தான்.

சீதையைக் கண்ட அடையாளத்திற்கு ஶ்ரீ ராமரிடம் கொடுக்கக் சூடாமணியை சீதையிடமிருந்து பெற்றுக்கொண்டான். இராவணனை கண்டான். அவன் எதிரில் சென்று அவனுடைய அழிவைப் பற்றிய நிலையைச் சொல்லி விட்டு, இலங்கையை எரியூட்ட வாலில் நெருப்பு ஏற்றி எல்லா இடங்களையும் எரித்து அழித்து, மரம், செடி, கொடிகளையும் கோட்டைக், கொத்தளங்களை இடித்துத் தவிடுப் பொடியாகி விட்டு, வெற்றியுடன் குதித்து இராமரிடம் வந்து ‘கண்டேன் சீதையை’ என்றான். கற்பின் சிகரத்தைக் கடல் நடுவில் இருக்கும் இலங்கையில் கண்டேன். சாந்த சொரூபிணி, சத்தியத்தின் நிருபணம், அசோகவனத்தில் அருந்தவசுச் செய்வதைக் கண்டு வந்தேன் என்றுக் கூறினான்.

அனுமன் இலங்கைச் சென்று அங்கு சீதையைக் கண்டு கணையாழி கொடுத்தது முதல் அனைத்து செயல்களையும் திருமாலாகிய இராமரிடம் விவரமாக சொன்னான். அனுமன் கூறியதைக் கேட்டு இராமர் இராவணனைச் செயல்கள் அத்தனையையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டுக் கோபம் கொண்டு வேகமாய் எழுந்தார். யுத்தம் செய்வதற்காக வானரப்படைகளை ஏற்பாடுச் செய்தார். இலங்கையை அழித்து அனுமனின் செயலைக் கண்ட விபீஷ்ணன், இராவணனிடம் சீதையை விட்டு விடும்படி அறிவுரைக் கூறினான். பகவான் நாராயணன் ஆகிய இராமரின் கோபம் நமக்கு அழிவைத் தரும் என்று அறிவுரை கூறினார். ஒரு குரங்கு வந்து இலங்கையை எரித்து வீரர்களைக் கொன்றுக் கோட்டைகளை எடுத்து நாசமாக்கி விட்டுப் போய்விட்டது.

அண்டச் சராசரங்களைக் காப்பாற்றும் பரம்பொருளாகிய ஆதிநாராயணன் இராமராக வந்து இருக்கின்றார். அவர் பார்வைப் பட்டாலேப் போதும் நம் குலம் நாசம் அடைந்து விடும்.ஆகையால் அண்ணா, நம்மையும் நம் அரக்கர் குலத்தையும் அழிவிலிருந்து காப்பாற்ற சீதையை இராமரிடம் சேர்த்து அவர் பாதங்களைப் பற்றிச் சரணடைந்தால் நாம் தப்பிக்க ஒரு நல்லச் சந்தர்ப்பம் இருக்கிறது என்று இராவணனின் காலில் பணிந்தான். கேடுக்கெட்ட பாவிக் கேட்பானா? துரோகியான இராவணன், அரக்கக் குணம் கொண்டக் கொடும்பாவி , அவனுக்கு வரும் அழிவுகளை எண்ணாமல் விபீஷணனைப் புறக்கணித்தான்.

விபீஷ்ணன் மனமுடைந்த நிலையில் இராமபிரானைச் சரணடைந்தான். கருணை உள்ளம் கொண்டக் கருணாகரமூர்த்தி உயிர்களையெல்லாம் காக்கும் கடவுளான திருமாலின் அவதாரமாகிய இராமர் கருணையோடு ஆதரவும் கொடுத்தார். தன் பத்தினியைக் கவர்ந்துச் சென்ற கயவனின் தம்பி என்றுத் தள்ளி விடவில்லை.

இறைவன் எல்லோருக்கும் சமமானவர். அவர் எந்த உயிர்களையும் தள்ளி விடுவது இல்லை.எல்லோரையும் ஒரு மனதால் தற்காத்துப் பாதுகாப்பளிப்பவர்.ஏற்றத்தாழ்வுப் பார்க்காதவர். அதிலும் இராமபிரான் அறநெறி, கருணை உள்ளம் படைத்தவர் . தர்மத்தைக் காக்க தன் உயிரையும் வழங்குபவர். தன்னலமற்ற உயிர்காக்கும் வள்ளல் குணம் படைத்தவர். அன்பின் வழியில் நடப்பவர்களை ,ஆதரித்து அருள் கொடுப்பவர்.அதனால் அன்போடு அடைக்கலம் என்றுப் பணிவோடுப் பணிந்த விபீஷணனை ஆதரித்து அருள்புரிந்து அணைத்துக் கொண்டார்.

இராவணன் பாடு

சீதாதேவி சிறை எடுத்துச் சென்றவன் பெரிய வெறிக் கொண்ட அரக்கன் இராவணன். அவனை வெற்றிக் கொள்ள வேண்டும் என்று இராமர் எழுபது வெள்ள வானரப் படைகளையும் திரட்டி, அவர்களை ஒன்றாகக் கூட்டிக்கொண்டார். தெய்வலோகச் சிற்பியாகிய விஸ்வகர்மாவை அங்கே அழைத்தார்.

விஸ்வகர்மா விடம் கடலின் மேலே இக்கரைக்கும், அக்கரைக்கும் செல்ல சேது பாலம் கட்டி இலங்கையைச் சென்றடைய ஏற்பாடுச் செய்யச் செய்தார். எம்பெருமான் ஶ்ரீமன் நாராயணனுடைய வானரப் படைகளும், ஈவு இரக்கமில்லாத இராவணனின் படைகளும் சண்டையிட்டும் ராமர் படையோடு ஜெயிக்க முடியாமல் தோற்றுப் போய்னர். வீரம் உள்ள அனைத்து அரக்கர்களும் மாண்டு அழிந்தனர்.அரக்கர்கள் வலுவிழந்தது தோல்வியால் அவமானம் அடைந்தார்கள். தோல்வியே காணாத ராவணனும் அவமானம் அடைந்தான்.

அவனுடைய பத்து தலைகளும் தனித்தனியாகச் சிதறி மிகவும் அகோரமாகக் காணப்பட்டது. யாரிடமும் சொல்ல முடியாத மாயை சக்திகளை கொண்ட திருமால் ராவணன் உடல் அருகில் சென்றார். இராவணன் உடல் உயிர் துடித்துக் கொண்டிருந்தது. திருமால் கருணையோடு அவனைப் பார்த்து இராவணனிடம் முன்னால் முடிந்துபோனக் கிரேதா யுகத்தில், ஆணவம் பிடித்த இரணியனாய் நீ பிறந்தாய். ஆணவத்தை அழிக்க உனக்கு மகனாக பிறந்தேன்.

உன்னுடைய மமதையை அடக்க உன்னை வாயில் நடையில் வைத்து உனது உடலை இரண்டாகப் பிளந்து உலகம் அறியும்படிச் சங்காரம் செய்தேன். அன்றைக்கும் நீ என்னை அறியாமல் உண்மையைப் புரிந்துக் கொள்ளாமல் ஏளனமாய் பேசி இகழ்ந்தாய். அந்த வார்த்தைகள் எல்லாம் இன்று வினையாக முடிந்தது. பிறகு மறுபடியும் பிறந்து உன்னுடைய அராஜகத்தாலும், பெண் ஆசையாலும் உன் சிங்கார இலங்கை தீயால் எரிந்தும், நீ இராமப் பாணத்தால் சாவையும் அடைந்தாய்.

என்னுடைய வீரத்தையும், இராமநாமத்தின் மகிமையையும் இப்போதாவதுப் புரிந்து கொண்டாயா? என்று கேட்டார். அது மட்டுமல்லாமல், உனது உடம்பானது வலிமைப் பொருந்திய நூறு யானைகள் பலம் கொண்டது. ஈஸ்வரர் இருக்கும் கைலாயமலையையும், பாதாள லோகத்தையும் அள்ளி எடுத்தவன் நீ. இத்தனை பலம் கொண்ட நீயும், உன் படைகளும் சேர்ந்து எங்களை ஜெயிக்க முடியவில்லை என்றார் திருமால் ஆகிய இராமர்.

மேலும் கோபம் கொண்டு இராமர், இராவணா! தெய்வ லோகத்து இந்திரனை வென்று, சந்திர, சூரியர்களை உனக்கு பணிவிடைகள் செய்துப் பணி புரிய வைத்தாய். மூன்று லோகத்தையும் அடக்கிய நீச பாவியாகிய நீ,அதிகாரம் பேசியும் என்னுடைய கைகளில் தொங்கவிடப்பட்ட வாளியில் உள்ள அன்பினால் போகும் உயிரை உன்னால் பிடித்துக் கொள்ள முடியவில்லையே!, பத்து மலைகளுக்கு சமமான தலைகள் இருந்தும் என்ன பயன்? என்று உணர்ந்து கொள். கொடுமையான குணங்களாலும், பேராசையாலும் மாண்டு விட்டாயே! என்றார்.

அது கேட்ட இராவணன் கோபம் கொண்டுக் குறை உயிராக இருந்த நிலையில் பாம்பைப் போல் சீறினான். கடும் சீற்றம் கொண்டு என்னடா? இராமனாகிய நீ என்னை கொல்ல முடியாமல், என்னுடைய தம்பி எனக்கு எதிராகச் செயல்பட்டு என்னுடையத் திறமைகளை உனக்குச் சொல்லி என்னுடைய உயர்நிலை இருக்கும் இடத்தையும் அடையாளம் காட்டியதால் தான் உன்னால் குறி வைத்துக் கொல்ல முடிந்தது. உன்னால் என் உயர்நிலை ரகசியத்தை அறிந்து என்னை அழிக்க ஒரு காலும் முடியாது என்றான்.

அவ்வார்த்தையைக் கேட்ட மாயப் பெருமாள் மனம்திருந்தாத மாபாவி இராவணன் மீதுக் கடுங்கோபம் கொண்டு, உன் தம்பியின் உதவியால்தான் உன்னைக் கொன்றேன் என்று ஆணவத்தால் பேசிய அரக்கா! உன்னை இனிவரும் அடுத்த யுகத்தில் அண்ணன் தம்பியாக நூறு பேர்களுடன், உன்னைப் பிறவிச் செய்து இன்னொரு ஆளின் கையால், உன்னை வதைப்பேன் என்றுக் கூறிக் குறை உயிரையும் அழித்தார்.

# DAY 25

நடை

என்னுடைய தம்பி யாலே னென்னுயிரை அழித்தாய் நீ
உன்னுடைய அம்பால் உயிரழிந்தே னல்லாது
என்னைநீ கொல்ல ஏலாது என்றுரைத்தாய்
உன்னை நானிப்போ ஒருபிறவி செய்யுகிறேன்
என்றுசொல்லி மாயன் எண்ணவொண்ணாக் கோபமுடன்
கொன்றாரே ராவணனின் குறைஉயிரை அம்மானை
அன்றுமேதை சிறையை அரிராமருமாற்றி
வென்ற இலங்கைதனை விபீசணனுக்கு பட்டங்கட்டி
அன்றுஇலங்கை விட்டு எல்லோரும் கடல்கடந்து
அயோத்தியாபுரிக்கு அவர்வருகும் வழிதனிலே
கைபிடித்த ஜானகியும் கனலாறாய் தான்வரவே
மேதையும்வந்து மேவியாற்றிலிறங்க
மேதையைச்சீதை மேவியாற்றிலனுப்பி
சீதையும் ராமரோடு சேர்ந்து நடந்திடவே
மாதைமிகப் பார்த்து மாயராமர் ஏதுரைப்பார்
இதுவரையும் லட்சுமியே எங்கே மறைந்திருந்தாய்
அதுவுரைத்து லட்சுமியும் அன்றுவழி தானடந்தாள்
அன்று கயிலை அரனிடத்தில் சென்றிருந்து
முன்னேயுள்ள துண்டம் ஓரிரண்டு உள்ளதிலே
அன்று ராவணனுக்கு அவர் உரைத்த சொற்படியே
ஒன்றையொரு துண்டம் ஒருநூறு பங்குவைத்துத்
துவாபர யுகம்வகுத்துத் துரியோதன னெனவே
கிரேதா யுகமழித்துக் கீழுலகில் தோணவைத்தார்

துவாபர யுகம்

பாவி பிறக்க பச்சைமால் தான்கூடத்

தாவிப் பிறந்த தம்பியர் மூவரையும்
விபீஷணனும் நல்ல வெற்றிச்சாம் புவனையும்
அபூருவமாய்க் குந்தியர்க்கு ஐவரையும் பிறவிசெய்தார்
ஐவரையும் பூமி அதிலே பிறவிசெய்து
மொய்குழ லான மெல்லி திரௌபதியாய்
அம்மை திருக்குழலில் அமர்ந்திருந்த பொற்சடையை
நன்மை விபீஷணற்கு நல்மக ளாக்கிவைத்து
அரக்கர் குலமறுக்க அம்மை யெழுந்தருளி
இரக்கர் புரமேகி இருக்குமந்த நாளையிலே
தோழியாய் முன்னிருந்த துய்யத் திரிசடையை
நாழிகை தன்னில் நாதன் பிறவிசெய்தார்
பின்னுமந்த மாயன் பெரியோ னடிவணங்கி
நின்னுகரங் குவித்து நெடியோ னுரைத்தனராம்
எழுபது வெள்ளம் ஏற்றவா னரங்களுடன்
முழுது மிலங்கை முடித்துநான் நிற்கையிலே
என்படைக ளான எழுபதுவெள் ளமதிலும்
உன்படைக ளெல்லாம் உயிரழிந் தாரெனவே
ஆராய்ந்து என்படையை அளவிட்டு நிற்கையிலே
தோராத மன்னன் துடியானச் சேவகன்தான்
ஒருவன் தனைக்காணேன் உடனே மறலிதனை
வருக அழைத்து வகையே தெனக்கேட்க
நானில்லை யென்றே நமன்தான் மிகவுரைக்க
ஏனில்லை யென்று இறுக்கிநான் கேட்கையிலே
அய்யாவே வும்முடைய ஆளான வீரனைத்தான்
கையால முள்ள கும்பகர்ண னொருசமரில்
பிடித்து நசுக்கிப் பிசைந்து திலகமிட்டான்
அடுத்துநின்று பார்த்து அரக்க னவனுயிரைக்
கொண்டேகி நானும் கொடுநரகில் வைத்திருக்கேன்
என்றே தான்மறலி இத்தனையுஞ் சொன்னான்காண்
ஆனதால் கும்ப கர்ண னவன்தனையும்
ஈனமில்லாக் கஞ்சன் எனப்படையு மிவ்வுகத்தில்
என்றே தான்மாயன் இதுவுரைக்க ஈசுரரும்
அன்றே தான்கும்பனையும் அப்படியே தான்படைத்தார்
செந்தமிழ் சேர்மாயன் சிவனாரையும் பணிந்து
எந்தனக்கேற்ற ஈரஞ்சாயிரமடவை
கன்னியராயெனக்கு கவரியிடநீர்படையும்
பன்னீர்குணம் போல்பைம்பொன்னிறத் தக்கவராய்
ஆயர் குலத்தில் அநேக மடவாரை
பாயமுற வாடிருக்கப் படைப்பீர்காண் ஈசுரரே
லட்சுமியைப் பூமாதேவி யெனவகுத்து
கச்சியா யென்னைக் கருணையுடன் படையும்
வாயரமுள்ள வாய்த்ததெய்வ ரோகினியை
தாயாகப் பெண்கள் தான்படைக்க வேணுமென்றார்
படைத்த சடமதுக்குப் பரம னுயிர்கொடுக்கச்
சடத்தை மிகயெழுப்பித் தானனுப்ப ஈசுரரும்
துவாபர யுகமெனவே தொன்முறையைத் தான்பார்த்துத்
தவறாத வண்ணம் தான்படைத்தா ரெல்லோரும்

அப்படியே ஈசர் அன்று படைத்தபடி
இப்படியே வந்து இவர்கள் பிறந்தனராம்
முன்னுள்ள பீடத்து உதிரமெல்லாந் தானெழுந்து
அன்றுள்ள பாவி அவன்கூடத் தானிருக்க
அரக்க னிராவணனும் அதிகத்துரி யோதனனாய்
மூர்க்கன் பிறப்போர் ஒருநூறு பேரோடு
வந்து பிறந்தான்காண் வையகத்தி லம்மானை
சந்துபயில் மாயன் தன்னோ டுடன்பிறந்த
தம்பி பரதன் சத்ருக்கன் லட்சுமணன்
நம்பி விபீஷணனும் நல்லதொரு சாம்புவனும்
ஐவரும் பூமிதனில் அப்போது தோன்றினராம்
தெய்வத் திரிசடையும் தேவி துரோபதையாய்
மெய்வரம்பா யுள்ள மேன்மை யதின்படியே
ஐவருட தேவியென்று ஆயிழையுந் தோன்றினளாம்
கும்பகர்ண னென்ற கொடும்பாவி கஞ்சனுமாய்
வம்பகனாய் வந்து மதுரை தனில்பிறந்தான்
இப்படியே ஐபேரும் ஏற்றரிய நூற்றுவரும்
அப்படியே பங்கு வகைபாதி யாய்ப்பிறந்தார்

துவாபரயுகம்

விளக்கம்:-

திருமால் ராவணனைச் சம்காரம் முடித்து சிவபெருமான் அருள் புரிந்து இருக்கின்ற கைலாய மலைச் சென்று சிவனிடம் கூறுவார், சிவபொருளே! ராம அவதாரம் புரிந்து இராவணனைச் சம்ஹாரம் செய்து வந்தேன்.மதம் கொண்ட இராவணன் அரக்கன் என்னை தவறாகப் பேசுகிறான் என் வீரத்தை கொச்சைப்படுத்தி மிக இழிவாக பேசியதால் அவனை மறுபிறவிச் செய்ய வேண்டும் என்றார்.

அப்போது சிவனாரும், அரிய மால்வுரை கேட்டு அச்சுதரே! நீடிய யுகத்தில் உள்ள குறோணியின் ஆறு துண்டுகளில் இன்னும் இரண்டு துண்டம் மீதம் இருக்கின்றதே, அதிலிருந்து ஒரு துண்டை எடுத்து பிறவிச் செய்யலாம் என்றார். நான் மானிடப் பிறவி எடுத்திருப்பது இறைவனை அடைதல் பொருட்டுக் கடவுளை நிந்தித்து வருத்தப் படுவது அல்ல. மனிதனை இறைவன் பாவம் என்றுக் கருதுகிறார். ஆனால் மனிதன் இறைவனை பாவம் என்று எண்ணுகிறான். ஆகையால் இந்தப் போராட்டத்தில் வரும் இன்னல்களில் சிக்குண்டுப் பாவம் செய்கிறான்.

அதனால் மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கிறான். இறைவனின் சாபத்திற்கு ஆளாகி தவிக்கிறான். இப்படியாகப் பிறப்புத் தொடர்ந்துக் கொண்டே இருக்கிறது. அதன்படிச் சிவபெருமானும், மாயப் பெருமாளும் குறோணியின் மீதம் இருக்கின்ற இருத் துண்டத்திலிருந்து ,ஒரு துண்டை எடுத்து அதை நூறுப் பங்குகளாகப் பிரித்து பிறவிச் செய்ய வேண்டும். ஒரு துண்டைப் பிரித்து ஒரு பெண்ணாகப் படைக்க வேண்டும். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஆக நூற்றி ஒருவராக்க முடிவுச் செய்தார்கள்.

இவ்வாறு நாராயண மூர்த்தி எண்ணியபடி, அப்படியே பிறவிச் செய்ய முடிவுக் செய்துத் துவாபரயுகத்தை உருவாக்கி, அதற்கு தலைவனாக, “முந்தைய யுகத்தில் அரக்கனாக இருந்த இராவணனை துரியோதனாதிகளாக்கிப் பிறவிச் செய்து, பச்சைமால் நாராயணரும் பூமியில் அவதாரம் எடுத்தார். எப்படி என்றால், காந்தார நாட்டு இளவரசி காந்தாரியை அத்தினாபுரத்து, மகாராஜா திருதராஷ்டிரர் மணம் முடித்தார். பார்வையில்லாத ஒருவருக்கு தன்னை மணம் முடிந்ததை அறிந்த காந்தாரித் தானும் பார்வை அற்று இருக்கக் கண்களைத் திரையிட்டுக் கட்டிக் கொண்டாள்.மூத்தவராக இருந்தும் பார்வையற்று இருந்ததால் அவருக்கு அரியணை மறுக்கப்பட்டது.

சாந்தனு தனது சகோதரன் தேவபியை பின்னுக்கு தள்ளியது போல இது நடந்தது. திருதராஷ்டிரனுக்கு சட்டம் தெரியும் ஆதலால் மறுப்பு தெரிவிக்கவில்லை, விசித்திர வீரியனின் மூத்தமகன் என சில விதிகள் ஏற்றுக் கொண்டாலும் சிலவிதிகள் மாறாக இருந்ததால் அமைதியானான் .திருதராஷ்டிரனின் உள் மனம் பாண்டுக்கு முன் தான் ஒரு ஆண்குழந்தைக்கு தந்தை ஆகிவிட வேண்டும், அப்பொழு தான் தனக்கு மறுக்கப்பட்ட உரிமையைதனதுமகன்உரிமையோடுஅடையமுடியும்எனச் சபதமெடுத்தது திருதராஷ்டிரனது மனம் போலவே காந்தாரி கர்ப்பமுற்றாள்.

கர்ப்பம் இரண்டு வருடங்களுக்கு நீடித்தது. தனக்குப் பிறகு கர்ப்பமுற்ற குந்தி முதல் குழந்தையைப் பெற்றுவிட்டாள் என்பதை அறிந்து பொறுக்க முடியாமல் கருவிலிருந்து குழந்தையை வெளியே தள்ள முடிவெடுத்தாள். தனதுப் பணிப் பெண்களை அழைத்து ஓர் இரும்பு உலக்கையால் வயிற்றில் ஓங்கி, ஓங்கி அடிக்கச் செய்தாள்.முடிவில் அவள் வயிற்றிலிருந்து சதைப்பிண்டம் வெளியே விழுந்தது.

குழந்தைஅழவில்லையேஆணா?பெண்ணா?எனவினவினாள்.பணிப்பெண்கள்த யங்கினார்கள், அதட்டினாள் காந்தாரி, பணிப்பெண்கள் உண்மையை கூறினார்கள். காந்தாரிஅலறினாள், வியாசரை அழைத்தாள்."நான் நூறு குழந்தைக்குதாயாவேன்என்றுசொன்னீர்களே?"

"எங்கேகுழந்தைகள்?" காந்தாரியைச் சமாதானப்படுத்தி சேடிப்பெண்களை அழைத்துச் சதைப் பண்டங்களை நூறு துண்டங்களாக வெட்டி நூறு நெய் நிறைந்தகுடங்களில்போட்டுவைக்கச்சொன்னார்வியாசரை. காந்தாரி எனக்குஒருபெண்குழந்தையும்வேண்டுமென்றாள். வியாசர் மெளனமாய்சிரித்தார், பின் 101 நெய் குடங்களில் சதைப் பிண்டங்களை போட்டு வைத்தார்கள் பணிப்பெண்கள். 100 ஆண்களும் ஒரு பெண்ணுமாக 101 குழந்தைகள் பிறந்து கெளரவர்கள் ஆனார்கள்.

மேலும், யமுனை நதிக்கரையில் யாதவ குழு ஒன்று செழிப்பான மதுரா எனும் நகரை அமைத்து குழு ஆட்சி முறையை நடத்தி வந்தது. யாதவர் ஆட்சிக் குழுவில் ஒருவரான சூரசேனரின் மகள் பிரதை (பிருதை, பிரீதா), பிரதையை குந்தி நாட்டு மன்னர் குந்தி போஜன் தத்தெடுத்து குந்தி எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார். மண வயதையடைந்த குந்திக்கு சுயம்வரம் நடந்தது, சுயம்வரத்தில் கூடியிருந்தவர்களில் பாண்டுவை தேர்ந்தெடுத்தாள்.

பீஷ்மர், இரண்டாவதாக மந்திர நாட்டின் மன்னன் சல்யனின் சகோதரி மாதுரியை பாண்டுவிற்கு மணம் முடித்து வைக்க விரும்பினார். சல்லியனுக்கு, அவரது தங்கையின் நிச்சயத்திற்கு மணியும், முத்தும், பவளமும் சீராகத் தந்தார் பீஷ்மர், அவற்றை ஏற்றுக்கொண்டு மாத்ரியை பாண்டுவிற்கு மணம் முடித்துத் தந்தார் சல்யர்.

பல நாடுகளை வெற்றி கொண்டு கப்பத்தொகையைப் பெற்று வந்த பின் குந்தியாலும் மாத்ரியாலும் தூண்டப்பட்டு வனவாசத்தை நாடிச் சென்றார் பாண்டு. வேட்டையின் போது பாண்டுவின் அம்பு பெண்மானை முயங்கிக் கொண்டிருந்த ஆண் மானை தாக்கிவிடுகிறது. மானின் அருகில் சென்று பார்த்த போது பாண்டுவுக்கு உண்மை தெரிகிறது.

கிண்டமா என்ற முனிவரும் அவரது மனைவியும் காட்டில் சுதந்திரமாக உலவி காதல் செய்யும் நோக்கில் தங்களது தவ வலிமையால் மான்களாக உருவம் மாறியிருந்தனர்.இறக்கும் நேரத்தில் கிண்டமா முனிவர் "ஒரு ஆணும் பெண்ணும் காதல் புரிவதை ஆக்ரோசமாக தடுத்துவிட்டாய் உனக்கு காதல் சுகம் என்ன என்பது தெரியாமல் போகக் கடவது எந்த பெண்ணையும் காதல்கொண்டு தொட்டால் உடனே இறந்து போவாய்" என சாபமிட்டார்.

ஒரு குழந்தைக்கு தகப்பன் ஆக முடியாதவன் அரசன் ஆகமுடியாது என வருந்தி பாண்டு அஸ்தினாபுரம் செல்லமறுத்து சதஸ்ருங்க வனத்தில்முனிவர் களுடன்தங்கிவிடுகிறான்.

இச்செய்தி அஸ்தினாபுரம் எட்டுகிறது. பாண்டு இல்லாத நிலையில் அத்தினாபுரத்தின் ஆட்சியை பீஷ்மர் திருதராட்டிரனுக்கு வழங்குகிறார்.
சில மாதங்களில் காந்தாரி கருத்தரித்தாள் என்ற செய்தி பாண்டுவுக்கு தெரியவே ஆட்சியும் போய், ஒரு குழந்தைக்கு தந்தையும் ஆகமுடியாத நிலையில் மனழுத்தமும், சோர்வும், விரக்தியும் அடைந்து பாண்டு ஒரு முடிவெடுத்தான். சுவேதகேது முனிவரின் நியதிப்படி ஒரு பெண்ணின் கணவர் அவர் விரும்பும் ஒரு ஆணுடன் சேர்ந்து குழந்தை பெற்றுக் கொள்ளலாம், அதன்படி தன்னுடன் இருந்த குந்தியை அழைத்து, யாராவது ஒரு முனிவரின் மூலமாக ஒரு குழந்தையை பெற்றுக்கொள் என வேண்டினான்.

தேவர்களையே அழைக்க முடியும் போது ஏன்? முனிவர்களை அழைக்க வேண்டும் என கூறி, தர்மத்தின் தலைவன் யமன் மூலம் யுதிஷ்டிரன் (தர்மன்), மிகுந்தசக்திபடைத்த வாயுபகவான் மூலம் பீமன்,தேவர்களின்தலைவனான இந்திரன் மூலம் அருச்சுனன், என மூன்று குழந்தைகளை குந்தி பெற்றாள். பாண்டு வேறு ஒரு தேவனை அழைக்க சொன்ன போது " மாட்டேன் மூவருடன் இருந்தாயிற்று நான்காவதாக ஒருவருடன் இருந்தால் என்னை வேசி என்று பேசுவார்கள் அப்படித்தான் தர்மம் சொல்கிறது" என மறுத்துவிடுகிறாள். "நீ வேறு எந்த ஆணிடமும் செல்ல முடியாது" என்பதால் மாத்ரிக்காக ஒரு தேவனை அழைக்கச் சொன்னான்.

மாத்ரியிடம் கேட்ட போது காலை, மாலை நட்சத்திரங்களான அஸ்வினி தேவர்களை அழைக்கச் சொன்னாள். அஸ்வினி தேவர்கள் எனும் இரட்டையர்கள் மூலம் உலகத்திலேயே மிக அழகான நகுலனும், உலகத்திலேயே எல்லாம் அறிந்த அறிவாளியான சகாதேவனும் பிறந்தார்கள். இப்படியாக பிறந்தவர்களை பாண்டவர்கள் என்று அத்தினாபுரத்து மக்கள் அழைத்தனர்.)

பச்சைமால் நாராயணரும் பூமியில் அவதாரம் எடுத்தார் துரியோதனனுடன் நூறு பேர் மற்றும் ஒரு பெண் அவள் பெயர் துச்சலை ஆகும். மற்றும் ராமாவதாரத்தில் தம்பியாக இருந்த லட்சுமணன், பரதன், சத்துருக்கனன் மற்றும் நல்லதைச் சொல்லி நலம் சேர்த்த விபீஷ்ணனையும், போர் முறைகளைத் தீவிரமாக நின்று செயல்படுத்திய வீரனாகிய ஜாம்பவானும், அண்ணன் தம்பிகளாக ஒற்றுமையோடு ஒருவரை ஒருவர் கேட்டு பூலோகத்தில் பஞ்ச பாண்டவர்களாக பிறவிச் செய்தார்.

முன் பிறவியில் மகாலட்சுமியின் அழகிய கூந்தலின் பொற்சடையை விபீஷணனின் மகளாக பிறவிச் செய்து திருச்சடை என்ற பெயரில் கிறேதாயுகத்தில் பிறந்திருந்தவள். அந்த திருச்சடையானவள் தான் முன் யுகமான திறேதாயுகத்தில் இலங்கையில் சீதை சிறையில் இருந்த போது உற்றத் துணையாயிருந்து சீதையின் உயிர் காத்தவள். அவ்வாறு சீதையின் உயிர் காத்தத் தோழியை துவாபரயுகத்தில் திரளபதியாகப் பிறவிச் செய்தார்.

மறுபடியும் சிவனை வணங்கி நான் ராவணனை அழிக்க எனக்கு துணையாய் நின்ற எழுபது வெள்ளம் வெல்ல முடியாத வானரப் படைகளைக் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். சிறந்த போர்வீரனாக வசந்தன் என்கிற வானரத்தையும் காணவில்லை என்றார். உடனே மாய பெருமாளும், சிவபெருமானும் எமனை அழைத்து கேட்டார்கள். இருவரையும் வணங்கி ஐயாவே! அந்த வீராதி வீரனை கும்பகர்ணன் பிடித்துக் கொன்று நசுக்கி அவன் நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டான். ஆதலால் நான் அவனை கொடும் பாதாள அறையில் போட்டு வைத்திருக்கிறேன் என்றான். இவ்வளவுக் கொடுமை செய்தக் கும்பகர்ணனைக் கம்சனாகப் பிறவிச் செய்யவேண்டும் என்று மாயப் பெருமாள் சொன்னதும், ஈஸ்வரர் கும்பகர்ணனைக் கம்சனாக பிறவிச் செய்தார்.

அடுத்ததாக பெருமாள் ஈஸ்வரனிடம் அன்போடு உரைப்பார், ஈஸ்வரரே, முடிந்துபோன ராம அவதாரத்தில் என்னை விரும்பிய பெண்களை எல்லாம் நான் விரும்பாமல் இருந்தேன். ஏனென்றால் இராம அவதாரத்தில் நான் ஏக பத்தினி விரதம் இருந்தேன். ஆகையால் அடுத்து வரும் யுகத்தில் உங்கள் ஆசைகளை எல்லாம் பூர்த்தி செய்வேன் என்று வாக்களித்திருந்தேன். ஆதலால் என் அழகில் மயங்கி கிடந்தவர்களைக் கவலைப்பட வேண்டாம்.கண்ணனாக அவதாரம் எடுத்து உங்கள் அன்பால் ஈர்க்கப்பட்டு உங்கள் ஆசைகளை நிறைவு செய்வேன் என்றேன். ஆகையால் ஈஸ்வரரே என்னை விரும்பும் படியும் அழகும் இளமையும் பொருந்திய கன்னிப்பெண்களை பிறவிச் செய்ய வேண்டும் என்றார்.

நான் அவர்களோடுக் காதல் உறவாடி அவர்கள் ஆசைகளை எல்லாம் நிறைவு செய்ய வேண்டும். பலவிதமான லீலைகள் புரிந்து அவர்களிடம் விளையாடி ஆனந்தத்தில் ஆழ்த்த வேண்டும் என்றுக் கேட்டுக்கொண்டார். ஆயர் குலமாகிய இடையர் குலத்தில் தங்க நிறமான தெளிவான குணம் கொண்ட கோபியர்களுடன் முறையாக கொஞ்சி மாயம் செய்து அனைவரையும் மகிழ்விக்க வேண்டும். அவர்கள் விரும்பி எனக்கு சாமரம் வீசவும் பணிகள் செய்து ஆதரவு காட்ட வேண்டும்.

இவ்வாறு நான் விரும்பியப் படியே அருள்புரிந்து பிறவிச் செய்ய வேண்டும் என்றார். லட்சுமி தேவியை பூமாதேவியாகப் பிறவிச் செய்ய வேண்டும் என்றார். பெண்கள் எல்லோரும் என் பால்ய பருவ வயதில் குழந்தையாக என்னைக் கொஞ்சி விளையாட வேண்டும். தாய் அன்புக் கொண்டு என்னைத் தழுவி அணைக்க வேண்டும். இவ்வாறு அன்போடு பாதுகாக்கும் குணம் கொண்டவர்களாகப் படைக்க வேண்டும் என்று கேட்டார் ஈஸ்வரரிடம்.

ஈஸ்வரர் உடனே, கேட்டவாறே பெருமாள் விரும்பியபடியே படைக்கப்பட்ட அனைத்து முன்ஜென்மம் உடல்களுக்கும், திடமாக இருந்த உடலுக்கும், உயிர் கொடுத்து பிறக்கும்படிச் செய்தார். இந்த யுகத்திற்குத் துவார யுகம் என்றுப் பெயர் வைத்தார். மாயப் பெருமாள் சொல்லியபடி எந்த மாற்றமும் இல்லாமல் எல்லோரும் பிறவிச் செய்யப்பட்டு பூமியில் வந்து அவதரித்தார்கள். முன்பு இருந்த குறோணியின் ரத்தத்தில் உள்ள ரத்தம் எல்லாம் உயிர் பெற்று எழுந்தது. முடிந்து போன யுகத்தில் ராவணனோடு இருந்த அரக்கர்களும் மீண்டும் அரக்கர்களாக துணையாய் இருக்க பிறவி எடுத்தனர். இராவணன் மறுபிறவியாக நூறு பேர்களுக்கும் மூத்த துரியோதனனாய் உருவானான்.

அசுர குணம் படைத்த இவர்கள் எல்லோரும் துரியோதனனை சேர்ந்த 99 சகோதரர்களாய் பிறப்பு எடுத்தார்கள். இவ்வாறு இவர்களோடு முக்கியமாக தர்ம குணம் கொண்ட பஞ்ச பாண்டவர்களும், பஞ்ச பாண்டவர்களுக்கு மனைவியாக்க வேண்டும் என்றுத் திரௌபதியும் பிறவிச் செய்யப்பட்டாள். இவ்வாறுஅரக்கக் குணம் படைத்த துரியோதனாதிகள், தர்ம குணம் கொண்டவர்களும் பங்காளிகளாக அஸ்தினாபுரத்தில் சில காலம் ஆண்டு கொண்டிருந்தார்கள். அரக்கனான கும்பக் கர்ணன் கம்சனாக மதுராவில் பிறந்து நல்லது அறியாதவனாக ஆண்டுவந்தான். மதுராவில் அவனைப் பெற்ற தாயையும் தகப்பனையும் கூட மதிக்காமல் சிறைப்படுத்தினான்.

## DAY 26

இராச்சியத்தி லுள்ள இறைதான முள்ளதெல்லாம்
தராச்சியமாய்ப் பாதியெனத் தங்கள்சில நாடாண்டார்
கஞ்ச னவன்பிறந்து கடிய கொடியவனாய்
வஞ்சனையும் பெற்ற மாதா பிதாக்களையும்
சிறையதிலே வைத்துத் தேசமதைத் தானாண்டு
இறைமிகுதி வேண்டி இராச்சியத்தை யாண்டனனே
ஆனதா லவனுடைய அம்புவியி லுள்ளோர்கள்
ஈனதுன்ப மாகி இருந்தார் பயமடைந்து
தேவரையும் வானவரைத் தேவேந்தி ரன்வரையும்
மூவரையுஞ் சற்றும் முனியாமல் மாபாவி
தெய்வ மடவாரைத் திருக்கவரி வீசிடவே
வைப்பேன்பிடித்து வாவெனவே ஆள்விடுவான்
வருணனொடு வாயுவையும் வலுவிலங்கில் தான்போட்டு
அருணன் முதலாய் அந்தி வரும்வரையும்
வேலை யவன்கொண்டு விடுவா னவன்தொழிலாய்
மாலை நினையான் மறையைமிக நினையான்
ஆலயங்கள் கோயில் அழிந்த மடங்கள்வையான்

சாலயங்கள் செய்யான் தர்மசிந்த னைகள்செய்யான்
அந்தணர்க்கு மீயான் அன்னதா னங்களிடான்
பந்தலிட்டுத் தண்ணீர் பக்தர்தமக் களியான்
ஆவு தனையடைத்து அதுக்கிரைகள் போடாமல்
கோவுகளைக் கொல்வான் கொடும்பாவி நெட்டூரன்
கண்ட வழக்குரையான் கைக்கூலி கேட்டடிப்பான்
சண்டனைக்கண் டாருவென்பான் தன்னைப்பா வித்திருப்பான்
எம்மைப் படைக்க ஏலுமோ மற்றொருவர்
நம்மைப் படைத்ததுவும் நான்தா னெனவுரைப்பான்
இப்படியே கஞ்சன் எதிரியில்லை யென்றுசொல்லி
அப்படியே மீறி ஆண்டான்கா ணம்புவியை
மேலோகந் தன்னில் மிகுத்ததெய்வக் கன்னியரில்
வாலோக மான வாய்த்தகன்னி தேவகியும்
ரோகணியா ளென்னும் நுதல்மடவா ரண்டுபேரும்
புரோகணிய மான பொய்கைநீர் தானாடி
அக்காளுந் தங்கையுமாய் அவர்கள்ரண்டு மாமயிலும்
மிக்கான பட்டுடுத்து மேவிவழி தான்வரவே
மாயன் சிறுமதலை வடிவெடுத்துத் தானழவே
ஆயனுட கோலம் அறியாமல் மங்கையர்கள்
தெய்வகியும் பார்த்துச் சொல்லுவாள் தங்கையிடம்
நெய்நிதியக் கன்னி நெடியவிழி ரோகணியே
இன்னா அழுது இதில்கிடக்கும் ஆண்மதலை
பொன்னான பூமியிலும் பெண்ணே நான்கண்டதில்லை
காலில்சிவ சக்கரமும் கையில்மால் சக்கரமும்
மேலில்சத்தி சக்கரமும் விழிசரசு சக்கரமும்
வாயு பகவான் வடிவுமிகப் போலே
ஆயும் பலகல்வி ஆராய்ந்த அச்சுதர்போல்
கண்கொள்ளாக் காட்சி கைமதலை தன்னழகு
விண்கொள்ளாக் காட்சி மெல்லியரே யிம்மதலை
இம்மதலை தன்னை எடுத்துநாம் தாலாட்டி
பொன்மதலை தன்னைப் போட்டுவைத்துப் போவோம்நாம்
என்றுசொல்லி மாதர் இருபேருஞ் சம்மதித்து
வண்டுசுற்று மெல்லி வந்தெடுத்தா ரம்மானை
மதலை தனையெடுத்து மார்போடு தானணைத்து
குதலை மொழியமர்த்திக் கோதைரண்டு மாமயிலும்
கயிலை யதுக்கேகி கறைக்கண்டர் பாதமதில்
மயிலனைய மாமயிலார் வந்தார்கா ணம்மானை
வந்த மாடவர்கள் மார்பி லமுதிளகி
அந்தப் பரமே சுரனா ரவரறிந்து
கன்னியரே உங்கள் கற்பு அகன்றதென்ன
மின்னித் தனங்கள் மெல்லியுட லானதென்ன
பச்ச நிறமேனி பால்வீச்சு வீசுதென்ன
அச்சமில்லாக் கொங்கை அயர்ந்துஉடல் வாடினதேன்
ஏதெனவே சொல்லுமென்று ஈசுரனார் தான்கேட்க
சூதகமாய் நின்ற தோகைபோல் வாடிநின்றார்

விருத்தம்

வாடியே மடவார் தாமும் மார்பதில் துகிலை மூடி
கோடியே அயர்ந்து ஏங்கிக் குருவதைப் பாரா வண்ணம்
நாடியே தாழ்ந்து பெண்கள் நாணியே நின்ற தன்மை
தேடியே மாயன் செய்தச் செயலென அறிந்தா ரீசர்

விருத்தம்

அறிந்தார் மாயன் சேயாகி அழுதே இரங்குங் குரலதினால்
செறிந்தார் குழலார் இவர்கள் சென்று சேர்த்தே யெடுத்து அணைத்ததுவும்
பறிந்தே யிவர்கள் நாணினதும் பால்தான் தனத்தில் பாய்ந்ததுவும்
அறிந்தே கன்னி யிருவரையும் அழித்தே பிறவி செய்தனராம்

விருத்தம்

பிறவி யதுதான் செய்யவென்று பெரியோ னுரைக்கப் பெண்ணார்கள்
அறவி யழுது முகம்வாடி அரனா ரடியை மிகப்போற்றித்
திறவி முதலே திரவியமே சிவமே உமது செயலைவிட்டு
இறவி யானா லெங்களுக்கு இனிமேல் பிறவி வேண்டாமே

விருத்தம்

வேண்டா மெனவே மெல்லியர்கள் விமல னடியை மிகப்போற்றி
மாண்டா ரெலும்பை மார்பணியும் மறையோன் பின்னு மகிழ்ந்துரைப்பார்
தூண்டாச் சுடரோன் திருமாலைச் சேயென் றெடுத்தச் செய்கையினால்
ஆண்டா ருமக்கு மகனாகி அதின்மேல் பதவி உங்களுக்கே

கம்சனின் கொடுங்கோல் ஆட்சி

விளக்கம்:

யதுகுலத்தின் அரசனாக இருந்தவர் சூரசேனன். இவரது புத்திரன் வசுதேவர். இவருக்கு தேவகர் என்பவரின் மகள் தேவகியை பெண் பார்த்து நிச்சயமாயிற்று. தேவகரின் அண்ணன் உக்ரசேனன் போஜகுல மக்களின்
மக்களின் ராஜாவாக இருந்தார். அவருக்கு ஒரு மகன் பெயர் கம்சன். தேவகி கம்சனின் சித்தப்பா மகள். கம்சன் தோற்றத்தால் தான் மனிதனே தவிர உள்ளத்தால் அசுரன். அரக்க குணம் கொண்ட கம்சன் கொடியக் குணத்தோடு வாழ்ந்தான் .அவனின் கொடியச் சட்டத்தினால் மக்கள் மிகவும் அவதிப்பட்டனர்.

தேவர்கள், ரிஷிகள், இந்திரன் ஆகிய அனைவரையும் அடிமைப்படுத்தி அரசாண்டான். வருண பகவானையும், வாயு பகவானையும் வஞ்சகத்தால் விலங்கு மாட்டிச் சிறை வைத்தான். சூரிய, சந்திரர்களையும் அடிமைச் செய்தான். திருமாலையும் எண்ண மாட்டான். திருமுறைகளையும் ஓதமாட்டான். கோவில்களை அழித்து விடுவான். குடிமக்களைக் கொடுமை செய்வான். தானமும் தர்மமும் கொடுப்பதில்லை. கடவுளை வணங்காதவன்.

நல்லதை அறியாதவன். புத்தியே இல்லாதவன். கடவுள் எல்லாம் நானே என்று கொடுங்கோல் ஆட்சிச் செய்து வந்தான். கம்சன் யாரையும் மதிக்காமல் இறைவனை வணங்காமல் ஆணவம் கொண்டு அதிகாரம் செய்துப் பூமியையே கழங்கப்படுத்தினான். எனக்கு எதிரியே இல்லை என்று நாட்டை ஆண்டு வந்தான்.

தேவகி ரோகினி மனுபிறப்பு

பூலோகத்தில் இப்படி இருக்க, தேவலோகத்தில் மிகவும் சிறப்புடன் விளங்கிய தெய்வகன்னியர்களில் தேவகி என்ற பெயர் பெற்றவரும் ரோகிணி என்ற கன்னிகையும், சேர்ந்துப் புகழ்பெற்ற பூலோக கங்கை நதியில் புனித நீராடி மகிழ்ந்தனர். அக்காவும், தங்கையும் பேரழகுடன் உயர்ந்த ஆடை ஆபரணங்கள் அணிந்து வரும் வழியில் மாயப் பெருமாள் அவர்களை ஏமாற்றும் எண்ணத்தோடு சிறு குழந்தை உருக்கொண்டுக கண்களைக் கவரும் விதமாக சின்னஞ்சிறு குழந்தையாக அழுது கொண்டிருந்தார்.

மாய பெருமானின் திருவிளையாடல் என்று அறியாத அக்காளும், தங்கையும் மதலையின் மேல் பரிவுக் கொண்டு மூத்தவளாகிய தேவகி, தங்கையாகிய ரோகிணியைப் பார்த்துச் சொல்வாள், அடியே தங்கையே அதோ பாரடி! அழகான ஒரு குழந்தைப் பார்ப்பதற்கு எவ்வளவு ரம்மியமாக ஜொலிக்கிறது. இப்படி பேரழகு வாய்ந்த ஆண் குழந்தையை கைலாயத்தில் கூட நான் பார்க்கவில்லை.

அதன் கண்களில் தென்படும் அடையாளங்களை பார். கால்களில் சிவபெருமானின் சக்கரமும், கைகளில் திருமாலின் சக்கரமும், உடம்பிலேயே சக்திதேவியின் சக்கரமும் ,அமைந்திருக்கின்ற சக்கரங்கள் எல்லாம் வாயு பகவானை போல் சுழல்வதை பார்த்தாயா? கண்களின் ஞானப் பார்வை சரஸ்வதியின் அழகை காட்டுகிறது. சுழன்று வரும் அம்பைப் போல் சுழல்வதை பார். கண்களால் பார்க்கக் கூசும் ஒளியுடன் திகழும் நட்சத்திரத்தை போல் காட்சி தருகிறது. அழகான குழந்தையை அள்ளி எடுத்து நாமும் கொஞ்சலாம்.

அதைத் தூக்கி விடலாம் என்று இருவரும் ஒரு மனம் கொண்டு அந்த சின்ன இடையை அசைத்து அன்னம் போல் நடந்து அருகில் சென்று எடுத்தார்கள். என்ன அதிசயம் எடுத்து மார்போடு அணைத்ததும், அவர்கள் கொங்கையிரண்டிலும் பால் சுரக்க, அதை அந்த குழந்தை குடித்தது. பால் குடித்த பிள்ளை தானே அழுகையை நிறுத்தியது. பிள்ளையை கீழே விட்டுவிட்டு இருவரும் கைலாயம் சென்று சிவபெருமானை வணங்கி நின்றார்கள்.

கற்புடைய பெண்கள் இரண்டுபேராகிய தெய்வகி, ரோகிணியின் தனத்திலிருந்து பால் சுரந்து வருவதைச் சிவன் ஞான அறிவால் தெரிந்து, தெய்வத் தன்மை வாய்ந்தக் கன்னியர்களே! மின்னிய உடம்போடுத்துருக்குடன் இருந்த நீங்கள், கற்பு இழந்து வாட்டமுடன் காணும் காரணம் என்ன? கன்னிமார்களே! உங்கள் உடம்பில் பால் வாடை வீசுவதன் காரணத்தை மறைக்காமல் உரைக்க வேண்டும் என்றுச் சிவன் கேட்டார்.

தேவகியும், ரோகிணியும் மனதில் கழங்கம் ஏற்பட்டதால் சிறகு ஒடிந்த பறவைகள் போல் இருவரும் பதுங்கி நின்றார்கள். முகம் வாடி சேலையினால்

இழுத்து தனம் இரண்டையும் மூடிக்கொண்டு பெருமானை வணங்காமல் ஓரமாக அமர்ந்து எண்ணி எண்ணி ஏக்கமிட்டு வாடினார்கள். இது மாயப் பெருமான் செய்தச் செயலால் விளைந்தது. பெருமான் குழந்தையாய் அழுதப்போது மனமிரங்கிய பெண்கள் குழந்தையை தூக்கி மார்போடு அணைத்து தன் கற்பை பறி கொடுத்தார்கள் என்பதைச் சிவபெருமான் தெரிந்து கொண்டார். இனிமேல் உங்களை மறுபிறவிச் செய்யப் போகிறேன் என்றார் சிவன். இதைக் கேட்டுக் கன்னியர் இருவரும் எங்களுக்கு மறுபிறவி வேண்டாம் என்று பணிவோடு அவருடைய பாதங்களில் விழுந்து அழுதார்கள்.

அழகிய பெண்களே! இது உங்களுக்கு விதிக்கப்பட்ட விதி, உங்கள் ஆசையின் விளைவாக ஒளிமயமாக விளங்குகின்ற திருமாலை சிறுக் குழந்தை என்றுத் தூக்கி எடுத்துக் கொஞ்சியக் காரணத்தினால் பூலோகத்தில் நீங்கள் பிறக்க வேண்டியதாகிவிட்டது. உங்கள் மனுப் பிறப்பில் உலகத்தையே உள்ளடக்கி காப்பாற்றும் திருமால் உனக்கு மகனாக பிறந்து அதனால் உயர்ந்த பெயரையும் புகழையும் அடைவீர்கள். இவ்வாறு சிவபெருமான் தேவகியையும், ரோகிணியையும் பூலோகத்தில் பிறவி எடுக்க வேண்டிய காரணத்தை விவரமாகச் சொன்னார்.

சிவபெருமான் சொன்ன மொழி கேட்டு மனநிறைவு இல்லாத கன்னிமார்கள் சிவனிடம் கூறுவார்கள், என் கண்ணுக்குள் கருமணியாய் இருந்து எண்ணங்களுக்குள் நுண் பொருளாய் காட்சி கொடுப்பவரே! மாய பெருமாள் எங்கள் சோதனை பார்ப்பதற்காக எடுத்த குழந்தை போன்ற மாய வேசத்தின் உண்மையை அறியாமல் கற்பு நெறி தவறி விட்டக் காரணத்தினால் மானிடப் பிறவியாக எங்களைப் பிறவிச் செய்ய வேண்டாம்.

எங்கள் தாயாய் விளங்குகின்ற அம்மை பார்வதி தேவியின் பக்கத்தில் இருக்கும் பாக்கியம் தந்து, உம்மையும் தொழுது வணங்கி பணிவிடைகள் செய்ய விரும்புகிறோம். ஆகையால் எந்த பலனும் இல்லாது அழித்துவிடும் மனிதப் பிறவி இனி மேல் வேண்டவே வேண்டாம் என்று அழுதார்கள்.

## DAY 27

நடை

மெல்லியரே உங்களுட மெய்வரம்பு தப்பினதால்
செல்ல ஏதுவாச்சு சீமையிலே யம்மானை
என்றே அரனார் இருகன்னி யோடுரைக்க
அன்றே மடவார் ஆதிதனை நோக்கி
ஆதியே நாதி ஆனந்த மெய்ப்பொருளே
சோதியே நாதி சொரூபத் திருவிளக்கே
அல்லாய்ப் பகலாய் ஆரிருளாய் நிற்போனே
வல்லாய்ப் புவியை வார்த்தையொன் றாற்படைத்த
ஆதிப் பொருளே அனாதித் திருவுளமே
சோதிப் பொருளே சொல்லொணா தோவியமே

எட்டாப் பொருளே எளியோர்க் கெளியோனே
முட்டாத செல்வ முதலே முழுமணியே
கண்ணுள் மணியே கருத்தினுள் ளானவனே
பெண்ணு மாணாகிப் பிறப்பில்லா நின்றோனே
இறப்புப் பிறப்பில்லாத எளியோர்க் கெளியோனே
பிறப்பு இறப்பில்லாத பேசமுடி யாதவனே
கருவிதொண்ணூற் றாறும் காவலைந்து பேருடனே
உருவு பிடித்து உயிர்ப்பிறவி செய்வோனே
மூவரு முன்றன் முடிகாண மாட்டாமல்
தேவருந் தேடித் திரிந்தலைய வைத்தோனே
மவ்வவ் வாகி வருந்தியவ்வும் ஒவ்வாகி
செவ்வவ் வாய்நின்ற சிவனே சிவமணியே
மாய னெடுத்த மகவான கோலமதை
நேய மறியாமல் நெறிதவறிப் போனதினால்
பின்னேநீ ரெங்களையும் பிறவிசெய்ய வேண்டாங்காண்
எந்நேரங் கயிலை இப்பூமி யானதிலே
தெய்வப் பசுப்போல் தேவரீ ரெங்களையும்
மெய்யறிவு கூடி மிகப்புடையு மேலோனே
அல்லாதே போனால் அடியார்க ளெங்களையும்
இல்லாதே செய்யும் இனிப்பிறவி வேண்டாங்காண்
அம்மை உமையாள் அருகே மிகஇருந்து
உம்மையும் போற்றி உம்மூழி யங்கள்செய்து
பூவுலகில் நாங்கள் பெண்ணாய்ப் பிறந்ததுண்டால்
பாவிகட்கு வேலைப் பண்ணி முடியாதே
பூவு முடித்துப் பூமேடை யும்பெருக்கி
நாவுலகு மெய்க்க நல்லகவி தான்பாடி
தம்புரு வீணை சப்தக் குழலுடனே
இன்புருக ராகம் இசைந்தமுறை தானிகழ்த்தி
நரசென்மம் வாழும் நசுரக் குலங்களிலே
அரசேநீ ரெங்களையும் அழுந்தப் படையாதேயும்
இப்படியே கன்னி இரங்கி யழுதிடவே
அப்படியே கன்னி அவர்களுக் காதியுந்தான்
சொல்லுவார் வேதச் சுடரோ னதிசயித்து
நல்லதுகாண் பெண்ணே நம்மைரண்டுஞ் சொல்லாதே
மாயன் துவாபர வையகத்தில் போய்ப்பிறக்க
உபாயமாயுங்களையும் முறைதாய்தானாக்க
வாயமிட்டா ருங்களையும் மாதா வெனவாக்க
நாமென்ன செய்வோம் நவ்விமால் செய்ததற்குப்
போமெனன ஈசர் பிறவிசெய்தா ரம்மானை
வாயு மகாதேவன் வடிவென்ற இச்சையினால்
பாசமுறவாட பைங்கிளியே உங்களுக்கு
ஆசையா லுங்களுக்கு அவனே புருஷனென்றார்
சங்கு சரங்கொண்ட தம்பியென்ற இச்சையினால்
அங்குப் பகவதியும் அச்சுதரு முங்களுக்கு
மதலையென வந்துதிப்பார் வையமது கொண்டாட
குதலை மொழியாரே கொம்பே றிடையாரே

விலங்குச் சிறையும் மிகுசிறையு முங்களுக்கு
மலங்குவது மெத்த மாய்ச்சலுண் டாகியபின்
ஸ்ரீகிருஷ்ண னாகத் திருமா லுதித்தபின்பு
குறுக்கிட்ட தோசம் கொடுமை மிகத்தீர்ந்து
பின்னே பதவிப் பேறுண்டு முங்களுக்கு
மின்னே ரொளியை விமலன் பிறவிசெய்தார்
பிறவியரன் செய்யப் பிறந்தார்கள் பூமியிலே
திறவியது விட்டுத் தேவகியும் ரோகணியும்
மதுரைதனில் வந்து மாபாவிக் கஞ்சனுக்கு
இருதையல் மாமயிலார் ஏற்ற பிறப்பெனவே
கூடப் பிறந்தால் கொடியதோ சமெனவே
தேட வொருராசன் சிறுவி யெனப்பிறந்தார்

விளக்கம்:

கன்னிமார்கள் கண் கலங்கிக் கண்ணீர் விட்டதைக் கண்ட சிவபெருமான், பெண்களே இனி வரப்போகும் துவாபர யுகத்தில் மாய பெருமாளும் மனிதனாக பிறப்பு எடுக்கப் போகிறார். மனிதனின் வாழ்வுக்கு வழிகாட்டும் நாயகனாய் இருந்து வாழும் மக்களுக்கு நல்வழிக் காட்டுவார். உங்களையும் பூலோகத்தில் பிறவிச் செய்வதால் அவர்களுக்கு குழந்தையாக பிறந்து தாயான உறவுக் கொண்டு மடியில் தவழ்ந்து உறவாடுவார்.

விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ள மாயப் பெருமான் செய்தச் செயலுக்கு நீங்களும் பூலோகத்தில் பிறக்கவேண்டும். பெருமானாகியக் குழந்தை வடிவத்தையும் அதன் உடம்பில் அடையாளங்களையும் கண்டு புகழ்ந்துக் சக்கரங்கள் வாயு பகவானை போல் சுழல்கிறது என்று இரசித்து ஆசையோடுச் சொன்னக் காரணத்தினால் அந்த வாயு பகவானே உங்களுக்குக் கணவர் ஆவார்.

சங்குச் சக்கரங்களோடுத் திருமாலைப் போன்று என்று வர்ணித்ததாலும், பகவதியின் சக்தி சக்ரம் என்றுப் புகழ்ந்ததாலும் பகவதியும், திருமாலும் உங்களுக்குக் குழந்தைகளாகப் பிறப்பார்கள். அந்த குழந்தைகளின் பிறப்பால் உங்களைப் பூலோக மக்கள் வணங்கி வரவேற்பார்கள். புகழ்ந்து கொண்டாடுவார்கள். கொடிப் போன்ற மெல்லியக் இடையோடு அழகுடன் திகழ்வீர்கள். பொல்லாங்கு காரணத்தினால் உங்கள் கை, கால்களில் விலங்கு மாட்டிச் சிறை வாழ்க்கையும் ஏற்று வேதனை அடைந்து மனம் வாடிப் போகும்போது ஸ்ரீகிருஷ்ண பெருமாளாகத் திருமால் வந்துப் பிறப்பார்.

ஆயர் பிறக்கையில் நல்ல காலமும் ஆனந்த வாழ்வு உண்டாகும். மனிதப் பிறவியில் உங்கள் தோஷங்கள் எல்லாம் தீர்க்கப்பட்டு முக்தி நிலையை அடைந்துக் கைலாயம் செல்வீர்கள் என்று அருள் கொடுத்து, சிவன் பிறவிச் செய்ய பூலோகத்தில் மனித வாழ்க்கை வாழ பிறந்தார்கள்.

# DAY 28

பிறந்தே தான்கஞ்சனுக்குப் பிறப்பெனவே பேசும்வளம்
சிறந்தே யிவர்கள் திருத்தமாய் வாழுகையில்
இப்படியே கஞ்சன் இவர்களிரு தங்கையையும்
அப்படியே கூட்டி அவன்வேட்டை யாடிவர
அம்மரமானதுதான் ஆறாண்டு கழித்தபின்பு
செம்மையுள்ள ஓர்பழம்தான் சிவனருளால்பழுக்கும்
அதைஎடுத்து புசிப்பார் அரனார் சாபப்படியே
இதைப் பறிக்கவென்று இயல்பாய் வருகையிலே
மாமுனிவன் தனக்கு வாய்த்திருந்த மாம்பழத்தைத்
தாமுனிந்து கஞ்சன் தானக்கனி பறித்துத்
தங்கையர்க்குத் தானீந்தான் சயோகமுனி யறிந்து
மங்கையர்க்கு வந்த மகனா லழிவையென்று
மாயனுட ஏவலினால் மாமுனியு மப்போது
பாயமுள்ள கஞ்சனுக்குப் படுசாப மிட்டனனே
சாபமது கஞ்சன் தானறியா வண்ணமுந்தான்
பாவமேநாடோறும் பண்ணிவரும் நாளையலே
வேதியனைத் தான்வருத்தி மிகுத்த கேடுள்ளகஞ்சன்
சோதிரியங் கேட்கத் தொடர்ந்தான்கா ணம்மானை
அப்போது சோதிரிஷி அந்தமுனி சாபமதால்
எப்போது ஆகிடினும் இடுக்கம்வரு மென்றுரைத்தான்
சோதிரியங் கேட்டுத் துக்கமுற்றுக் கஞ்சனுந்தான்
வேதி யனையனுப்பி மிகுத்தகே டுள்ளகஞ்சன்
கலியாணஞ் செய்யக் கருத்தல்ல வென்றுசொல்லி
வலியான கஞ்சன் வைத்திருந்தா னம்மானை
அந்தநல்ல செய்தி அறிந்தந்த நாரதரும்
வந்துகஞ் சன்தனக்கு வளப்பமெல்லாஞ் சொல்லலுற்றார்
கேளாய் நீகஞ்சா கீர்த்தியுள்ள சாஸ்திரங்கள்
வாழாத மங்கையரை வைத்திருந்தால் ராச்சியத்தில்
தர்மந் தலைகெடுங்காண் சாஸ்திரத்துக் கேராது
வற்மம் வந்துசிக்கும் மாரியது பெய்யாது
கோத்திரத்துக் கேராது குடும்பந் தழையாது
சூத்திர நோய்கள் சுற்றுமடா அக்குடும்பம்
மானம் வரம்புகெட்டு மனுநீதி தானழிந்து
ஊனமடா அக்குடும்பம் உலகத்துக் கேராது
கோட்டை யழியும் குளங்கரைகள் தானிடியும்
நாட்டை முடிக்குமடா நல்லகன்னி காவல்வைத்தால்
பொன்னான சீதை பிலத்தகற் பானதிலே
கண்ணான இலங்கை கரிந்ததுவுங் கண்டிலையோ
இப்படியே வேதம் இயம்பி யிருப்பதினால்
அப்படியே பெண்ணார் அவர்கள்ரண்டு பேரையுந்தான்
காவலிட்டு வைத்தால் கற்பதினா லுன்றனக்குப்
பாவம்வந்து சுற்றும் பலிக்குமடா வேதமது
ஆனதால் பெண்கள் அவர்கள்ரண்டு பேரையுந்தாம்
மானமுள்ள மன்னனுக்கு மணஞ்செய்து தான்கொடுத்துக்

கெற்பமது உண்டாகிக் கீழே பிறக்கையிலே
அப்போநீ கொன்றாலும் ஆனாலும் பாரமில்லை
என்றுஅந்த நாரதரும் இத்தனையும் தான்கூற
நன்று மொழியெனவே நவ்வியே கஞ்சனுந்தான்
எனக்குப் படிப்புரைத்த ஏற்றவசு தேவன்
தனக்கு இவர்களையும் தான்சூட்ட வேணுமென்று
வேணுமென்று சீரோடே விரும்பிவசு தேவனுந்தான்
வாணுவங்க ளோடே வந்தான் மதுரையிலே
தேவகியை ரோகணியைச் சிறப்பா யலங்கரித்து
வைபோக முள்ளவசு தேவனையு மொப்பிவித்துச்
சங்கீதத் தோடே தையல்ரண்டு பெண்களையும்
மங்களத் தோடே வசுதேவன் தாலிவைத்துக்
கட்டிக் கைபிடித்துக் கனசீ தனத்தோடே
கொட்டித் திமிர்த்தூதும் குழலோடே வீற்றிருந்தான்
வாழ்ந்திருந்து பெண்கள் வயிறு வளருகையில்
ஆய்ந்தறிந்து கஞ்சன் அருவிலங்கில் வைத்தனனே
தெய்வகியாளு மழுது சிந்தைமுகம் வாடிருப்பாள்
மெய்யன் வசுதேவன் மிகக்கலங்கி தானிருப்பான்
மங்கைநல்லாள் ரோகணியும் வாடி யழுதிருப்பாள்
சங்கையுள்ள தேவர்களும் தையல்தெய்வக் கன்னியரும்
எல்லோருங் கஞ்சனுட இடுக்கமது தன்னாலே
அல்லோரு மெத்த அறமெலிந்தா ரம்மானை

தேவகியும். ரோகினியும் மாயத், திருமாலின் குழந்தை வடிவம் கண்டு மயக்கம் கொண்டதால், இருத்தெய்வக் கன்னியர்களையும் பூலோகத்தில் மனித பிறவி எடுத்து, அயோத்தியில் உள்ள மதுரையில் அரக்கனாகிய கமிஷனுக்கு தங்கை முறை [வளர்ப்பு தங்கை யாக] வளர்ந்தார்கள். அரக்க குணம் கொண்டவையாக இருந்தாலும் அவனுக்கு இதயத்தில் பாசம் அப்போது இருந்திருக்கின்றது. அந்த பாசத்தினால் உடன்பிறப்புகள் ஆக நினைத்து அன்போடு எங்கும் அழைத்துச் செல்வான். ஒருநாள் கம்சன் வேட்டையாடச் செல்லும் போது தங்கை இருவரையும் அழைத்துச் சென்றான்.

அங்குச் சயோக முனித் தியானத்தில் இருந்தார். மாமரம் ஒன்றில் அவர் உண்பதற்காக ஒரு மாங்கனி மரத்தில் கண்ணை கவரும் வண்ணம் பழுத்துக் காட்சிக் கொடுத்தது. அந்த மாங்கனியைப் பறித்துத் தன் தங்கைகளுக்குக் கொடுத்தான். சயோக முனிவர் தியானம் முடிந்து உண்பதற்காக மாங்கனியைப் பறிக்கச் சென்றார். மாம்பழம் பறிக்கப்பட்டு இருந்ததால், இதை யார் பறித்து இருப்பார்கள் என்று நோக்கினார். அவ்வேளை கம்சன் அந்த மாங்கனியைப் பறித்துத் தங்கைகளுக்குக் கொடுத்து , அவர்கள் அதைச். சாப்பிட்டு விட்டார்கள் என்பதை அறிந்து கடும் கோபம் கொண்டார்.

முனிவர் இந்த பழத்தை நான் சாப்பிட அல்லவா வைத்திருந்தேன். நீ பறித்து உன் தங்கைகளுக்குக் கொடுத்தாயே! இந்தப் பழத்தைச் சாப்பிட்டப் பெண்களுக்குப் பிறக்கும் மகனால் நீ மரணம் அடைவாய் என்றுக் கோபத்தோடுச் சபித்தார். இதுவும் அந்த மாய பெருமானின் மாய விளையாட்டே ஆகும்.

முனிவர் இட்டச் சாபத்தைப் பொருட்படுத்தாத கம்சன் அதை மறந்துவிட்டான். கம்சனின் கொடுமையும் கொடுங்கோல் ஆட்சியும் நடந்ததால் மக்கள் மிகவும் அவதிப்பட்டனர். காலம் ஓடியது. ஒருநாள் தங்கைகளின் திருமணம் பலனைப் பார்க்க ஜோதிடனை அழைத்து, ஜாதகத்தைப் பார்த்துப் பலன்களை அறிய விரும்பினான். ஜாதகத்தை பார்த்த ஜோதிடர்கள், பெண்களின் முன் வினைகளை பற்றியும், முனிவரின் சாபம் பற்றியும், தங்கையின் வயிற்றில் பிறக்கும் பிள்ளையால் கம்சனுக்கு மரண அழிவு வரும் என்று விபரமாய் கூறினார்.

ஜோதிடர் வாக்கைக் கேட்டக் கம்சன் அறிந்து மிகவும் சஞ்சலப்பட கொடூரக் குணம் உள் கம்சனின் தங்கை பாசம் குறைந்தது. திருமணம் பேசி நான் கன்னிகாதானம் செய்துக் கொடுத்தால் தானே இவர்கள் வயிற்றில் என்னைக் கொல்லும் பிள்ளைப் பிறப்பான் என்று எண்ணம் கொண்டு திருமணச் சடங்கு நடத்தும் முறையை நிறுத்தி வைத்தான். அன்புகாட்டி ஆதரித்த தங்களிடம் கொடூரமாக நடந்தக் கொடுமைகள் செய்தான். தேவகி ரோகிணியை கம்சன் கொடுமைச் செய்த செய்தி தேவலோகம் முதல் கைலாயம் வரை எட்டியது.

தேவரிஷி நாரதர் மதுராவிற்கு வந்து கம்சனிடம், பல அறிவுரைகளை உரைத்தார். அவர் கம்சா பெண்களை கல்யாணம் செய்து கன்னிகாதானம் செய்துக் கொடுக்காமல் வீட்டில் பூட்டி வைத்திருப்பது பெரும் பாவமான செயலாகும். இது பற்றி புகழ்பெற்ற வேதநூல் சாஸ்திரங்கள் கூறுவது என்னவென்றால், நேரம் வந்ததும் கன்னியர்களுக்குத் திருமணம் செய்யாவிட்டால் நாட்டிற்குத் தீமை என்றுக் கூறுகிறது.

மற்றும் அது தர்மத்தை சீர்குலைக்கும் நாட்டு மன்னர்களுக்குக் கேடு நேரிடும். அது குலத்திற்கு ஆகாதச் செயல் ஆகும். கன்னியர்கள் வீட்டிலிருந்து ஏங்குவதால் துன்பமும் பீடையும் நேரிடும் . கர்ம வினைகளும் தொடர்ந்து நிம்மதி இல்லாத மன நிலையையும் தரும். அவமானமும், வீண் வம்புகளும் வந்துச் சேரும். குடும்பத்திற்கு கெட்ட பெயரும் மற்றவர்களால் அவதூறான பேச்சையும் கேட்கின்ற நிலைமை வரும். கன்னிப் பெண்களை மணமுடித்துக் கொடுக்காமல் வீட்டில் வைப்பதால் பத்தினித்தன்மையானது சுட்டெரித்து விடும். சீதையை சிறை வைத்ததும் அந்த பத்தினி சாபத்தால் இலங்கை
எரிந்தது எல்லோரும் அறிந்த உண்மையாகும். வேதச் சாஸ்திரங்களும் இது போன்ற பல உண்மைகளை கருத்துக்களைச் சொல்லுகின்றன. எனவே உன் அன்பு தங்கைகளுக்குத் திருமண ஏற்பாடுச் செய் என்றுக் கூறினார் நாரதர்.

தேவகி ரோகினி திருமணம்

திருமணமாகிய பின் அவர்கள் கருவுற்று குழந்தை பிறக்கும். அந்த சமயத்தில் பார்த்துக்கொள்ளலாம். அப்பொழுது தேவைப்பட்டால் நீ அவர்களை கொன்றாலும் பாதகமில்லை. தோஷமும் உன்னை சாராது போகும் என்றார் நாரத முனிவர். நாரதர் கூறிய அறிவுரைகளை நம்பிக்கையோடு கம்சன் ஏற்றுக்கொண்டான். ஆகையால் தேவகிக்கும் ஏற்ற கணவனைத் தேட எண்ணம் கொண்டான். கம்சனுக்கு கற்றுத்தந்த ஆசிரியராகிய வாசுதேவன் என்பவர் நம் தங்கைகளுக்கு ஏற்றவர் என்று நினைத்தான். வசுதேவருக்கு தங்கையை திருமணம் செய்துக் கொடுக்க கம்சன் தீர்மானித்து அவருக்கு ஓலை அனுப்பினான்.

வசுதேவர் தன்னுடைய உற்றார், உறவினர்களோடு மங்கல வாத்தியங்களுடன் பெண் கேட்க திருமணத்தாம்பூலத்துடன் சுபலக்கணமான சுபவேளையில் பெண் கேட்க வந்தார். திருமணம் உறுதியானது. தெய்வலோக கன்னியர்களாகிய தேவகியையும், ரோகணியையும் தேவதை போல் அலங்காரம் செய்தார்கள். கூர்மையான புத்தியும் ஞானமும் உள்ள வசுதேவரையும் மணக்கோலத்தில் அலங்கரித்து பெண்களையும் வருவித்து மங்கல இசை ஒலிக்க மங்களகரமானச் சுபமுகூர்த்த வேளையில் கம்சனின் தங்கையான தேவகியைக் கைப்பிடித்தார் வசுதேவர் தாலிக் கட்டிக் கைபிடித்துச் சீர்வரிசைகளை புறப்படத் தயாரானார்கள்.

தேவகிக்கு ஏகப்பட்ட சீர் வரிசையை அள்ளிக் கொடுத்தார் தேவகர். திருமணம் முடிந்தவுடன் மணமக்களை, மணமகளின் சகோதரன் அவளது புகுந்த வீட்டில் கொண்டு விடுவது அக்கால வழக்கம். தேவகிக்கு உடன்பிறந்த சகோதரர்கள் இல்லையென்பதால், பெரியப்பா மகன் கம்சன் தன் தங்கையை தேரில் அழைத்துச் சென்றான். மின்னல் வேகத்தில் குதிரைகள் பறந்து கொண்டிருந்தன.

அப்போது, வானம் அதிர்ந்தது. அங்கிருந்து ஒரு குரல் எழுந்தது. நில்லு கம்சா! போஜகுலத்தின் இளவரசனை இவ்வளவு தைரியத்துடன் பெயர் சொல்லி ஒருமையில் அழைத்து, தடுத்து நிறுத்திய மாயக்குரலே.. யார் நீ ? என்ற கம்சனுக்கு பதிலாக பயங்கர சிரிப்பொலி வானிலிருந்து எழும்பியது. மூடனே ! எமனுக்கு யாராவது தேரோட்டுவார்களா ? உன்னைப் போல் மடையர்கள் தான் உண்டா ? யார் அந்த எமன் என்கிறாயா ? உனது சகோதரியின் வயிற்றில் பிறக்கப்போகும் எட்டாவது குழந்தை தான் அது, குரல் அடங்கிவிட்டது.

கம்சன் ஆவேசமானான். அத்தனை நாளும் ஊட்டி வளர்த்த அன்புத்தங்கையுடன் விளையாடிய காலத்தை மறந்தான். அவளுக்கு அன்று தான் திருமணமே நடந்திருக்கிறது என்பதையும் மறந்தான். இந்த உலகத்து இன்பங்களையெல்லாம் எப்படி எப்படியோ துய்க்க வேண்டுமென கனாக்கண்டு கொண்டிருக்கும் நான் மடிவதா ? ஏ தேவகி ! கேட்டாயா

அசரீரியின் குரலை ! ஒழிந்துபோ ! என்பவனாய், வாளை உருவினான்.புது மணப்பெண்ணைக் கொல்வதற்கு கம்சன் வாளுடன் பாய்ந்ததைக் கண்ட வசுதேவர் கம்சனைத் தடுத்தார். மைத்துனரே ! நீர் வீரத்தில் வல்லவர். உம்மை அழிக்க யாரால் இயலும் ? அசரீரி சொல்வது உண்மையே ஆனாலும் கூட, தேவகி அதற்கு எப்படி பொறுப்பாவாள் ? அவளுக்கு பிறக்கும் எட்டாவது குழந்தையால் தானே உமக்கு ஆபத்து ! நான் அவளுக்கு பிறக்கும் அத்தனை குழந்தைகளையும் உம்மிடம் ஒப்படைத்து விடுகிறேன்.

அவர்களை என்ன வேண்டுமானாலும் செய்யும். மேலும் மரணத்தைக் கண்டு நீர் அஞ்சுவீர் என நான் கனவிலும் எண்ணவில்லை. மரணத்தைக் கண்டு மனிதன் ஏன் பயப்பட வேண்டும் ? மரணம் என்பது நிச்சயிக்கப்பட்ட ஒன்று. அது எல்லாருக்கும் வந்து சேரும். அது எந்தநாள் என்பதும் குறிக்கப்பட்ட ஒன்றுதான். அப்படியிருக்க, தைரியசாலிகள் மரணத்தைக் கண்டு அஞ்சுவார்களா ? தேவகியின் குழந்தையால் இல்லாவிட்டாலும், என்றாவது ஒருநாள் உமக்கு மரணம் சம்பவிக்கத்தானே போகிறது.

உனக்கு வயது 25 என்றால், நீர் ஏற்கனவே 25 ஆண்டுகள் இறந்து விட்டீர். மனிதன் தான் கடந்து செல்லும் ஒவ்வொரு விநாடியும் மரணத்தின் வாசலை நோக்கித்தானே நகர்ந்து கொண்டிருக்கிறான்! இந்த உண்மையை நீர் அறிந்திருந்தும், இவ்வாறு செய்வது முறையானதாக தெரியவில்லை, என பணிவு கலந்தது போலும், அதே நேரம் அழுத்தமாகவும் தெரிவித்தார்.கம்சன்கோபம்தணிந்தார்.

வசுதேவரே ! உமது சமாதானத்தை ஏற்கிறேன். நீர் உமது எட்டாவது குழந்தையை என்னிடம் தந்துவிடுவீர் என்பதை நான் அறிவேன். ஏனெனில், நீர் சத்தியசீலர், என்ற கம்சன் அவர்களை வீட்டில் கொண்டுபோய் விட்டான். காலம் ஓடியது. தேவகி முதல் குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தையுடன் கம்சனின் அரண்மனைக்குச் சென்றார் வசுதேவர். கம்சன் ஆச்சரியப்பட்டான். வசுதேவரே ! உலகில் சொன்ன சொல் காப்பாற்றுபவர்கள் மிகவும் குறைவு. நீர் உயர்ந்த ஆத்மா என்பதை நிரூபித்து விட்டீர். என் பாசத்திற்குரியவரே ! உமது பண்பை மதிக்கிறேன்.

இந்தக் குழந்தை எனக்கு வேண்டாம். உமது எட்டாவது குழந்தை தான் என்னைக் கொல்லும் என்ற விதி இருக்கிறது. எனவே, இந்தக் குழந்தையை நீரே வளர்த்துக் கொள்ளும், என்று சொல்லி மகிழ்ச்சியுடன் அனுப்பி வைத்தான். வசுதேவர் சென்றதும், நாரதர் கம்சனைக் காண வந்தார். கம்சன் அவரை வரவேற்று ஆசனமளித்து உபசரித்தான். அவர் கம்சனிடம், உன் மீது கொண்ட அன்பின் காரணமாக நான் ஒரு ரகசியத்தை உனக்குச் சொல்கிறேன். தேவகிக்கு எட்டாவது குழந்தை பிறக்கப்போவது உறுதி. அது விஷ்ணுவின் அவதாரம் என்பதைத் தெரிந்து கொள்.

அதற்கு முன்னதாக யது குலத்தில், தேவர்களே குழந்தைகளாக வந்து பிறக்கப் போகிறார்கள். உன் தங்கைக்கு பிறந்த முதல் குழந்தையும், இனி பிறக்கப்போகும் குழந்தைகளும் எட்டாவது குழந்தைக்கு உதவி செய்வதற்காகவே பிறக்கப் போகின்றன. எனவே, நீ உன் தங்கைக்கு பிறக்கும் குழந்தைகளைக் கொன்றுவிடு. அதில் எது விஷ்ணு அம்சமுடையது என்று

கண்டுபிடிப்பது கஷ்டம், என்று தூபம் போட்டார். அவ்வளவு தான் ! கம்சனின் மிருக குணம் தலைதூக்கி விட்டது. நாரதரே ! காலம் முழுவதும் நான் உமக்கு கடமைப்பட்டவன். இனி என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும், என்றவன், யாரங்கே ! உடனே வசுதேவரையும், தேவகியையும் கைதுசெய்து பாதாள சிறையில் அடையுங்கள், என்றான். சில மணி நேரத்தில் வசுதேவரும், தேவகியும் சிறையில் தள்ளப்பட்டனர்.கம்சனுக்கு பயம் அதிகமானது. முனிவரின் சாபம், அசரீரி குரல் கம்சனை மிகவும் அச்சுறுத்தியது.

கம்சன் மிக மோசமான நிலையில் ஏராளமானக் கொடுமைகளை உயிர் பயத்தால் செய்தான். அவன் அவனையே நம்பாமல் பல சட்டதிட்டங்களை மக்களுக்கும், தேவர்களுக்கும் விதித்தான். தேவர்கள் மிகவும் கவலைக் கொண்டார்கள். திருமணமாகி மாயப் பெருமானிடம் திருமாலாகிய பெருமாளிடம் அதையும் கேட்க எல்லோரும் ஒன்று சேர்ந்து எம்பெருமானாகிய பரம்பொருளை நினைத்து தன் துயரங்களைக் கூறி முறையிட்டார்கள்.

# DAY 29

இப்படியே செய்யும் இடுக்கமதுக் காற்றாமல்
அப்படியே மாயனுக்கு அபயம் அமரரிட

தேவர் முறையம்

நிலந்தேவி ஆகாய நீர்தேவி யார்கூடி
தலந்தேவி மன்னன் தனக்கே யபயமிட
தேவாதி தேவர் தேவிமுறை யாற்றாமல்
மூவாதி முத்தன் முழித்தார்காண் பள்ளியது
கண்டுதே வாதிகளும் கன்னி புவிமகளும்
விண்டுரைக்கக் கூடாத விமல னடிபோற்றி
ஆதியே நாதி அய்யாநா ராயணரே
சோதியே வேதச் சுடரே சுடரொளியே
பத்தர்க்கு நித்தா பரனேற்றார்க் கேற்றோனே
சித்தர்க்குச்சித்தா செயலொத்தார்க்கேத்தோனே
மூவர்க்கு மாதி முழுமணியாய் நின்றோனே
தேவர்க்கும் நல்ல சிநேகமாய் நின்றோனே
கிட்டவரார்க் கெட்டாத கிருஷ்ணாவுன் நற்பதத்தைக்
கட்டவரு மட்டான கருணா கரக்கடலே
உச்சிச் சுழியே உம்மென் றெழுத்தோனே
அச்சிச் சுழியே அம்மென் றெழுத்தோனே
அஞ்செழுத்து மூன்றெழுத்தும் ஆதிஅ வென்றெழுத்தும்
நெஞ்செழுத்து மெட்டெழுத்தும் நீயாகி நின்றோனே
எண்ணொருபத் தெண்ணிரண்டும் இவ்வே நடுவாக
ஒண்ணெழுத்தாய் நின்ற உடைய பெருமாளே
தண்டரளத் தூணாகித் தருவைந்து பேராகி
மண்டலத்துள் ளூறலுமாய் மயமுமாய் நின்றோனே
போக்கு வரத்துப் புகுந்துரண்டு கால்வீட்டில்
நாக்குரண் டுபேசி நடுநின்ற நாரணரே
அல்லாய்ப் பகலாய் ஆணாகிப் பெண்ணாகி
எல்லார்க்குஞ் சீவன் ஈயுகின்ற பெம்மானே
பட்சிப் பறவை பலசீவ செந்துமுதல்
இச்சையுடன் செய்நடப்பு இயல்கணக்குச் சேர்ப்போனே
ஒருபிறப்பி லும்மை உட்கொள்ளாப் பேர்களையும்
கருவினமா யேழு பிறப்பிலுங் கைகேட்போனே
ஆறு பிறப்பில் அரியேவுன்னைப் போற்றாமல்
தூறு மிகப்பேசித் தொழாதபே ரானாலும்
ஏழாம் பிறப்பிலும்மை எள்ளளவுதா னினைத்தால்
வாழலா மென்றவர்க்கு வைகுண்ட மீந்தோனே
இப்படியே ஏழு பிறப்பதிலும் உம்மையுந்தான்
அப்படியே ஓரணுவும் அவர்நினையா தேயிருந்தால்
குட்டங் குறைநோய் கொடியகன்னப் புற்றுடனே
கட்டம் வந்து சாக கழுத்திற்கண்ட மாலையுடன்

தீராக் கருவங்கும் தீன்செல்லா வாய்வுகளும்
காதா னதுகேளார் கண்ணே குருடாகும்
புத்தியற்று வித்தையற்றுப் பேருறுப்பு மில்லாமல்
முத்திகெட்ட புத்தி முழுக்கிரிகை தான்பிடித்துப்
பிள்ளையற்று வாழ்வுமற்றுப் பெண்சாதி தானுமற்றுத்
தள்ளையற்று வீடுமற்று சப்பாணி போலாகி
மாநிலத்தோ ரெல்லாம் மாபாவி யென்றுசொல்லி
வானிழுத்து மாண்டு மறலியுயிர் கொள்கையிலே
நாய்நரிகள் சென்று நாதியற்றான் தன்னுடலைத்
தேயமது காணத் திசைநாலும் பிச்செறிந்து
காக்கை விடக்கைக் கண்டவிடங் கொண்டுதின்னப்
போக்கடித்துப் பின்னும் பொல்லாதான் தன்னுயிரை
மறலி கொடுவரச்சே வலியதண் டாலடித்துக்
குறளி மிகக்காட்டிக் கொடும்பாவி தன்னுயிரை
நரகக் குழிதனிலே நல்மறலி தள்ளிடவே
இரைநமக் கென்று எட்டிப் புழுப்பிடித்து
அச்சுத ரைநினையான் அய்யாவைத் தானினையான்
கச்சி மனதுடைய காமாட்சியை நினையான்
வள்ளிக்குந் தேவ மாலவருக் காகாமல்
கொள்ளிக்குப் பிள்ளையில்லாக் கொடும்பாவி யென்றுசொல்லி
எவ்வியே அட்டை எழுவாய் முதலைகளும்
கவ்வியே சென்று கடித்துப் புழுப்பொசிக்கும்
என்றுநீ ரேழு இராச்சியமுந் தானறிய
அன்று பறைசாற்றி அருளிவைத்த அச்சுதரே
வானமது பூமியிலே மடமடென வீழாமல்
தானவனே உன்விரலால் தாங்கிவைத்த பெம்மானே
வாரி வரம்பைவிட்டு வையகத்திற் செல்லாமல்
காரியமாய்ப் பள்ளி கடலில் துயின்றோனே
மானம் வரம்பு மகிமைகெட்டுப் போகாமல்
ஊன மில்லாதே உறும்பொருளாய் நின்றோனே
சீவனுள்ள செந்துகட்குத் தினந்தோறு மேபொசிப்புத்
தாவமுட னீயுகின்ற தர்மத் திறவோனே
வலியோ ரெளியோர்க்கும் மண்ணூருஞ் செந்துகட்கும்
கலிதீர ஞாயம் கண்டுரைக்கும் பெம்மானே
சீவசெந்துக் கெல்லாம் சீவனுமாய் நின்றோனே
பாவமும் புண்ணியமாய்ப் பாராகி நின்றோனே
கண்ணாகி மூக்குக் கருணா கரராகி
மண்ணாகி வேத மறையாகி நின்றோனே
சாத்திரமும் நீயாய் சந்திரனும் நீயாகிச்
சூத்திரமும் நீயாய் சுழியாகி நின்றோனே
நட்சேத்தி ரமாகி நாட்கிரகம் நீயாகி
இச்சேத்தி ரமாய் இருக்குகின்ற பெம்மானே
மெய்யனுக்கு மெய்யாய் மேவி யிருப்போனே
பொய்யனுக்குப் பொய்யாய்ப் பொருந்தி யிருப்போனே
இமசூட் சமாகி ஏகம் நிறைந்தோனே
நமசூட் சமான நாரா யணப்பொருளே

கல்வித் தமிழாய் கனகப் பொருளாகிச்
செல்வித் திதுவாய்ச் செவ்வாகி நின்றோனே
அண்ட பிண்டமாகி அநேகமாய் நின்றோனே
கண்ட இடமும் கண்ணுக்குள் ளானோனே
ஈசர் கொடுத்த ஏதுவர மானாலும்
வேசமிட்டு வெல்ல மிகுபொருளாய் நின்றோனே
நடக்க இருக்க நடத்துவதும் நீயல்லவோ
திடக்க மயக்கம் செய்வதும் நீயல்லவோ
ஆரு மொருவர் அளவிடக் கூடாமல்
மேரு போலாகி விண்வளர்ந்து நிற்போனே
எண்ணத் தொலையாத ஏது சொரூபமதும்
கண்ணிமைக்கு முன்னே கனகோடி செய்வோனே
மூவரா லுன்சொரூபம் உள்ளறியக் கூடாது
தேவரா லுந்தெரியாத் திருவுருவங் கொள்வோனே
ஆயனே யெங்கள் ஆதிநா ராயணரே
மாயனே கஞ்சன் வலிமைதனை மாற்றுமையா
பாவமாய்க் கஞ்சன் பலநாளா யெங்களையும்
ஏவல்தான் கொண்ட இடுக்கமதை மாற்றுமையா
ஊழியங்கள் செய்து உடலெல்லாம் நோகுதையா
ஆழி யடைத்த அச்சுதரே யென்றுரைத்தார்
வாண னென்றகஞ்சன் மாபாவி யேதுவினால்
நாணமது கெட்டு நாடுவிட்டுப் போறோங்காண்
நரபால னென்ற நன்றிகெட்ட கஞ்சனினால்
வரம்பா னதுகுளறி மானிபங்கள் கெட்டோமே
இத்தனையுங் காத்து இரட்சிக்க வேணுமையா
முத்தியுள்ள தேவர் முறையம் அபயமிட
பூமா தேவி புலம்பி முறையமிட
நாமாது லட்சுமியும் நன்றா யபயமிட
நாரா யணர்பதத்தை நாயகியுந் தெண்டனிட்டுச்
சீரான லட்சுமியும் செப்பினள்கா ணம்மானை
என்னைப்போல் பெண்ணல்லவோ இவள்தா னிடுமுறையம்
வன்னமுள்ள மாலே மனதிரங்கிக் காருமையா
உடனேதா னாதி ஓலமிட்டுத் தேவருக்கும்
திடமான பூமா தேவிக்குஞ் சொல்லலுற்றார்
தேவர் வேண்டுதலுக்கு இரங்கல்
வந்து பிறப்போங்காண் மாபாரத முடிக்க
நந்தி குலம்வளர நாம்பிறப்போங் கண்டீரே
சாரமில்லாக் கஞ்சன் தனைவதைத்துப் பூமியுட
பாரமது தீர்ப்போம் பாரத முடித்துவைப்போம்
துவாபர யுகத்தில் துரியோ தனன்முதலாய்த்
தவறாத வம்பன் சராசந் தன்வரையும்
அவ்வுகத் திலுள்ள அநியாயமு மடக்கிச்
செவ்வுகத்த மன்னவர்க்குச் சிநேகமது செய்வதற்கும்
உங்களுக்கும் நல்ல உதவிமிகச் செய்வதற்கும்
அங்குவந்து தோன்றி ஆய ருடன்வளர்வோன்
போங்களென்று பூமா தேவியையுந் தேவரையும்
சங்குவண்ண மாலோன் தானே விடைகொடுத்தார்

தேவர்கள் முறையம்

கம்சனின் கொடுமையால் துயர் அடைந்தவர்கள் எல்லோரும் மாயப் பெருமாளை நோக்கி அபயமிட்டார்கள். பூமாதேவியும் ஆகாயகங்கையான கங்காதேவியும் சேர்ந்து நாராயணனிடம் கூறினார்கள். தேவாதி தேவர்களையும் உலக மக்களின் அவலக் குரலும் கேட்கவில்லையோ பெருமாளே! என்று இரண்டு சக்திகளும் சொன்னதைக் கேட்டு தாங்க முடியாமல் மூவுலகம் காக்கும் நாராயணர் கண் திறந்துப் பார்க்கலுற்றார்.

அபயக்குரல் ஒலி எப்படிக் கேட்கிறது என்றால், ஆதிநாராயணா அனைத்து உயிர்களுக்கும் தந்தையாகிய பரம்பொருளே! எங்கும் நிறைந்தவரே! நம்பியவர்களுக்கு நல்லருள்புரிபவரே! ஆன்ம சிந்தை உடையவர்களுக்கும், ஞான அறிவை ஊட்டி அடைக்கலம் கொடுத்துக் கண்ணின் மணி போல் உள்நின்று செயல்படுத்தும் உம்மை, எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று அழைக்கின்றோம் கற்பகத்தேன் அமுதே!

பக்குவமாய் பற்றிக் கொண்டால் உடனே வந்து காட்சித் தந்துக் கருணைக் காட்டு அரும்பெரும் ஆனந்தமே! “ஓம்” எனும் ஓங்கார மந்திர ஒரு எழுத்திற்கு உயிர் மூச்சு காற்றாய் நிறைந்தவரே! ஓம் நமோ நாராயணா என்கிற ஆதிமூல மகாமந்திரம் ஆகிய எட்டு எழுத்துக்குள் உயிரான ஒளியே! நல்லது கெட்டது எல்லாம் நாவினால் பேசுபவர்களுக்கு நடுத்தீர்ப்பு அளிக்கின்ற நாராயணமே! என்றுப் புகழ்ந்துப் போற்றினார்கள்.

ஆறு பிறவியிலும் அரியே உம்மை வணங்காமல் ஏழாம் பிறப்பில் எள் அளவு நினைத்தால் வாழலாம் என்று வரம் கொடுக்கும் வைகுண்டரை வரவேண்டும் என்றுப் போற்றிப் புகழ்ந்து துதி செய்தார்கள். எந்த தவறும் செய்யாத எங்களை நரகச் செயல்களைச் செய்யும் ஈவு இரக்கம் கெட்ட நயவஞ்சகன் கம்சனால் நாங்கள் வீடு பேறு அடைய விடுவித்துப் பாதுகாக்க வேண்டும் அய்யா என்று முறையிட்டார்கள்.

ஒரு முறை பூமாதேவி, நாராயணனிடம், பகவானே ! பூமியில் நடக்கும் அக்கிரமங்களை என்னால் தாங்க முடியவில்லை. விரைவில் இதற்கு ஒரு முடிவு கட்டுங்கள் என வேண்டினாள். அதற்கு நாராயணனும் சற்று பொறுமையா இருக்கும் படி கூறினார். பல காலம் கழித்து பூமாதேவி நாராயணா! தாங்கள் சொன்னது போல இன்று வரை பொறுமையுடன் தான் இருக்கிறேன்.

ஆனால், முனிவர்கள் செய்யும் யாகத்தைக் கெடுப்பவர்கள், நாத்திகர்கள், காமுகர்கள், கொலை செய்பவர்கள், கொள்ளையடிப்பவர்கள், உழைப்பைத் திருடுபவர்கள் ஆகியோரையும் சேர்த்து சுமக்கிறேனே ! இவர்களின் எடையைத் தாங்கும் சக்தி எனக்கில்லை பிரபு ! இவர்களை அழிக்கும் அளவுக்கு பலமும் என்னிடமில்லை. புருஷோத்தமா ! என்னையும், நான் தாங்கும் நல்லவர்களையும் இவர்களிடம் இருந்து காப்பாற்றும் என்று முறையம் இட்டாள்.

பூமாதேவியின் புலம்பல் சத்தம் அந்த பரந்தாமனுக்கும் கேட்டது, பிரம்மாவின் காதிலும் விழுந்தது. சிவனும் கொதித்தெழுந்தார். சிவனும், பிரம்மனும், மற்ற தேவர்களும் முன்செல்ல, பூமாதேவியும் அவர்களின்

பின்னால், நாராயணனைச் சந்திக்கச் சென்றனர். இவர்கள் அனைவரும் வைகுண்டத்தில் நாராயணனின் வரவுக்காக காத்திருந்தனர். நாராயணன் வரவில்லை. ஆனால், பிரம்மாவுக்கு ஒரு செய்தி மட்டும் வந்தது.பிரம்மனே! பூமாதேவியின் கவலையை விடச்சொல்.

உலகத்திலுள்ள பாவிகளை அழிக்க நானே பூலோகத்தில் பிறக்கப்போகிறேன்.அதற்கு முன்னதாக தேவர்கள் அனைவரும் பூலோகத்திலுள்ள யது வம்ச (இடையர்குலம்) குடும்பங்களில் பிறக்க வேண்டும். எனக்கு உதவியாக இருக்க வேண்டும், என்பதே அந்தச் செய்தி. பிரம்மா மகிழ்ந்தார். பூமாதேவிக்கு தகவல் தெரிவித்தார். சிவனும் மற்ற தேவர்களும் மகிழ்ந்தனர். தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றனர். எல்லா தேவர்களும் யதுகுலத்தில் அவதரித்தனர்.

பூமாதேவியும் பூமியில் நடக்கும் கொடுமைகளின் பாரம் தாங்க முடியாமல், லட்சுமி தேவியிடம் சொல்ல, திருமகள் நாராயணரின் கமல மலர் பாதம் வணங்கி விட்டு எல்லோருடையத் துயரங்களையும் எடுத்துரைத்தார்.

சுவாமி என்னைப் போன்ற பெண்ணல்லவா பூமாதேவி, பூமி பாரம் அதிகமானதால், உமாதேவியின் சுமையைக் குறைத்து மாறுதலும் தர வேண்டும். அபயம் இடும் தேவர்களுக்கும், சுமையைத் தாங்கும் பூமாதேவிக்கு அருள்புரிய வேண்டும் என்றுத் திருமகள் வேண்டினாள்.

சாந்தமாகி இனிமையாய் பேசியத் திருமகள் லட்சுமியின் திருவாய்மொழிக் கேட்ட மாயப்பெருமான், அவர்களிடமும் பெரும் சுமையை தாங்கிய பூமாதேவியிடம், கொடுமைகளை எதிர்த்து மக்கள் துயர் போக்க மகாபாரதப் போர் செய்து எல்லோருடைய துயர் நீக்க நான் வந்துப் பிறப்பேன் என்றார்.

## Day 30

கண்ணன் அவதாரம்

விடைவேண்டித் தேவர் மேதினியில் தாம்போகப்
படைவீர ரான பச்சைமால் தானெழுந்து
ஆதி கயிலை அரனிடத்தில் வந்திருந்து
சோதி மணிநாதன் சொல்லுவா ரம்மானை
வாணநர பாலனென்ற மாபாவிக் கஞ்சனினால்
நாணமது கெட்டோமென நாடிமிகத் தேவரெல்லாம்
பூமா தேவிமுதல் பொறுக்கமிகக் கூடாமல்
ஆமா அரியே ஆதி முறையமென்றார்
முறையம் பொறுக்காமல் முடுகியிங்கே வந்தேனென்று
மறைவேத மாமணியும் மகிழ்ந்துரைத்தா ரம்மானை
அதுகேட்டு ஈசர் அச்சுதருக் கேதுரைப்பார்
இதுநானுங் கேட்டு இருக்குதுகா ணிம்முறையம்
ஆனதால் கஞ்சன் அவனைமுதல் கொல்வதற்கு

ஏனமது பாருமென்று எடுத்துரைத்தா ரீசுரரும்
பாருமென்று ஈசர் பச்சைமா லோடுரைக்க
ஆருமிக வொவ்வாத அச்சுதரு மேதுரைப்பார்
மேருதனில் முன்னாள் வியாசர் மொழிந்தபடி
பாருபா ரதமுதலாய்ப் பாரதப்போர் தான்வரையும்
நாரா யணராய் நாட்டில் மிகப்பிறந்து
வீரான பார்த்தன் மிகுதேரை ஓட்டுவித்துச்
சத்தபல முள்ள சராசந் தன்வரையும்
மற்றவ னோராறு வலியபலக் காரரையும்
கொல்லவகை கூறி குருநிலையைத் தான்பார்த்து
வெல்லப்பிறப் பாரெனவே வியாசர் மொழிந்தபடி
அல்லாமற் பின்னும் ஆனதெய்வ ரோகணியும்
நல்ல மகவான நாரா யணர்நமக்கு
மகவா யுதிப்பாரென மகாபரனார் சொன்னபடி
தவமா யிருந்து தவிக்கிறாள் தேவகியும்
இப்படியே யுள்ள எழுத்தின் படியாலே
அப்படியே யென்னை அனுப்புமென்றா ரம்மானை

விருத்தம்

முன்னே வியாசர் மொழிந்தபடி முறைநூல் தவறிப் போகாமல்
தன்னை மதலை யெனஎடுக்கத் தவமா யிருந்த தெய்வகிக்குச்
சொன்ன மொழியுந் தவறாமல் துயர மறவே தேவருக்கும்
என்னைப் பிறவி செய்தனுப்பும் இறவா திருக்கும் பெம்மானே

கண்ணன் அவதாரம்

நாராயண மூர்த்தி அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட வருவேன் என்றுக் கூறியதை நிறை வேற்றும் வண்ணம்,வசுதேவருக்கும் தேவகிக்கும் குழந்தையாக மகாவிஷ்ணு எடுத்த அவதாரம் கிருஷ்ணாவதாரம். இந்த அவதாரத்தில் கண்டவர் தம் மனதை கவரும் அழகுடன் கோபியர் கொஞ்சும் ரமணனாக விளங்கினான். கம்சனைக் கொன்றும், பஞ்சபாண்ட வரைக் காத்தும் தர்மத்தை நிலைநாட்டினார். எப்படி என்றால்

பச்சைமால் மக்கள் துயர் போக்க எண்ணம் கொண்டு சிவபெருமானிடம் அனுமதி கேட்க புறப்பட்டு கைலாய சிவபெரு மானைத் தேடி வெள்ளி கைலாச மலைக்கு வந்தார். ஜோதிமணி நாதனாகிய சிவனை வணங்கி சொல்லுவார், அரக்கக் குணம் கொண்டக் கம்சன் பூமியில் கொடிய பாவம் செய்வதால் அவனுடைய ஆணவத்தை அடக்க வேண்டும் என்று, உங்களிடம் விரைந்து விடைபெற வந்தேன் என்றார். திருத்த முடியாத கம்சனைக் கொன்றால் தான் கொடுமைகள் தீரும். எப்படி செயல்படலாம் என்று சிவபெருமானிடம் நாராயணர் பணிவாகக் கேட்டார்.

சிவபெருமான் முன் ஜென்மத்து பலன் கூறும் வியாசமுனிவர் சொல்லிய படித்தான் நடக்கும் என்று முடிவு எடுத்து, நாராயணனிடம் மிகப்பெரிய பாரதப் போர் தொடங்கி போர் முடியும் வரைக்கும் மாயப் பெருமானே நீர் தான்

(கிருஷ்ணர்) சக்தி வாய்ந்தவராக பிறப்பெடுத்து, உலகப் புகழ்பெற்ற அர்ஜுனனுக்குச் தேரோட்டியாக இருந்து போர் நடத்தி சென்று “பார்த்த சாரதி” யாகியும், அதிகாரத்தால் அடிமைச் செய்கின்ற அரக்க குணம் உள்ளக் கம்ஷனையும், அவன் மாமன் ஜராசந்தன் வரைக்கும், அவனை விட பலம் வாய்ந்த அசுரர்களைக் கொல்லும் வழிமுறைகளையும் சொல்லி, குருவிடம் கற்ற வித்தைகளையும், கொல்லும் தன்மைகளையும் தந்திரமான முறையில் வெற்றிக் கொள்ளப் பிறப்பார் என்று வியாசர் முன்னால் கூறியபடியேதிருமாலாகிய நீர் தான் பூலோகத்தில் பிறக்கவேண்டும் என்றுச் சொன்னார் சிவப்பெருமான்.

இதைக் கேட்டு திருமால் மறுமொழிக் கூறுவார், சிவப்பெருமானே! தேவகியும் ரோகிணியும் பூவுலகத்தில் பிறக்கும் போது அவர்களுக்கு அழகிய குழந்தையாக நாராயணன் ஆகிய நான் காட்சி கொடுக்க ஆவல் கொண்டேன். ஆகையால் தேவகிக்கு மகனாகப் பிறப்பார் என்று சிவபெருமானாகிய நீரும் வாக்குரைத்தீர் . அந்த வாக்கின் படி, அப்படியே நடக்கவும் முன் ஜென்மம் விதியாகவும் இருப்பதால், விதிப்படியே மாயப் பெருமாளாகிய நான் கிருஷ்ண அவதாரம் தேவகி வயிற்றில் நான் பிறவி எடுக்க அருள்புரிய வேண்டும் என்று நாராயண மூர்த்தி சிவப்பெருமானிடம் கூறினார்

உடனே சிவபெருமான் திருமாலிடம் சொல்வார் வியாசர் கூறிய முன்வினை நூலின் அமைப்புத் தப்பில்லாமல் தேவகிக்குக் கொடுத்த வாக்குறுதியும் மாறாமல் துன்பப்படுகின்ற தேவர்களின் கவலையைத் தீர்க்கவும், துன்பப்படும் நேரம் கூப்பிட்ட குரலுக்கு காட்சி கொடுத்து நல்லோர்களுக்கு அருள் புரியவும், அரக்கர்களை அழித்து பூமியிலுள்ள பாவச் செயல்களை மாற்றவும் , வாசுதேவர் தேவகியின் சிறைவாசத்தை மாற்றவும், பூமியின் பாரத்தைத் தீர்ப்பதற்கும் அரவணையில் துயின்ற பிரான் கண்ணனாக அவதரித்தார்



# DAY 31

நடை

முன்னே வியாசர் மொழிந்தமொழி மாறாமல்
என்னையந்தப் பூமியிலே இப்போ பிறவிசெய்யும்
செந்தமிழ்சேர் மாயன் சிவனாரை யும்பணிந்து
எந்தனக்கு ஏற்ற ஈரஞ்சாயிர மடவை
கன்னியரா யென்றனக்கு கவரியிட நீர்படையும்
பன்னீர்க் குணம்போல் பைம்பொன் னிறத்தவராய்
முன்னுகத்திலே எனையணைய உகந்திருந்த பேரையெல்லாம்
இன்னுகத்திலென் தனக்கு இயல்பாய் படையுமென்றார்
மேருதனிலிருந்து மேகவர்ணர் செயலெனவே
தாருகாவனத்தில் தவசிருந்த ரிஷியை எல்லாம்
ஆயர் குலத்தில் அநேக மடவாரை
பாயமுற வாடிருக்கப் படைப்பீர்கா ணீசுரரே
உருப்பிணியாய் இலட்சுமியை உலகிற்பிறவி செய்யும்
கரும்பினிய தெய்வக் கயிலாச மாமணியே
சத்தபெல முள்ள தத்துவத்தார் தங்களையும்
மெத்தவரம் பெற்ற மிகுவசுரர் தங்களையும்
எல்லோரையு மிப்பிறவி இதிலே வதைத்திடவே
அல்லோரை யும்பிறவி ஆக்கிவைய்யு மென்றுரைத்தார்
என்றனக்கு நல்ல ஏற்ற கிளைபோலே
விந்து வழிக்குலம்போல் மிகுவாய்ப் படையுமென்றார்
இப்படியே மாயன் இசையஅந்த ஈசுரரும்
அப்படியே பிறவி அமைக்கத் துணிந்தனராம்
துணிந்தாரே மாயன் தொகுத்ததெல்லா மாராய்ந்து
வணிந்தார மார்பன் வகைப்படியே செய்யலுற்றார்
தெய்வகியாள் வயிற்றில் திருமால் பிறந்திடவே
ஐவர்க் குறுதியிட அச்சுதருந் தோன்றுவாராம்
கலக்கமுடன் விலங்கில் கவிழ்ந்திருந்த மாதுவுட
மலக்கமது தீர மலரோன் பிறக்கலுற்றார்
ஐவர்க் குபகாரம் அன்பாகச் செய்திடவும்
தெய்வகிக்கும் ரோகணிக்கும் சிவகெதிக ளீவதற்கும்
கஞ்சனுட வலுமை கட்டழித்துக் கொல்வதற்கும்
விஞ்சைவரம் பெற்று வீறுசெய்யும் பேர்களையும்
சத்த பெலமுள்ள தத்துவங்க ளுள்ளோரைத்
தத்தியாய் வீமனையும் தன்னா ளாய்க் யாகிவிட்டுக்
கொல்வதற்கும் தேவருட கூர்முறையந் தீர்ப்பதற்கும்
வெல்வதற்கும் பூமியுட விதனமதை மாற்றுதற்கும்
முன்னே வியாசர் மொழிந்த முறைப்படியே
தன்னிக ரில்லாத தையல்தெய்வ கிவயிற்றில்
பிறக்கிறா ரென்று பெரியோர்கள் கொண்டாட
இறக்கிறார் பொல்லாதார் என்றுமிகக் கொண்டாட
முன்பெற்ற பிள்ளை முழுதுமவன் கொன்றதினால்

வன்பற்ற மாது மங்கையந்தத் தெய்வகியும்
மெத்த மயங்கி முன்னம்விதி தன்னைநொந்து
கர்த்தன் செயலோ கரியமால் தன்செயலோ
என்றுஅந்தக் கன்னி இருபேருந் தான்புலம்பி
விண்டு சொல்லாத விதன மிகவடைந்து
அழுது கரைந்து அவளிருக்கும் வேளையிலே
பழுதில்லா தாயன் பாவை வயிற்றிலுற்றார்
பகவதியு மங்கே பாவை யசோ தைவயிற்றில்
சுகபதியு மங்கே தோன்றினள்கா ணம்மானை
மாயனந்தத் தெய்வகியாள் வயிற்றிலுற்ற தவ்வளவில்
தேசமெல்லாம் நன்றாய்ச் செழித்ததுகா ணம்மானை
கெற்பமுற்ற தெய்வகியாள் கெஞ்சுகவா யஞ்சுகமும்
நற்பதமாய்த் தேகம் நாட்டமுடன் கோட்டியுமாய்
பத்துமாதந் திகைந்து பாலன் பிறந்திடவே
சுற்றுமதிற் காவல்வைத்த துடியோர் வலுவிழந்து
வசுதேவன் காலிலிட்ட வாய்த்த விலங்குமற்று
விசுவாச மாதருட விலங்கது தானுமற்றுத்
பாழ்கொண்ட கஞ்சன் பருங்கோட்டை கதவும்
தாள்திறந்து நேரம் தான்விடியு முன்னாகக்
கண்டாளே தெய்வகியும் கனத்த மதலைதனை
கொண்டாடித் தானெடுத்துக் கூறுவா ளம்மானை
கண்ணணோ சீவகனோ கரியமுகில் மாயவனோ
வண்ணனோ தெய்வேந்திரனோ மறையவனோ தூயவனோ
அய்யோமுன் பெற்ற அதிக மதலையெல்லாம்
மெய்யோதா னிம்மதலைக(கு) ஒவ்வாது மேதினியே
என்று பிரியமுற்று ஏற்ற மதலைதனை
அன்று கொடுத்து அனுப்பினா ளயோதையிடம்
வாங்கியே வசுதேவன் வகையாக ஏதுசொல்வான்
தாங்கிய கைவிலங்கு மாறுவதேப்போ என்றான்
இன்றுமுதல் மாறுமென்று இயல்குழந்தை சொல்லிடவே
நன்றிது நன்றெனவே நாடிக்குழந்தைதனை
கொண்டு வசுதேவன் அயோதைக் குடிலேகிக்
கண்டு அயோதை கன்னியங்கே பெற்றிருந்த
பெண்மதலை தன்னைப் பூராயமா யெடுத்து
ஆண்மதலை தன்னை அயோதை யிடமிருத்தி
வந்து வசுதேவன் மங்கைகை யில்கொடுத்துப்
புந்திமிக நொந்து போயிருந்தா னம்மானை
அந்த யிராவிடிந்து அலைகதிரோன் தோன்றினபின்
கந்த மனசுள்ள கஞ்ச னவன்தனக்கு
ஒற்றாளாய்த் தூதன் ஒருவன் மிகஓடி
பெற்றா ளுன்தங்கை பிள்ளை யெனவுரைத்தான்
கேட்டானே கஞ்சன் கெருவிதமாய்த் தானெழுந்து
பூட்டான நெஞ்சன் பிள்ளைதனை வந்தெடுத்துத்
தூக்கி நிலத்தில் துண்ணெனவே தானடிக்க
ஆக்கிரமத் தாலே அவன்தூக்க ஏலாமல்
சோர்வுறவே கஞ்சன் துடியிழந்து நிற்கையிலே

பாரளந்தோன் தங்கை பகவதியு மேதுசொல்வாள்
என்னை யெடுத்து ஈடுசெய்யா தேகெடுவாய்
உன்னை வதைக்க உற்றயெங்க ளச்சுதரும்
ஆயர்பா டிதன்னில் அண்ணர் வளருகிறார்
போய்ப்பா ரெனவே போனாள் பகவதியும்
கேட்டந்தக் கஞ்சன் கிலேச மிகவாகி
வீட்டுக்குள் போயிருந்து விசாரமுற்றா னம்மானை

விருத்தம்

அய்யோ முனிதான் சபித்தபடி ஆயர் பதியில் போகறியேன்
மெய்யோ தளரு துடல்மெலியு மெல்லி மொழிந்த விசளமதால்
கையோ சலித்துக் காலயர்ந்து கால விதியாற் கருத்தயர்ந்து
பையோ ராளைத் தானழைத்துப் பார்க்க விடுத்தான் கஞ்சனுமே

விளக்கம்:

திருமால் சொல்லிய முறைப்படி சிவனார் அருளால் கம்சனின் தங்கை தேவகி வயிற்றில் திருமால் அவதாரக் குழந்தையாய் உருவானார். வசுதேவருக்கும் , ரோகினிக்கும் குழந்தைகள் பிறந்தார்கள், முதலில் பிறந்த குழந்தைகள் அஷ்டவசுக்கள் எனப்பட்டனர். இவர்கள் ஒரு சாபத்தின் விளைவாக பூமியில் பிறந்து, உடனே இறந்து இறைவனை அடைய விரும்பினர். அதன்படி அவர்களில் ஆறுபேர் இறையடி சேர்ந்து விட்டனர்.

இப்படியிருக்க, ஏழாவது குழந்தையாக தேவகியின் வயிற்றில் பிறக்க கிருஷ்ணர் தன்னைத் தாங்கும் அனந்தனை (நாகம்) அனுப்பி வைத்தார். கிருஷ்ணாவதாரத்துக்கு முந்தைய அவதாரத்தில், அனந்தன், ராமனின் தம்பி லட்சுமணனாகப் பிறந்து, சேவை செய்தார். அதற்கு நன்றி சொல்லும் வகையில், இப்பிறப்பில் தனது அண்ணனாக அனந்தனை அனுப்ப முடிவெடுத்தாராம் பரமாத்மா. இவரே பலராமர் எனப்பட்டார்.

கிருஷ்ணரிடமே பல மாயசக்திகள் உண்டு என்றும், அதில் ஒரு சக்தியே அனந்தனாகிய பலராமர் என்றும் அதிதீவிர கிருஷ்ண பக்தர்கள் சொல்வார்கள். அதாவது இறைவனை யாராலும் தாங்க முடியாது. அவரே தன்னை தாங்க முடியும். எனவே, கிருஷ்ணரே அனந்தனாகிய பாம்பு வடிவில் இருந்தார் என்றும் சொல்வதுண்டு. இதே கிருஷ்ணருக்குள், இன்னொரு பெண் சக்தியும் அடங்கிக் கிடந்தது. அவளுக்கு யோக மாயை எனப்பெயர். அவளை கிருஷ்ணர் வரவழைத்தார். மாயா ! நீ பூலோகம் செல். மதுராபுரி சிறையிலே தேவகியும், வசுதேவரும் சிறைப்பட்டு கிடக்கின்றனர்.

அவர்களின் வயிற்றில் நான் அவதரிக்கப் போகிறேன். அதற்கு முன்னதாக எனது மற்றொரு சக்தியான அனந்தன் தேவகியின் வயிற்றுக்கு போய் விட்டான். நீ, யதுகுலத்தின் தலைவரும், கோகுலத்தில் வசிப்பவருமான நந்தகோபனின் மனைவி யசோதையின் கருவில் உருவெடு. சில காலம் கழித்து, நீ தேவகியின் வயிற்றிலுள்ள கருவை மாய சக்தியால் அகற்றி, வசுதேவரின் இன்னொரு

மனைவியான ரோகிணியின் வயிற்றுக்கு மாற்றிவிடு. பின்னர் நடப்பதை நான் பார்த்துக் கொள்கிறேன், என்றார். தலைவணங்கி அவரது உத்தரவை ஏற்ற யோகமாயை,பரந்தாமா!என்பங்குபூலோகத்தில்என்ன?என்றாள்.

தங்கையே ! பூலோக மக்கள் உன்னை என் சகோதரியாக கருதுவர். உன்னை துர்க்கை என அழைப்பர். வைஷ்ணவி, சாமுண்டி, காளி, விஜயா, சாரதா, அம்பிகா இப்படி பல பெயர்களை சூட்டுவர். புஷ்பம், பழங்களால் ஆராதிப்பர். மேலும் உன்னை நம்பி யாகங்கள் பல நடத்தி, தங்கள் சொந்த நலனை எல்லாம் நிறைவேற்றித்தர வேண்டுவர். தகுதியானவர்களுக்கு நீ தகுதியானதைச் செய்வாய், என்றார். மகிழ்ச்சியடைந்த துர்க்கை பூமிக்கு வந்து யசோதையின் வயிற்றில் கருவானாள். சில காலம் சென்றதும், தேவகியின் வயிற்றில் இருந்த பலராமனை, ரோகிணியின் வயிற்றுக்கு மாற்றி விட்டாள். இதன்மூலம் கிருஷ்ணர், தன்னோடு என்றும் இருக்க வேண்டிய ஒரு சக்தியை உறுதிப்படுத்திக் கொண்டார்.

பலராமனின் கரு பலவந்தமாக இன்னொரு பெண்ணின் வயிற்றுக்கு ஈர்க்கப்பட்டதால் அவரை ஆகர்ஷணன் என்றும், ரமணன் என்றும் சொல்வார்கள். அவரை யார் உளமார நினைக்கிறார்களோ, அவர்களுக்கு அவரே குழந்தையாவார் என்பது இதன் உட்கருத்து. ஆறு குழந்தைகளைக் கொன்ற பாவமும், ஒரு குழந்தை கர்ப்பத்திலேயே கலைந்து போகவும், தன்மூலம் தேவகிக்கு ஏற்பட்ட பயமே என்பதால் அதையும் ஏழாவது கொலையாகக் கருதி, அதனால் தனக்கு துன்பம் விளையுமோ என்று அச்சமும் கொண்டிருந்தான் கம்சன். ஆனால் அவளுடைய பயத்தைப் போக்கும் விதத்தில்,திருமால் சொல்லிய முறைப்படி சிவனார் அருளால் கம்சனின் தங்கை தேவகி வயிற்றில் திருமால் அவதாரக் குழந்தையாய் உருவானார்.

கிருஷ்ணர் தேவகியின் கர்ப்பத்தில் இருந்தார். வசுதேவர் தேவகியின் சிறை வாசத்தைத் தீர்க்கவும் கை ,கால்களில் இட்ட விலங்குகளைத் தகர்பதற்கும் நல்லோர்களின் வேதனைகளைத் தீர்பதற்கும். அரவணையில் அமர்ந்தப் பிரான் பிறவி எடுத்தார். பரமசிவனிடம் எல்லாவிதமான வரங்களையும் பெற்று, சக்தியின் சித்த தத்துவங்களை வரமாக வாங்கிப் பாண்டவர்களுக்கு உறுதுணையாகவும், தேவகியின் பூலோக பிறப்பு முடித்து வீடு பேறு அடைந்து சிவலோகம் அடையவும், கம்சனைக் கொல்லவும் திருமால் அவதாரக் குழந்தையாய் உருவானார்.

வேத புராணங்களைத் தொகுத்தவரான வேதவியாசர் சொன்ன முறைகளின் படியே தேவகியின் வயிற்றில் திருமால் கண்ணனாக பிறக்கப் போகிறார் என்று, சந்தோஷம் கொண்ட தேவர்கள் ஆனந்தம் கொண்டு ஆடிப் பாடினார்கள். மதுராவில் கம்சன் தேவகிக்கும் வசுதேவருக்கும் பிறந்தக் குழந்தைகளை ஒவ்வொன்றாக ஏழுக் குழந்தைகளையும் கொன்றுக் விட்டான். எட்டாவதுக் குழந்தையால் தனக்கு எங்கே மரணம் வந்து விடுமோ என்றுப் பயந்துக் கொண்டுப் பிறந்த உடனேக் கொல்வதற்காகக் காத்திருந்தான்.

தேவகியும் தனக்கு நேர்ந்தக் கொடுமைகளையும், குழந்தைகளை கம்சன் கொல்வதையும் நினைத்து உள்ளம் உருகினாள். இது என் விதியா? இல்லை என் வினையா? காப்பாற்ற வருவேன் என்றுக் கூறிய கருமை நிறம் கொண்ட

திருமால் செயலா? என்று வருந்தினாள். தீமைகள் ஒழிந்து தர்மத்தைக் காக்க தேவகியின் வயிற்றில் உருவானார் பகவான். பகவதி தேவியும் அதே சமயம் வசுதேவரின் பாரம்பரியத்தில் உள்ள யசோதையின் வயிற்றில் குழந்தையாக உருவாகினாள் ஆயர்பாடியில்.

குழந்தைகள் ஜெனித்த படியால் நாடு செல்வ செழிப்பில் வளம் கொண்டுச் சிறந்தது. மிருகங்களும் பறவைகளும் உல்லாசமாய் வாழ்ந்தனர். ஆவினங்களும், நீர்நிலைகளும் பெருகியதுப் பால் பசுக்கள் மிகுதியாக இருந்ததால் ஆயர்பாடியில் கோபியர்களின் தயிர் கடையும் மத்து ஓசை ஒலித்துக்கொண்டே இருந்தது. இவ்வாறு மாதங்கள் கடந்துச் சென்றது. தேவகிக்கு எட்டாவது குழந்தையாக தெய்வக் குழந்தை தோன்றியது. பிறந்த குழந்தை வானில் தோன்றும் பூரண சந்திரனை போல் விளங்கியது.

குழந்தை தேய்பிறையின் எட்டாவது நாள், அஷ்டமி ரோகிணி நட்சத்திரத்தில் நள்ளிரவு 12 மணியளவில் பிறந்தது. இரவு இருள் நேரம் ஆனால் சந்திர வம்சத்தில் குழந்தை பிறந்ததால் சந்திரனின் ஒளியை பெற்றிருந்தது. ஒளி பொருந்தியக் குழந்தை பிறந்த நேரத்தில் தேவகியும் தேவதையைப் போல் காணப்பட்டாள். முழுமை அடையாத அந்த சந்திரன் ஒளிக் கொண்டுக் காணப்பட்டது.

பிறந்த குழந்தையை வசுதேவர் பார்த்தார். பரவசத்தின் உச்சிக்கே போய்விட்டார். ஆம்… குழந்தையின் கைகளில் சங்கு, சக்கரம், தாமரை, கதாயுதம் ஆகியவை இருந்தன. மஞ்சள் பட்டு உடுத்தி, ஆபரணங்களும் அணிந்திருந்தான் சின்னக்கண்ணன். பிறந்த குழந்தைக்கு நான்கு கைகள், ஆடை, ஆபரணம். இதெப்படி சாத்தியம்? தன் வயிற்றில் பிறந்த மகன் சாட்சாத் பரமாத்மாவே என வசுதேவர் மகிழ்ச்சியில் மூழ்கிப் போனார்.

ஒரு சாதாரண மனிதர்களாகிய நாம் ஒரு நிலையில் கம்சனின் சிறையில் கட்டுண்டு இருக்கும் எனக்கு முழு முதற் கடவுளான ஆதிநாராயணரே குழந்தையாகப் பிறந்து இருக்கிறார் என்று ஒருவித பயமும் ஒரு ஆனந்தம் கொண்டார். வசுதேவர் மிகுந்த பணிவுடன் ஆச்சரியத்தோடு எந்த ஒரு குழந்தையும் நான்குக் கைகளுடன்ஆடை ,ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு முழுமுதற் கடவுளின் எல்லா சிறப்புகளையும் தாங்கி தோன்றுவதில்லை. வசுதேவர் அகமகிழ்ந்து மீண்டும் மீண்டும் பார்த்தார். இந்த வேளையை நான் எப்படிக் கொண்டாடுவேன். சிறையில் இருந்துக் கொண்டு இந்தக் குழந்தையை நான் எப்படி கம்ஷனிடமிருந்துக் காப்பாற்றுவேன் என்று வேதனைப்பட்டு வாடினார்.

அரண்மனையில் சுபகாரியங்கள் நடைபெறும் போதுப் பிராமணர்களுக்குத் தானமாகக் கொடுப்பார்கள். தெய்வ குழந்தைப் பிறப்பைக் கொண்டாடும் வகையில் வழங்க முடியாமல் கம்சனின் சிறையில் அடைபட்டு கிடப்பதால் அதுவும் சாத்தியமில்லை என்று கலங்கினார். புதிதாக பிறந்திருக்கும் குழந்தை புருஷோத்தமன் முழு முதற்கடவுள் என்று அறிந்து சிரம் தாழ்த்தி கை கூப்பி துதித்தார். அப்போது வசுதேவர் பரமானந்தத்தில் இருந்தால் கம்ஷனைப் பற்றிய பயம் நீங்கியிருந்தது. புதிய குழந்தை ஜோதியை, அந்த அறை முழுவதும் பரப்பியது.

தேவகி வைத்த கண் வாங்காமல் திருமாலை ரசித்து... உஹும்... தரிசித்துக் கொண்டிருந்தாள். கடவுளை பெற்ற அந்த திருவயிறு குளிர்ந்து போயிருந்த வேளையில், அண்ணன் கம்சன் அவளது நினைவில் ஊசலாடினான். அவள் அந்த தெய்வ குழந்தையிடம், பரந்தாமா ! உலகம் உய்விக்க வந்த விளக்கே ! தாங்கள் உங்கள் சொந்தக் கோலத்தில் எங்களிடம் எப்படி வளர முடியும் ? என் அண்ணன் கம்சன் உங்களைக் கொல்ல திட்டமிட்டிருக்கிறான். அத்துடன் எங்களையும் அவன் கொன்று விடுவான். என்னைத் திருமணம் செய்த பாவத்திற்காக, என் கணவர் உயிர்விடுவது எவ்வகையில் நியாயம் ? தாங்கள் தான் இதற்கொரு வழி சொல்ல வேண்டும், என பிரார்த்தித்தாள்.

உமதுத் தூயக் கருணையால் நீர் எனது கற்பத்தில் தோன்றியுள்ளீர் என்றுப் பணிவுடன் வேண்டித் தன்னைக் காப்பாற்றும்படி தேவகி வேண்டியதும், தெய்வக்குழந்தைச் சொல்லுகிறது. புருஷோத்தமனாகிய நானே, உங்களுக்கு குழந்தையாக அவதரித்து உள்ளேன் என்பதை உணர்த்துவதற்காக நான் இந்த விஷ்ணு வடிவில் காட்சித் தருகிறேன். என்னைப் பற்றிக் கவலைப்படுவதையும், கம்சனிடம் பயம் கொள்வதையும் நான் அறிவேன் என்று, அந்தக் கணமே குழந்தை பெருமாள் விஸ்வரூபம் எடுத்தார்.

என்னைப் பெற்ற புண்ணியவதிக்கும், என் தந்தை வசுதேவருக்கும் நமஸ்காரம். தாயே ! முன்னொரு பிறவியில் தந்தை வசுதேவர் சுதபா என்ற பெயரில் ஒரு நாட்டின் மன்னனாக இருந்தார். தாயான நீ பிருச்னி என்ற பெயருடன் அவரது மனைவியாய் இருந்தாய். அப்போது இந்தப் பூவுலகில் மக்கள் தொகை குறைந்தது. இதனால் கலவரமடைந்த பிரம்மன், உன்னை அணுகி மக்கள்தொகையை அதிகரிக்க உதவ வேண்டும் என்றான். ஆனால், நீயும், சுதபாவும் ஐம்புலன்களையும் அடக்கி விரதம் ஒன்றை அனுஷ்டித்துக் கொண்டிருந்தீர்கள். இதனால் பிரம்மாவுக்கு நீங்கள் கட்டுப்படவில்லை. கோபமடைந்த பிரம்மன் புயலை உருவாக்கி தவத்தை கெடுக்க முயன்றான். ஆயினும், உங்களை இயற்கை கூட ஒன்றும் செய்யமுடியவில்லை. ஏனெனில், உங்கள் இதயம் பரிசுத்தமாயிருந்தது. பரிசுத்தமான மனம் எங்கே உள்ளதோ,அங்கேஇயற்கைபாதிப்பைஏற்படுத்தாது.

இப்படி 12 ஆயிரம் தேவஆண்டுகள் விரதம் அனுஷ்டித்தீர்கள். உங்கள் மனம் முழுவதும் என்னைப் பற்றிய சிந்தனையே தவிர வேறில்லை. அப்போதும், நான் உங்களுக்கு காட்சி தந்து, என்ன வரம் வேண்டுமெனக் கேட்டேன். நீங்கள் வைகுண்டம் வர விரும்புவீர்கள் என எண்ணினேன். ஆனால், நீயோ, பரந்தாமா !

நீ என் வயிற்றில் பிள்ளையாக பிறக்க வேண்டும் என்றாய். நானும் சம்மதித்தேன். அதன்பின் நீங்கள் தவ வாழ்க்கையை நிறுத்திவிட்டு இல்லறத்தில் புகுந்தீர்கள். நான் உங்கள் வயிற்றில் பிருச்னிகர்பா என்ற பெயரில் மகனாய் பிறந்தேன். அடுத்த பிறவியில், நீங்கள் காஷ்யபர் - அதிதி என்ற தம்பதியராய் பிறந்தீர்கள். அந்தப்பிறவியில் நான் உபேந்திரன் என்ற பெயரில் உங்களுக்கு பிறந்தேன். இப்போது, கிருஷ்ணன் என்ற பெயரில் பிறந்திருக்கிறேன்.

நீங்கள் வைகுண்டம் வந்து விட வேண்டியது தான். பல பிறவிகளில் என்னை அன்புடன் மகனாய் வளர்த்த உங்களுக்கு நான் மிகவும்

கடமைப்பட்டுள்ளேன். கம்சனிடமிருந்து உங்களைக் காப்பது என் கடமை. நீங்கள் உடனே என்னை கோகுலத்துக்கு எடுத்துச் செல்லுங்கள். அங்கே வசுதேவரின் நண்பர் நந்தகோபனுக்கு பிறந்துள்ள பெண் குழந்தையை இங்கே கொண்டு வந்து விடுங்கள். என்னை நந்தகோபரின் மனைவி யசோதையிடம் கொடுத்து வளர்க்கச் சொல்லுங்கள். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன், என்று சொல்லிவிட்டு சாதாரண குழந்தையாக உருமாறி விட்டார்.

பின்னர், ஒரு குழந்தை பிறந்துள்ள நினைவும், தன்னை கோகுலத்துக்கு கொண்டு போகச் சொன்னதையும் தவிர மற்ற எல்லாவற்றையும், தன் தாய் தந்தைக்கு மறக்க செய்து விட்டார் ஸ்ரீ கிருஷ்ணர். தன்னை ஒரு சாதாரணக் குழந்தையாக மாற்றி விட்டு மௌனம் ஆனார்.

பகவானின் சக்தியான யோக மாயை தான் கோகுலத்தில் உள்ள யசோதைக்கு மகளாகப் பிறந்திருந்தாள். பகவானின் மாய சக்தியால் கம்சனின் ஏவலர்கள் எல்லோரும் ஆழ்ந்து உறங்கிப் போனார்கள். வசுதேவர், தேவகி ஆகியவர்களின் விலங்குகள் உடைந்துத் தெறித்தன. கோட்டைக் கதவுகள் திறந்துக் கொண்டன. ஒளி பொருந்தியக் குழந்தையைக் கண்களால் கண்டு பெருமூச்சுவிட்டாள். முத்தமிட்டு மகிழ்ந்தாள். குழந்தையை எடுத்து அணைத்துக் கொண்டாள் தேவகி .

எங்கள் துயர் தீர்க்க வந்த மாயப் பெருமானே! கண்ணைப் போல் காக்க வந்தக் கிருஷ்ணன் பெருமானே! அநீதி மேலோங்கும் போது தர்மத்தை நிலை நாட்ட அவதாரம் எடுத்து நல்லோரைக் காக்க வந்தப் பெருமானே! என்று மகிழ்ந்து, கணவரிடம் இந்த தெய்வமாய் வந்த குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்றுப் புகழ்ந்தார்.

பகவானின் கட்டளைப்படிக் குழந்தையைக் காப்பாற்ற வசுதேவர், கனவிலிருந்து விழித்தவர் போல், குழந்தையைப் எடுத்துப் போகும் ஏற்பாட்டைச் செய்தார். அவர் குழந்தையைத் தொட்டாரோ இல்லையோ, கையிலிருந்த விலங்குகள் கழன்றுவிட்டன. சிறைக்கதவுகள் தானாக திறந்தன. காவலர்களோ மயக்கம் வந்தது போன்ற தூக்கத்தில் கிடந்தனர். அங்கு கிடந்த ஒரு பழைய கூடையில் தன் அங்கவஸ்திரத்தை விரித்தார். குழந்தையை அதற்குள் வைத்தார். கிருஷ்ணரைக் கூடையில் வைத்து அதை தலையில் வைத்துச் சுமந்து வெளியில் சென்றதும், காரிருள் சூழ்ந்த இடத்தில் சூரிய வெளிச்சத்தில் காண்பதுபோல் எல்லாம் தெளிவாக தெரிந்தது. கிருஷ்ணர் சூரிய வெளிச்சத்தைப்போல் பிரகாசிப்பதால் அவர் இருக்குமிடத்தில் காரிருள் இருக்க முடியாது.

அவர் பகவானை எடுத்துச் சென்று மறைந்ததும், சிறைக் கதவுகள் தானாகவே திறந்துக் கொண்டன. அதே சமயத்தில் ஆகாயத்திலிருந்து இடியுடன் கூடிய மழை பெய்தது, கொட்டும் மழையில் வசுதேவர் பகவானை சுமந்துச் செல்லும் வேளை அவருக்கு மழையினால் தீங்கு ஏற்படாத வகையில் ஐந்துத் தலை நாகம் தன் படத்தை விரித்துப் பிடித்துக் கொண்டது. வசுதேவர் யமுனை ஆற்றின் கரையை அடைந்தபோது ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடியது. நீர்பரப்பு முழுவதும் நுரை பொங்கி வருவதையும் வசுதேவர் கண்டார் . நீர் கொந்தளித்த நிலையில் வசுதேவர் கடந்துச் செல்லும் வேளை அந்த நதியின் மத்தியில் பிளவை உண்டாக்கி அவர் செல்வதற்கு வசதியாக வழி

வகுக்கப்பட்டது. எந்த இடையூறும் இல்லாமல் நதியைக் கடந்துச் சென்றுக் கோகுலத்தில் இருந்த நந்த மகாராஜா அரண்மனையைச் சென்றடைந்தான்.

அங்கேயும் கோபாலர்கள் எல்லோரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்ததைக் கண்ட அந்தச் சூழ்நிலையில் பயன்படுத்திக் கொண்டு வசுதேவரின் வீட்டிற்குள் சென்று எந்த விதச் சிரமமும் இன்றி ஆண் குழந்தையான பகவான் கிருஷ்ணரை, அந்த இடத்தில் கிடத்திவிட்டு, அங்கிருந்தப் பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு ஓசைப்படாமல் வெளியேறினார். மீண்டும் கம்சனின் சிறையை அடைந்தப் போது அங்கு யாருக்கும் சந்தேகம் ஏற்படாத விலங்குகளைப் பூட்டிக் கொண்டார். மாணிக்கமாகத் திகழ்ந்த ஆண் குழந்தையை யசோதையிடம் வைத்துவிட்டு, மரகத ஒளிக்கொண்டப் பெண் குழந்தையை எடுத்து வந்து அவர் மனைவியாகிய தேவகியிடம் கொண்டுவந்துக் கொடுத்தார்.

மறுநாள் அதிகாலையில் குழந்தைப் பிறந்ததை அறிந்தாள். பெண் குழந்தை பெற்றிருந்த யசோதை, மயக்கத்தில் இருந்து எழவில்லை. அவளுக்கு தனக்கு குழந்தை பிறந்துவிட்டது என்ற உணர்வு இருந்ததே தவிர, என்ன குழந்தை பிறந்தது என்று பார்ப்பதற்குள் மயக்கமாகி விட்டாள். சப்தமின்றி, வசுதேவர் கண்ணனை யசோதையின் அருகில் கிடத்தினார். அவள் விழித்தெழும் போது தனக்கு பிறந்தக் குழந்தை ஆணா பெண்ணா என்று அவளுக்கு நினைவு இருக்கவில்லை.

பெண் குழந்தையை எடுத்து கூடையில் வைத்துக்கொண்டு சிறைக்கு வந்து சேர்ந்தார். சந்தேகமின்றி இருக்க விலங்குகளை பூட்டிக் கொண்டார். குழந்தை வீறிட்டு அழவே, காவலர்கள் விழித்தனர்.

தேவகிக்கு குழந்தை பிறந்து விட்டதென்ற செய்தி கம்சனுக்கு பறந்தது. ஆனால், மறுநாள் கம்சனிடம் காவலர்கள் சென்றுச் சிறையில் உன் தங்கைக்கு குழந்தைப் பிறந்த செய்தியைச் சொன்னதும், கம்சன் சிங்கம் கர்ச்சனை செய்வதுபோல் சினம் கொண்டு ஓட்டமும் நடையுமாக வந்தான். என் வாழ்வை முடிக்க வந்த எமன் பிறந்துவிட்டானா? என்று அதிர்ச்சி அடைந்தான். மரணம் தன்னை நெருங்கி வந்ததை உணர்ந்த கம்சன் அதிர்ச்சி அடைந்தான். குழந்தை பிறந்த இடத்தை நோக்கிப் புறப்பட்டான்.மிகப்பெரிய வாளுடன் வசுதேவர் தேவகியை அடைத்து வைத்திருந்த சிறைசாலைக்குச் சென்றான் கம்சன்.

கம்சன் வருவதை கண்ட தேவகி பயம் கொண்டு அன்புள்ள சகோதரரே! இந்த பெண் குழந்தையை கொல்லாதே! எல்லாக் குழந்தைகளும் பிறந்தவுடன் கொன்று விட்டாய். இந்த பெண் குழந்தையால் உனக்கு மரணம் எப்படி ஏற்படும். இந்த பெண் குழந்தையை கொல்லாமல் விட்டுவிடு என்று காலை பிடித்து கெஞ்சினாள்.



என் உயிரைக் குடிக்க வந்த அந்த எமன் எங்கே ? அவனுக்கு எமனாய் நான் வந்திருக்கிறேன், என்ற கம்சனின் பாதத்தில் விழுந்தாள் தேவகி. அண்ணா ! ஏதோ ஒரு அசரீரி சொன்னது என்பதற்காக, என் ஆண் குழந்தைகளையெல்லாம் கொன்றாய். இப்போது பிறந்திருப்பது பெண். அசரீரியின் வாக்கு உண்மையே என்றாலும் கூட, என் வயிற்றில் பிறக்கும் எட்டாவது ஆண்பிள்ளையால் தான் உனக்கு மரணமே தவிர, பெண்ணால் இல்லை. பார்த்தாயா, இது பெண் குழந்தை, என குழந்தையை நீட்டினாள்.

கொடிய உள்ளம் கொண்ட கம்சன், அவள் சொன்னதைக் காதில் வாங்கவே இல்லை. குழந்தையின் கால்களைப் பிடித்தான். தலையை சுவரில் ஓங்கி அடிப்பதற்காகத் தூக்கினான். ஆனால் அவனால் தூக்க இயலவில்லை.

அவ்வளவு தான் ! மதுராபுரியே கிடுகிடுக்கும் வகையில், ஓங்கி ஒலித்த சிரிப்புடன் ஒய்யாரமாய் வளர்ந்து நின்றது அந்தக் குழந்தை. அந்த நடுநிசியில் சூரியன் உதித்து விட்டது போல பிரகாசம். கையில் சங்கு, சக்கரம் மின்ன, திரிசூலம், வாள் பளபளக்க, மண்டை ஓடுகள் மாலையாய் கழுத்தை அலங்கரிக்க அந்தப் பெண் ஆங்காரமாய் சிரித்தாள். அவள் விஷ்ணுவின் சகோதரி என்பதாலும், உலகை காக்கப்போகும் ரட்சகி என்பதாலும் யாருடைய கண்களுக்கும் புலப்படாமல், வானத்து தேவர்களும், கந்தர்வர்களும், கிங்கரர்களும் அந்த தேவியைத் தரிசிக்க பரிசுப் பொருள்களுடன் வந்து அவளை பணிந்தார்கள். துர்க்கை கர்ஜித்தாள்.

கொடியவனே ! உன் தங்கைக்கு நீ இழைத்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமா ! மனிதனாய் பிறந்தவன் அழிவது உறுதி என்று தெரிந்திருந்தும், இவ்வுலகம் உள்ளளவும் உயிர் வாழப்போவதாக எண்ணி, அப்பாவி குழந்தைகளைக் கொன்றாயே ! உன்னைக்கொல்லப் போகிறவன் பிறந்து விட்டானடா ! அவன் ஆயர்பாடியில் வளர்கிறான் உன் அழிவு நெருங்கிவிட்டது. இவர்களை விடுதலை செய்து ஒரு புண்ணியத்தையாவது தேடிக்கொள், என்றாள். அத்துடன் அவள் மறைந்து விட்டாள்.

கம்சனின் மனம் அந்தக்கணமே மாறிவிட்டது. அம்மா தேவகி ! என் அன்பு சகோதரியே ! உனக்கு எவ்வளவு பெரிய கொடுமையை இழைத்து விட்டேன். என் கொடுமைக்கு பலனாக பிரம்மஹத்தி தோஷம் (கொலை பாவம்) என்னைப் பற்றும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. எனவே என்னை இருவரும்

மன்னிக்க வேண்டும் என்று கூறி வசுதேவரின் கால்களில் விழுந்து வணங்கினான். தன்னையுமறியாமல் அவனது கண்களில் கண்ணீர் வழிந்தது. வசுதேவர் அவனைத் தேற்றும்படியான சூழ்நிலை உருவாகி விட்டது. அதன்பின் கம்சன் ஒருநாள் அரசவையில் வீற்றிருந்தான். அவனுடைய சகாக்கள் வந்தனர்.

கம்சா ! நீ ஏதோ தியாகி போல உன் தங்கையை விடுவித்து விட்டாய். உன்னைக்கொல்ல பிறந்திருப்பவன் விஷ்ணு என்பதை நீ அறிவாய். ஆயர்பாடியில், அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான். குழந்தை பிறந்து ஒரு மாதமே ஆகிறது. அவன் வளர்ந்து அதன்பிறகு தானே உன்னைக் கொல்ல வருவான். அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்து விட்டாயோ ? அசரீரி சொன்னதை ஒரு பொருட்டாக நீ மதிக்கவில்லை. இதன் பலனை நீ அனுபவிக்கத்தான் போகிறாய் என கம்சனை எச்சரித்தனர். உடனே கம்சன் அரசவையைக் கூட்டி நமது அதிகார எல்லைக்குள் கடந்த பத்து நாட்களுக்குள் பிறந்துள்ள எல்லாக் குழந்தைகளையும் கொன்று விடுமாறு கூறினான். இந்த தகவல் வசுதேவருக்கு தெரிய வந்தது.

நந்தகோபருக்கு இதை தெரிவித்து, கோகுலத்தில் இருக்கும் தன் குழந்தைகளான கிருஷ்ணரையும், பலராமரையும் பாதுகாக்க ஏற்பாடுச் செய்வது பற்றி யோசித்துக் கொண்டிருந்தார். இந்நேரத்தில், தங்களுக்கு ஆண்குழந்தை பிறந்துள்ளதாகவே நம்பிவிட்ட கோகுலத்தலைவர் நந்தகோபரும், அவர் மனைவி யசோதையும் குழந்தைக்கு ஜாதகம் கணிக்க முடிவெடுத்தனர். தன் மகன் கிருஷ்ணரின் ஜாதக கணிப்பு திருநாளை, மலை போல் செல்வத்தை குவித்து வைத்து கொண்டாடினார் நந்தகோபர். பசுக்களையும், பொன்னையும், நவரத்தினங்களையும், தகுதியானவர்களுக்கு தானம் செய்ய வேண்டும் என வேதம் சொல்கிறது. பிராமணர்களுக்கு இத்தகைய தகுதி இருந்தால், அவர்களுக்கு தங்கள் பொருளை தானமாகக் கொடுத்து, தங்களைப் புனிதப் படுத்திக் கொண்டனர் கோகுலவாசிகள். நந்தகோபர் மிக அதிகமாகவே தானம் கொடுத்தார்.

ஏனெனில் அவர் வீட்டில் லட்சுமியின் மணவாளனே பிறந்திருந்ததால், செல்வத்திற்கு ஏது குறை ! கிருஷ்ணனுக்கு மிக சிறப்பாக ஜாதககணிப்பு நிகழ்ச்சி நடந்து முடிந்தது. இதன்பிறகு, கோகுலத்தின் சார்பில் கம்சனுக்கு செலுத்த வேண்டிய வரித்தொகையை செலுத்த நந்தகோபர் மதுராபுரி வந்தடைந்தார். அவரை வசுதேவர் சந்தித்தார். குழந்தைகளைக் கொல்ல கம்சன் முடிவெடுத்திருக்கிறான் என்ற விபரத்தை நேரடியாகச் சொல்லி அவரை பயமுறுத்தாமல், கோகுலத்தின் பாதுகாப்புக்கு இடைஞ்சல் வரப்போகிறது. நீங்கள் கவனமாக இருப்பது நல்லது என்று மட்டும் சொல்லி வைத்தார்.

வசுதேவர் க்ஷத்திரியர், நந்தகோபர் வைசியர். இருப்பினும், இவர்கள் சிறந்த நண்பர்களாகத் திகழ்ந்தனர். தன் நண்பர், தனக்கு தந்த எச்சரிக்கையை மறக்காத நந்தகோபர் மிக கவனமாகவே இருந்தார். இதற்குள் கம்சன் குழந்தைகளைக் கொல்வதற்குரிய ஏற்பாட்டை செய்து முடித்து விட்டான்.

தூதுவர்கள் ஆயர்பாடி சென்று நேற்று இரவும் அதற்கு பத்து நாட்கள் முன்பு பிறந்தக் குழந்தைகளைத் தேடினார்கள். என் வீட்டில் பார்க்கின்றபோதுத் தங்கத் தொட்டிலில் ஒரு குழந்தைத் தூங்கிக் கொண்டிருந்தார்கள் பார்த்தவுடன் பரவசப்படுத்தியக் குழந்தையைக் கண்ட ஏவலர்கள் இந்தக் குழந்தையால் தான்

கம்சன் அழிவது உறுதி என்ற எண்ணம் கொண்டனர். கம்சனிடம் எப்படி அடையாளம் சொல்வது என்றுத் திணறினார்கள்.

## DAY 32

கஞ்சன் பாடு

நடை

அய்யோ மறையோன் அன்று சபிபத்தபடி
சையோ இடையர் தம்பதியில் போகறியேன்
தங்கை வயிற்றில் செனித்தபிள்ளை யானதுண்டால்
பங்கம்வரு மென்றனக்குப் பதறுதடா என்னுடம்பு
என்று மனங்கருகி இயலழிந்த கஞ்சனுந்தான்
அன்றுஒரு தூதனையும் அனுப்பினன்கா ணம்மானை
வாராய்நீ தூதா மற்றோ ரறியாமல்
பாராய்நீ தூதா அயோதைப் பதியேகி
என்றுஅந்தத் தூதனையும் ஏகவிட்டான் கஞ்சனுமே
நன்றுநன்று என்று நடந்தானே தூதனுந்தான்
தூதன் மிகநடந்து தோகைஅயோ தைமனையில்
புகுந்தந்தப் பிள்ளை பொன்தொட்டிலி லேகிடக்கக்
கண்டுஅந்தத் தூதன் கஞ்சனுக்கு நஞ்செனவே
விண்டு பறையாமல் விரைவாகப் போயினனே
போயந்தத் தூதன் பொறையுள்ள கஞ்சனுக்கு
வாயயர்ந்து சிந்தை மறுகியே சொல்லலுற்றான்
காமனோ சீவகனோ கண்ணனோ சந்திரனோ
மாமதனோ சூரியனோ மறையவனோ இறையவனோ
நாமத் திறவானோ நாரா யணன்தானோ
சோமத் திருவுளமோ தெய்வேந் திரன்தானோ
ஈசனோ வாசவனோ இந்திரனோ சந்திரனோ
மாயனோ வுன்னை வதைக்கவந்த மாற்றானோ
ஆரோ எனக்கு அளவிடவுங் கூடுதில்லை
பேரோ அயோதைப் புதல்வனெனக் காணுதில்லை
தெய்வகியாள் தேகத் திருச்சுவடு தோணுகொஞ்சம்
மெய்யதிப னான விட்டிணுபோல் முச்சுவடு
என்றந்தக் கஞ்சனுக்கு இத்தூதன் சொல்லிடவே
அன்றவன் கேட்டு அயர்ந்திருந்தா னம்மானை
என்செய்வோ மென்று இருக்குமந்த நாளையிலே
முன்செறியும் பூத மூரிதனை யேவியவன்
கொல்லவென்று விட்டான் குழந்தைதனை யம்மானை
வல்ல பெலமுள்ள மாபூதம் பட்டபின்பு
பின்னுமே தானும் பிலஅரக்கரை யேவிக்
கொன்றுவா வென்றான் குழந்தைதனை யம்மானை
கொல்லவந்த பேரையெல்லாம் கொன்றதுகா ணக்குழந்தை
வெல்லவிட்டப் பேரிழந்து மெலிந்திருந்தான் கஞ்சனுமே

ஆயர் குடியில் அரியோன் மிகவளர்ந்து
மாயன் விளையாடி மடந்தையோடுங் கூடி
வென்றுபால் வெண்ணெய் மிகப்பொசித்துக் காடதிலே
கன்றாவு மேய்த்துக் காளியன் தனைவதைத்துக்
கஞ்சனுட ஏவலினால் காட்டில்வந்த சூரரையும்
துஞ்சிவிடக் கொன்று தொலைத்தனர்கா ணம்மானை
ஆயருக்கு வந்த ஆபத்து அத்தனையும்
போயகற்றி நந்தன் பிள்ளையெனவே வளர்ந்தார்
மதுரைதனில் வாழும் மாபாவிக் கஞ்சனுக்கு
இறுதிவரும் போது ஏதுசெய்தான் கஞ்சனுமே
நந்திடையன் பாலன் நல்லஸ்ரீ கிட்டிணனை
இந்திடத்தில் கொண்டுவர ஏவிவிட்டான் ஒராளை
கஞ்சனுட ஆளும் கண்ணர்ஸ்ரீ கிட்டிணரை
அஞ்சலென்று கண்டு அழைத்தாருமைக் கஞ்சனென்றான்
அந்தவிச ளமறிந்து அரியோ னகமகிழ்ந்து
வந்த விசளம் வாச்சுதென் றெம்பெருமாள்
கூடச் சிலபேரைக் குக்குளிக்கத் தான்கூட்டி
ஈடவி யென்ற எக்காள சத்தமுடன்
குஞ்சரமும் பரியும் குரவைத் தொனியுடனே
கஞ்ச னரசாளும் கனமதுரை சென்றனரே
நாட்டமுட னயோதை நல்லமகன் வந்தானென்று
கேட்ட விசளம் கெட்டியெனக் கஞ்சனுந்தான்
இங்கேநான் சென்று ஏற்றவனைக் கொல்லவென்று
சங்கையற்றக் கோடி தத்திப் படையுடனே
கொல்லவிட்டக் கஞ்சன் குதிரைத் தளம்படையும்
எல்லாந் திருமால் இறக்கவைத்தா ரம்மானை
கஞ்சன் படைகள் கட்டழிந்து போனவுடன்
வஞ்சகனும் வந்து மாயனு டனெதிர்த்தான்
மாயனுட போரும் வஞ்சகக்கஞ் சன்போரும்
தேசமெல்லா மதிரச் சென்றெதிர்த்தா ரம்மானை
மாயனுக்குக் கஞ்சன் மாட்டாமல் கீழ்விழவே
வாயமிட்டுக் கஞ்சன் மார்பிலே தானிருந்து
கஞ்சன் குடலைக் கண்ணியறத் தான்பிடுங்கி
வெஞ்சினத்தால் மாயன் விட்டெறிந்தார் திக்கதிலே
கஞ்சனையுங் கொன்று கர்மமது செய்தவரும்
தஞ்சமிட்டத் தேவருட தன்னிடுக்கமு மாற்றி
மாதாபிதா வுடைய வன்சிறையுந் தான்மாற்றி
சீதான உக்கிர சேனனையு மாளவைத்து
அவரவர்க்கு நல்ல ஆனபுத்தி சொல்லிமிக
எவரெவர்க்கும் நல்லாய் இருமென்று சொல்லியவர்
விரும்பிதிருமால் வினோதமென்றுதானினைத்து
திரும்பிவரும் வேளையிலே தீரன்சரா சந்தனவன்
எந்தன் மருமகனை இவனோதான் கொன்றதென்று
வந்தனனே மாயனுடன் வாதாடி யுத்தமிட
அப்போது மாயன் ஆராய்ந்து தான்பார்த்து
இப்போ திவனை ஈடுசெய்யக் கூடாது

சத்தபெல மல்லோ சராசந்த வேந்தனுக்குக்
கொற்றவ வீமனல்லோ கொல்லவகை யுண்டுமென்று
இதுவேளை தப்பவென்று எம்பெருமாள் தானடந்து
செதுவோடு கூடிச் செகலதுக்குள் ளேகினரே
கடலதுக்குள் வந்து கனத்தமதி லிட்டவரும்
திடமுடனே மாயன் துவரம் பதியிருந்தார்

விருத்தம்

பூதனைச் சகட னோடு பின்னுள்ள அரக்கர் தம்மைச்
சூதனை யெல்லாங் கொன்று சுத்தமாய் மதுரை புக்கி
நீதமே யில்லாக் கஞ்சன் நெஞ்சையும் பிளந்து கொன்று
கூதவன் துவா ரகையில் குணமுட னிருந்தா ரன்றே

கண்ணில் கண்ட காட்சியின் காட்சியின் அற்புதத்தை எப்படி கம்சனிடம் சொல்வது என்றுத் திகைப்புடன் திணறி , வாய் குழறிக் கூறுவார், ஆயர்பாடியில் யசோதை வீட்டில் தங்க தொட்டிலில் ஒளியாகியச் சிந்தாமணியோ!, மன்மதனோ!, மாயப் பெருமானோ! இரவுக்கு ஒளிக் கொடுக்கும் நிலவோ! எந்த நாமத்தைச் சொல்லி நான் வெளிப்படுத்துவேன்.

ஒரு வேளை நாராயணர் தானோ! சிவப்பெருமாளின் சித்தமோ! சூரிய சந்திரனோ! இந்திரனோ! பிரம்மனோ! உன்னை அழிப்பதற்கு வந்த மாயை திருமாலோ யார் என்று ஒப்பிட்டுச் சொல்ல முடியாமல் தவித்தான் தூதுவன். தன்னுடைய வாயால் சொல்ல தெரியாமல் கையால் சைகை செய்து காண்பித்தார்கள்.பெயரை கேட்டால் இடையர்குல யசோதையின் குழந்தைப் போல் தெரியவில்லை என்று தான் தோன்றுகிறது. விஷ்ணுவைப் போல அடையாளம் இருக்கின்றது என்றுக் கைஜாடைக் காட்டினார். தூதுவர்கள் சொன்னதை கேட்டு பயந்து போனான். செய்வது அறியாமல் அவன் தலைச் சுற்றியது. சிந்தித்தான்.

அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது. தாய்ப்பால் கொடுத்து குழந்தைகளை கொல்லும் சூன்யக்காரியான பூதனா என்பவளை அழைத்தான்.
குழந்தைகளைக் கொல்லும் பொறுப்பை அவளிடம் ஒப்படைத்தான்.



.

இப்படிப்பட்டசூன்யக்காரிகளை கேசரீ என்பார்கள். சூன்யம், தெய்வ வழிபாட்டில்ஊறிப்போனவர்களை தாக்காது. கோகுலத்திலும் அதுவே நிகழ்ந்தது. பூதனா, கோகுலத்திற்குள் நுழைந்தவுடன் தன்னை பேரழகியாக மாற்றிக் கொண்டாள். முகத்தில் கனிவை படரவிட்டுக் கொண்டாள். அவளது அழகும், போலி சாந்தமும் அங்கிருந்தவர்களின் கண்களை ஏமாற்றி விட்டது. அவ்வூர் மக்கள் அந்தப் புதியவளை சந்தேகக் கண்ணுடன் பார்க்கவில்லை. நல்லவர்களின் கண்களுக்கு கெட்டது கூட நல்லதாகத்தான் தெரியும், இதைப் பயன்படுத்திக் கொண்டு, தன் மார்பில் நஞ்சை தடவி பல குழந்தைகளை அவர்களது பெற்றவர்கள் அறியாமல் கொன்றாள்.

அவள் நந்தகோபரின் மாளிகைக்குள் நுழைந்தாள். அவள் மீது சந்தேகம் கொள்ளாத வாயிற்காவலர்கள், அவள் யசோதையைப் பார்க்க வந்திருக்கலாம் எனக் கருதி தடுக்கவில்லை. யாரும் அறியாமல், கிருஷ்ணன் படுத்திருந்த அறைக்குள் நுழைந்தாள். குழந்தையைப் பார்த்ததும் பூதனாவின் மனதில் ஏதோ சஞ்சலம். அது சாதாரண குழந்தையாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு சக்தி அதனுள் மறைந்து கிடப்பதைப் புரிந்து கொண்டாள். இருப்பினும், கம்சனின் கட்டளையை அவளால் மீற முடியுமா ? குழந்தையை மடியில் வைத்தாள். அவள் மார்புக்காம்பை வாயில் திணித்தாள். கிருஷ்ணன் விஷப்பாலோடு அவளது உயிரையும் சேர்த்துக் குடித்தான். ஏனென்றால் அவளால் வேறுக் குழந்தைகளை கொல்லாமல் இருக்கவே அவளையும் கொன்றார் .அவள் அலறினாள்.

கோகுலத்தையே அதிர வைத்தது அந்த அலறல். அது மட்டுமா ! அவளது அசுர உருவம் வெளிப்பட்டது. 12 மைல் நீளத்துக்கு அவளது உடல் நீண்டது.பூதனாவின் உடலைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது. கோகுலத்தையே அதிரச்செய்த அவளது அலறல் கேட்டு, யசோதையும் ரோகிணியும் இதர கோபியர்களும் ஓடிச் சென்று கிருஷ்ணரை தூக்கினர். தங்கள் அன்புக்குழந்தையின் உயிர்காப்பாற்றப்பட்டதை எண்ணி மகிழ்ச்சி அடைந்தனர். குழந்தைக்கு கண்ணேறு பட்டுவிட்டது என எண்ணி பசுவின் வாலைப்பிடித்து குழந்தையின் உடலைச்சுற்றி திருஷ்டி கழித்தார்கள்.

தீமையை அழித்து தர்மத்தை காக்க நான் யுகம்தோறும் என்னை உயிர்ப்பித்துக் கொள்வேன் என்றத் திருவாக்கின்படி தீயச் சக்தியான அரக்கியை அழித்தார். மேலும் வேத சாஸ்திரங்களின் படி பெண்ணைக் கொல்வது கூடாது, ஆனாலும் அவள் ஒரு தீய சக்தியாகவே வந்திருப்பதினால் அவளைக் கொல்வதைத் தவிர வேறு வழியில்லை.கிருஷ்ணர் பாலூட்டித் தன்னைக் கொல்ல வந்திருப்பதை அறிந்து அவளைத் தன் வளர்ப்புத் தாய் ஆகவே கருதினார். ஆகையால்பூதனா கொடுமைக்காரியாக இருந்தாலும் கூட, குழந்தைகளை கொன்றவள் என்றாலும் கூட, கடைசி நேரத்தில் கிருஷ்ணருக்கு பாலூட்டிய காரணத்தால் அவள் வைகுண்டத்தை அடைந்தாள். அவளுக்கும் முக்தியும் கிடைத்தது. அவளது உடலைக் கோகுலவாசிகள் எரித்த போது, அதிலிருந்து நறுமணம் கிளம்பியது.

ஒரு பிள்ளைக்கு தாய், தந்தையர்கள் துஷ்டர்களாக இருந்தாலும், நெறி வழுவியவர்களாகயிருந்தாலும் மைந்தன் அவர்களுக்கு தக்க மரியாதை செய்யக் கடமைப் பட்டிருக்கிறான் என்பதை இதன் மூலம்

வெளிப்படுத்துகிறது.அது போலவே பூதனாவும் தாயாகவே கருதப்பட்டு யசோதைக்கு சமமான மதிப்பைகிருஷ்ணரிடம் இருந்து பெற்றாள். யசோதைக்கு முக்தி அளிக்கப்பட்டதுப் போலவே பூதனாவுக்கும் முக்தி அளிக்கப்பட்டது. இதுதான் முழுமுதற் கடவுளின் செயல். பார பட்சம் பாராத நிலைக் கொண்டிருந்தவர் தான் புருஷோத்தமன். இந்த செய்தியை அறிந்த கம்சன் அவன் மயக்கமானான்.

நாட்கள் கடந்தன. கிருஷ்ணருக்கு ஒரு வயதானது. இந்த நிகழ்வை யசோதா மிக சிறப்பாகக் கொண்டாடினாள். வாத்தியங்கள் முழங்கின. ஆயர்குல மக்கள் ஒருவர் விடாமல் விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். பிராமணர்கள் வேத பாராயணம் செய்தனர். யசோதா மகனை அன்போடு நீராட்டினாள். வேத மந்திரங்கள் ஒலித்துக் கொண்டிருந்த போது, கிருஷ்ணர் அப்படியே கண்ணயர்ந்தார். யசோதை குழந்தையை மடியில் வைத்திருந்தாள். குழந்தை உறங்கி விட்டதால், ஒருபட்டுமெத்தையை தரையில் விரித்து ஒரு வண்டியின் கீழே நிழலில் குழந்தையை படுக்க வைத்தாள். பின்னர், மற்ற வேலைகளைக் கவனிக்க வீட்டுக்குள் போய்விட்டாள். சற்றுநேரத்தில் கிருஷ்ணர் விழித்து விட்டார். சாதாரண குழந்தைக்குரிய இயல்புடன் அழ ஆரம்பித்தார்.

கால்களை உதைத்தார். அவை பார்ப்பதற்கு பிஞ்சுக்கால்கள், ஆனால், அதன் சக்தி தாளாமல், அருகில் இருந்த வண்டியே நொறுங்கி விட்டது. சப்தம் கேட்டு வெளியே வந்த யசோதையும் மற்ற ஆயர்குல பெண்களும் இது என்ன விந்தை என்று மூக்கின் மீது விரலை வைத்தனர். யசோதைக்கு பயம் வந்துவிட்டது. வேதம் ஓத வந்த அந்தணர்களிடம், ஐயன்மீர் ! இந்தக் குழந்தை பிறந்தது முதல் இப்படித்தான் அற்புதமான செயல்களைச் செய்கிறான். ஓர் அரக்கியையே கொன்றான். இப்போது, உங்கள் கண்முன்னால் வண்டியை நொறுக்கி விட்டான்.எனவே குழந்தையின் மீது எதுவும் அண்டாமல் இருக்க மந்திரங்கள் ஓதி ஹோமம் செய்ய வேண்டும் என வேண்டினாள். அவ்வாறே வேத விற்பன்னர்கள் வேதங்கள் ஓதினர். அவர்களுக்கு நிறைய பரிசுகளை அள்ளிக் கொடுத்தார் நந்தகோபர்.

ஆனால் பூதனா அழிந்துவிட்டாள் என்றறிந்தவன் சும்மா இருப்பானா?, அடுத்து சகடாசுரன் போன்ற வலிமையான மந்திர சக்தி வாய்ந்த பல வீரர்களை ஏவினான் கமிஷன். அத்தனை பேரையும் அடியோடு அழித்தார் கிருஷ்ணர். அவருடைய மாய சக்தியால் மிகவும் கவலை கொண்டான். பயம் அவனை தூங்க விடவில்லை.

சகடாசுரனைக் கிருஷ்ணர் கொன்று விட்டார் என்பதையறிந்து கம்சன், த்ருணாவர்த்தன் என்ற கொடிய அரக்கனை அனுப்பினான். இவன் பறக்கும் வல்லமையுள்ளவன். இவன் வேகமாக மூச்சுவிட்டால் சூறாவளியாக மாறிவிடும். அந்த கொடுமைக்காரன் கோகுலத்துக்குள் புகுந்தானோ இல்லையோ கோகுலத்தில் பெரும் புயல் வீசியது. எங்கும் புழுதி மண்டலம். ஒருவருக்கொருவர் முகத்தையே பார்க்க முடிய வில்லை. இதைப் பயன்படுத்தி, கிருஷ்ணரை தூக்கிக் கொண்டு உயரே பறந்து விட்டான் அசுரன். யசோதை கிருஷ்ணரைக் காணாமல் அழுதாள். ஐயோ ! என் மகன் புழுதிப்புயலில் சிக்கிக் கொண்டானோ!அவன்எங்கே?எனஅதற்றினாள்.

த்ருணாவர்த்தன் உயரே சென்று, குழந்தையை தூக்கி வீச எத்தனித்தான். குழந்தை அவனை விட்டால் தானே ! குழந்தையின் கைகள் விஸ்தாரமாக

விரிந்தன. வர்த்தனின் கழுத்து அதன் பிடியில் சிக்கியது. அப்படியே கழுத்தை இறுக்கிய குழந்தை அவனை வதம் செய்தது. அவன் கீழே விழுந்தான். புயல் அடங்கியது. கீழே விழுந்து கிடந்த அசுரனை கோகுலவாசிகள் பார்த்தனர். கிருஷ்ணர் அவன் உடல் மீது விளையாடிக் கொண்டிருந்தார். இதைக் கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.

இது தெய்வக் குழந்தையாக இருக்குமோ என எண்ணினர். இதை நிரூபிக்கும் வகையில், அடுத்த சம்பவம் நிகழ்ந்தது. ஒரு நாள் கிருஷ்ணர் மணலை அள்ளித் தின்று கொண்டிருந்தார். யசோதை அவரைக் கண்டித்தாள். கண்ணா ! என்னிடம் நீ ஓடோடி வந்தால், நான் பால் தருவேனே ! ஏன் மண்ணைத் தின்கிறாய் ? என்று செல்லமாய் கண்டித்தாள். அன்று கிருஷ்ணர் அவளது கண்களுக்கு பூரண லட்சணமாய் தெரிந்தார். அதுகண்டு பூரித்த அவளது மார்புகளில் பால் நிறைந்தது. அதை அன்போடு ஊட்ட முயன்றாள். கிருஷ்ணர் வாய் திறக்க மறுத்தார். அவள் அவரது வாயை கட்டயாப்படுத்தி திறந்தாளோ இல்லையோ ! வாய்க்குள் அண்ட சராசரமும் சுழன்று கொண்டிருந்தது.

நந்தகோபரிடம், இந்த அதிசய நிகழ்ச்சியை எடுத்துச் சொன்னாள் யசோதை. நந்தருக்கும் குழந்தையைப் பற்றிய கவலை அதிகரித்தது. குழந்தையின் ஜாதகத்தைப் பார்த்தால் என்னவென்று தோன்றியது. ஜாதகம் கணிப்பதில் மிகச்சிறந்த ஞானியாகத் திகழ்ந்தவர் கர்கமுனிவர். அவரை வரவழைத்து தகுந்த உபசாரம் புரிந்த நந்தகோபர், கிருஷ்ணரின் ஜாதகத்தை மட்டுமின்றி, ரோகிணியின் மகனான பலராமனின் ஜாதகத்தையும் கொடுத்தார். ஜாதகத்தைப் பார்த்த முனிவர் அதிர்ந்தே போய்விட்டார்.

நந்தகோபரும், யசோதையும் இதுவரை கிருஷ்ணன் தங்கள் பிள்ளை தான் என எண்ணிக் கொண்டிருந்தனர். தனக்கொரு பெண் குழந்தை பிறந்ததும், அது கூடையில் சுமக்கப்பட்டு கம்சனின் மாளிகைக்கு சென்றதும், சிறையில் பிறந்த கிருஷ்ணன் தன்னருகே படுக்க வைக்கப்பட்டதையும் யசோதையும் அறியமாட்டாள். தான் பெற்ற மகன் என்றே அவள் எண்ணியிருந்தாள். ஆனால், கிருஷ்ணர் தேவகியின் வயிற்றில் பிறந்தவர் என்பதை உணர்ந்து விட்டார் கர்கமுனிவர்.

பலராமனும், தேவகியின் வயிற்றில் கருவாகி,ரோகிணியின் கர்ப்பத்திற்கு மாற்றப்பட்டவன் என்பது தெரிந்தது. எப்படியாயினும் குழந்தைகளுக்கு தந்தை வாசுதேவர் என்பதை புரிந்து கொண்டு விட்டார் கர்கமுனிவர். இதை நந்தகோபரிடம் தெரிவித்தும் விட்டார். நந்தகோபரே ! இக்குழந்தை சாதாரண பிறவியல்ல. அந்த விஷ்ணுவின் அம்சம். ஒரு பிறவியில் சிவப்பாக இன்னொரு பிறவியில் மஞ்சளாகவும், இப்போது கருப்பாகவும் பிறந்திருக்கிறார். மனிதர்களுக்குள் நிறபேதம் இருக்கக்கூடாது. என்பது அவரது எண்ணமாக இருக்கலாம்.

ஆனால், அவர் தேவகியின் வயிற்றில் பிறந்தவர் என்று ஜாதகம் சொல்கிறது. உம் மனைவி யசோதைக்கு ஒரு பெண் குழந்தை தான் பிறந்திருக்கிறது. அவள் துர்க்கை என்னும் தெய்வமாக மாறிவிட்டாள். பெற்ற பிள்ளையே தன்னுடையது இல்லை என்பதும், தனக்கு பிறந்த குழந்தை தெய்வமாகி விட்டது என்பதையும்



அறிந்தபிறகும் எந்த சலனத்தையும் அவர் காட்டவில்லை. மாறாக, விஷ்ணுவே, தன் மகனாய் வளர்வதில் மிகுந்த மகிழ்ச்சியைத் தான் அடைந்தார். பலராமரும், கிருஷ்ணரும் இப்போது தங்கள் பால்ய லீலைகளைத் துவங்கி விட்டார்கள். கோபியரின் வீடுகளுக்குள் நுழைவார்கள். பசுக்கள் பால் பொங்கும் மடுவுடன் காட்சி தருவதைப் பார்த்து மகிழ்வார்கள. கன்றுகளை யாருக்கும் தெரியாமல் அவிழ்த்து விடுவார்கள். அவை மகிழ்ச்சியுடன் ஓடிச்சென்றுத் தாயில் மடியில் சுரந்து நிறைந்திருக்கும் பாலைக் குடிக்கும். அதுகண்டு கைகொட்டி ஆனந்தமடைவார்கள்.

பின்பு, கோபியரின் வீட்டுக்குள் புகுந்து வெண்ணையைத் திருடுவார்கள். அதைகுரங்குகளுக்கு கொடுப்பார்கள்.கோபியர் அவர்களின் புத்திசாலித்தனத்தை ரசிப்பார்கள். அதே நேரம், திருடுவது தவறு என கண்டிப்பார்கள். யசோதையிடம் ஒருத்தி சென்றாள். அம்மா யசோதா ! உன் மகன் என் வீட்டில் வெண்ணெய் திருட வருகிறான் என்று பானையை இருளில் ஒளித்து வைத்தேன். ஆனால் அவன், தன் கழுத்தில் அணிந்திருக்கும் நகைகளின் ஒளியிலேயே அந்தப் பானையை கண்டுபிடித்து விடுகிறான். பானை காலியாகி விட்டது, என்றாள். சரி... சரி... அவன் கழுத்தில் அணிந்திருக்கும் நகையை இனி கழற்றி விடுகிறேன், என்றவள் கிருஷ்ணரைக் கண்டிப்பதற்காக கையை ஓங்கினாள். பால் வழியும் முகத்துடன் அந்த சிங்காரக்கண்ணன், அவளை ஒரு அன்பு பார்வை பார்க்கவே, கை தானகவே கீழே வந்து விட்டது.

வசுக்களில் ஒருவரான துரோணர் (இவர் மகாபாரத துரோணர் அல்ல) என்பவர் தரா என்ற தன் மனைவியுடன் வசித்தார். அவர்களிடம் பிரம்மா, நீங்கள் இருவரும் உலகத்தை விருத்தி செய்ய வேண்டும். என உத்தரவிட்டார். அப்போது அவர்கள், தந்தையே ! நீங்கள் சொல்லும் உத்தரவின்படி நடக்கிறோம். எங்களுக்கு நீங்கள் ஒரு வரம் தர வேண்டும். மகா விஷ்ணுவை நாங்கள் நேசிப்பது தங்களுக்கும் தெரிந்த ஒன்றுதான். அவர் குழந்தையாக இருந்தால் எப்படி இருப்பார் ? என்னென்ன சேஷ்டைகள் செய்வார் என்பதை நாங்கள் கண்குளிரக் காண வேணடும்.

பிற்காலத்தில், அவரது இந்த சேஷ்டைகளையெல்லாம் படிப்போரும், கேட்போரும் பாவ விமோசனம் பெற வேண்டும், என்றார். அந்தப் பிறவியில் அப்படி நடக்காதென்றும், மகாவிஷ்ணு பூலோகத்தில் நடக்கும் அநியாங்களை தடுத்து நிறுத்த, மானிட ரூபத்தில் கிருஷ்ணாவதாரம் எடுக்கும் போது, அந்தப் பாக்கியம் உங்களுக்கு கிடைக்குமென்றும் சொன்னார் பிரம்மா. அதன்படி இப்பிறவியில் அந்த தம்பதியர் நந்தகோபர் - யசோதையாக கோகுலத்தில் அவதரிக்க, அவர்களிடத்தில் கிருஷ்ணன் தேவகியின் வயிற்றில் பிறந்து பால்ய பருவத்தைகழிக்கவந்திருக்கிறார்.

யசோதையின் வீட்டில் பல வேலைக்காரிகள் உண்டு. அதில் வீட்டு வேலை செய்பவளுக்கு, அன்று கடுமையான வேலை இருந்தது. எனவே, வெண்ணெய் கடையும் பொறுப்பை யசோதை எடுத்துக் கொண்டாள். அவள் மனமெல்லாம் கிருஷ்ணன் நிறைந்திருந்தான். கிருஷ்ணன் செய்யும் சேஷ்டைகளை பாடியபடியே அவனது நினைவில் மூழ்கிப்போனாள். அப்போது, அவளையறியாமல் அவளது மார்பில் பால் சுரந்தது. அந்நேரத்தில் கிருஷ்ணர் வந்தார். தாயிடம், வெண்ணெய் கடைவதை நிறுத்தி விட்டு, தனக்கு பாலூட்ட வேண்டுமென்ற தன் ஆசையைக் குறிப்பால் தெரிவித்தார். இதை உணர்ந்த யசோதையும் கிருஷ்ணருக்கு பால் புகட்டினார்.

அந்த நேரத்தில் அவள் அடுப்பில் வைத்திருந்த பால் கொதித்து வழிய ஆரம்பிக்கவே, குழந்தையை ஒதுக்கி விட்டு, அடுப்பை நோக்கி ஓடினாள் யசோதா. எனவே, கிருஷ்ணருக்கு கோபம் வந்துவிட்டது. அவரது முகம் கோவைப்பழமாகச் சிவந்து விட்டது. ஒரு கல்லை எடுத்தார். எறிந்தார்; அம்மா விட்டுச் சென்றிருந்த வெண்ணெய் தாழி உடைந்தது. சிந்திய வெண்ணெய் ஒரு கை நிறைய அள்ளிக் கொண்டார். ஒரு தனியிடத்திற்கு போனார். தலைகுப்புறக் கவிழ்த்தப்பட்டிருந்த ஒரு உரலில் அமர்ந்து வெண்ணெய்த் தின்ன ஆரம்பித்து விட்டார்.

பசி பொறுக்க மாட்டார் போலும் நம் சின்னக்கண்ணன்! பகிர்ந்துண்ணும் குணம் அவரை விடுமா. அங்கே வந்த குரங்குகளுக்கும் கொடுத்தார். யசோதா பால் பானையை இறக்கி வைத்து விட்டு திரும்பினாள். பானை உடைந்திருந்தது. கிருஷ்ணன் தான் இதைச் செய்திருப்பான் என்பதை அவள் அறிவாள்! அந்தப் பொல்லாதவனைத் தேடினாள். தூரத்தில் உரல் மீது அமர்ந்திருந்தான். அவனைப் பிடிக்க ஓடினாள். அவன் அவளுக்கு போக்கு காட்டிவிட்டு ஆங்காங்கே மறைந்து கொண்டான். அவள் மீது கொண்ட அன்பு காரணமாக அவனே அவளதுப் பிடியில் சிக்கிக் கொண்டான். மாயனே ! வசமாக சிக்கினாயா ? வெண்ணெயை எவ்வளவுச் சிரமப்பட்டுக் கடைந்தேன்.

நீயோ, அதை எவ்வளவு எளிதாக உடைத்து விட்டாய். உன்னைக் கட்டிப்போட்டால் தான் சரி வருவாய் போலும் ! என்றவள் கயிறை எடுத்தாள். அவனை இழுத்து வந்துக் கட்டிப் போட முயற்சித்தாள். கயிறு போதவில்லை. இன்னும் சில கயிறுகளை எடுத்து வந்து சேர்த்துக் கட்டினாள். என்ன அதிசயம் ! எப்படி கட்டினாலும் கயிறின் நீளம் கூடவே இல்லை. அவள் சோர்ந்து விட்டாள். இப்போதும் கிருஷ்ணர் அவள் மீது கிருபை வைத்தார். அவளது அன்புக்குக் கட்டுப்பட்டார். கயிறு நீளமானது. யசோதைக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியும் ! அந்தக் குறும்புக்காரரைக் கட்டிப்போட்டாள். வேலையைப் பார்க்க போய் விட்டாள். அங்கே இரண்டு அர்ஜுன மரங்கள் இருந்தன. கண்ணனை வணங்கி அவைபேசஆரம்பித்தன.

பரந்தாமா ! நாங்கள் நிதிகளுக்கு அதிபதியான குபேரனின் மக்களான நளகூவரன், மணிக்ரீவன். எங்களை நாரத மகரிஷி சபித்து விட்டார். எங்களின் இந்த ரூபத்தைக் மாற்றி சுயரூபம் தர வேண்டும், என வேண்டிக்கொண்டன அந்த மரங்கள். உலகத்து செல்வம் அனைத்தையும் குவித்து வைத்திருக்கும் குபேரனின் பிள்ளைகள் செய்த அட்டகாசம் கொஞ்ச நஞ்சமல்ல ! பணமுள்ளவனிடம் மூன்று பழக்கங்கள் பிரதானமாக இருக்கும். மது, மாது, சூது

ஆகியவையே அவை. இதில், முதல் இரண்டிலும் ஊறிக் கிடந்தார்கள் கூவர க்ரீவர்கள். ஒருமுறை, பல பெண்களுடன் ஒரு குளத்தில் ஜலக்ரீடையில் ஆழ்ந்திருந்தனர். அந்தப் பெண்களும் ஆடை கலைந்து போதையில் இருந்தனர். அப்போது அங்கு வந்த நாரதரை மதிக்கவில்லை.

இதைக் கண்ட நாரதர், இருவரையும் அர்ஜுன மரமாகும் படி சபித்து விட்டார். மேலும் இருவரும் தேவர்கள் என்பதால், அவர்களுக்கு விஷ்ணுவின் தரிசனம் மூலம் விமோசனம் கிடைக்க வேண்டும் என்பதே நாரதரின் விருப்பம். அவர்களை மரமாக மாறும்படி சபித்துவிட்டார். பகவான் நாராயணன், கிருஷ்ணாவதாரம் எடுத்து பூமிக்கு வரும்போது தான், உங்களுக்கு சுயரூபம் கிடைக்கும் என சொல்லி விட்டார்.

கிருஷ்ணர் உரலை இழுத்துக் கொண்டு நெருங்கி நின்ற மரங்களுக்கிடையே சென்றார். அவரது ஸ்பரிசம் பட்டதோ இல்லையோ, அந்த தேவர்கள் உயிர் பெற்று பகவானை வணங்கி, இனி தவறு செய்வதில்லை என உறுதியளித்து விடை பெற்றனர். பின்னர் உயிரற்ற அந்த மரங்களை இழுத்துச் சாய்த்தார் கிருஷ்ணர். மரங்கள் சாயும் சப்தம் கேட்டு நந்தகோபரும் மற்றவர்களும் ஓடி வந்தனர். குழந்தை காயமின்றி தப்பியதைப் பார்த்து ஆனந்தம் கொண்டனர். இந்த அதிசயம் நிகழ்வுகளும், கிருஷ்ணர் அதில் இருந்து தப்பித்து வருவதும் நந்தகோபரின் சகோதரரான உபநந்தருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இப்படியாக,ஆயர்பாடியில் கோபால நாயக எல்லோரின் அன்பால் ஈர்க்கப்பட்டு கண்ணுக்குள் விளங்கும் கருவிழி போல எல்லோரையும் கவர்ந்த கண்ணனாக வளர்ந்து இளம் வயதில் துடிப்புடன் வளர்கின்ற வாலிப பருவம் அடைந்தவுடன் கோபியர்களிடம் மன்மத லீலைகளை செய்து சிறுவயதிலேயே எல்லோரையும் தன் வயப்படுத்தி பேரின்பத்தை ஊட்டினார். இவ்வாறு குழந்தை கிருஷ்ணர் ஆகவே இருந்துகொண்டு அசுரர்களின் அட்டூழியங்களை எல்லாம் அழித்து தீமைகளைத் துடைத்து தள்ளி கோபியர்களுடன் லீலைகள் புரிந்து எல்லோரையும் ஆனந்தம் அடைய செய்த கண்ணனின் லீலைகளைக் கண்டு ஆனந்த பரவசம் அடைந்தார்கள்.

கோபாலர்களே ! கிருஷ்ணன் அரக்கர்களிடமிருந்து பலமுறை தப்பிவிட்டான். ஆனால், எப்போதுமே இப்படி தப்பமுடியும் என சொல்ல முடியாது. நம் குழந்தைகளுக்கு பலமுறை ஆபத்து வந்து விட்டது. இனியும், நாம் கோகுலத்தில் வசிப்பது உசிதமல்ல. மனிதர்களுக்கு இறைவன் அவ்வப்போது சில எச்சரிக்கைகளைத்



தருவான். அதைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப நம் செயல்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

எனவே, நாம் யமுனை நதிக்கரையிலுள்ள பிருந்தாவனத்திற்கு சென்று விடுவோம். அங்கு கோவர்த்தனம் என்ற மலை இருக்கிறது. அந்த மலையில், நம் பசுக்களுக்கு தேவையான புல் செழித்துக் கிடக்கிறது. புறப்படுவதற்குரிய ஏற்பாட்டைச் செய்யுங்கள் என்றார். உபநந்தரின் கருத்தை மக்கள் ஏற்றனர். அவர்கள், பிருந்தாவனத்தை அடைந்தனர். குழந்தைகள் கிருஷ்ணருக்கும், பலராமருக்கும் மாடுகளை மேய்க்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

கோபாலர் பிள்ளைகளுக்கு மாடு மேய்க்க கற்றுக் கொடுப்பது தான் தலையாய பணி. தொழிலில் எதுவுமே கேவலமல்ல. கோபாலர்கள் வசித்த கோகுலம், பிருந்தாவனம் போல் செழிப்பான பகுதியை பூமி இதுவரை பார்த்ததில்லை. கன்றுகளுக்கு போக எஞ்சிய பாலும், நெய்யும், வெண்ணெயுமே அவர்களின் வாழக்கைத் தரத்தை உயர்வாக வைத்திருந்தது. மாடு மேய்க்கச்செல்லும் சிறுவர்களுக்கு கல்வியறிவு இல்லை. ஆனால், என்ன ஆச்சரியம்... ஒவ்வொருவர் வீட்டிலும் செல்வம் கொட்டிக் கிடந்தது.

சிறுவர்களெல்லாம், ஏராளமான நகைகளை அணிந்திருப்பார்கள். அவற்றை அணிந்தபடிதான் மேய்ச்சல் நிலங்களுக்கும் செல்வார்கள். கிருஷ்ணரும்பலராமரும் மாடுகளை ஓட்டிக் கொண்டு கோவர்த்தன மலைக்குச் செல்வார்கள். இருவரும் புல்லாங்குழல் இசைத்தபடி இருப்பார்கள். மாடுகளும் மயங்கும், மேய்க்கச் சென்ற மற்ற சிறுவர்களும் அந்த இசையில் மயங்கிக் கிடப்பார்கள். இப்படி, மாடுகளை மேய்க்க அனுப்பினால் கிருஷ்ணன் நண்பர்களை அழைத்துக்கொண்டு யமுனை நதிக்கரையில் நண்பர்களோடு விளையாடுவார்கள்.

ஒருமுறை, கம்சனால் அனுபப்பட்ட வத்ஸாசுரன் என்பவன் கிருஷ்ணரைக் கொல்ல வந்தான். அவன் கன்றுக் குட்டியாக உருமாறி, கிருஷ்ணர் மேய்த்த கன்றுகளுடன் கலந்து நின்றான். கிருஷ்ணர் அதை அடையாளம் கண்டு கொண்டார். அதன்காலைப் பிடித்து தூக்கி மரத்தில் அடித்தார். வத்ஸாசுரன் மடிந்தான். அவனது சுயவடிவைக் கண்டு அனைவரும் அஞ்சினர். இன்னொரு முறை, ஒரு பெரிய வாத்தின் வடிவில் பகாசுரன் என்பவன் கிருஷ்ணரைக் கொல்ல வந்தான். அதன் அலகுகளைப் பிளந்து, கிருஷ்ணர் கொன்றார். ஒருமுறை, அகாசுரன் என்பவன் பிருந்தாவனத்திற்கு வந்தான். அவன் தேவர்களை தன் வலிமையால் மிரட்டுபவன். அவனைக் கண்டு தேவர்களுக்கு அச்சம். அவர்கள் அமிர்தம் பருகி, தங்கள் உயிர் போகாது என்று தெரிந்திருந்தாலும் கூட, பயந்த நிலையில் இருந்தனர். அகாசுரன், பூமியில் கிருஷ்ணர் செய்த செயல்களைப் பார்த்தான்.

கிருஷ்ணனும், அவரது நண்பர்களும் சந்தோஷமாக இருப்பது பிடிக்கவில்லை. இவன் பூதனாவின் சகோதரன். அவனுக்கு தன் சகோதரியைக் கொன்ற கிருஷ்ணனைக் கொலை செய்து விட என்ற எண்ணம் ஏற்பட்டது. அவன் மஹிமா என்னும் யோகவித்தை அறிந்தவன். இந்த வித்தையின் மூலம், ஒருவர் தனது உருவத்தை மிகப்பெரிதாக்கிக் கொள்ளமுடியும். அகாசுரன் தன் உருவத்தை ஏழு கி.மீ. நீளத்துக்கு பெரிதாக்கி, ஒரு பாம்பின் வடிவெடுத்து கிருஷ்ணரையும், அவரது நண்பர்களையும் கொல்ல வந்தான்.

கிருஷ்ணரும், அவரது தோழர்களும் கன்று மேய்க்கும் இடத்தில் வாயைப் பிளந்தபடி படுத்துக் கொண்டான். கன்று மேய்க்க வந்த சிறுவர்கள், ஒரு சர்ப்பம் வாயைத் திறந்து படுத்திருப்பதைப் பார்த்து விட்டனர். அவர்களில் ஒருவன் சொன்னான். இன்னும் சிறிது நேரத்தில் கிருஷ்ணன் இங்கு வருவான். அவன் நம் இனிய நண்பன். அவனால் தான் பிருந்தாவனத்தில் உள்ள மக்களெல்லாம் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவனை இந்தப் பாம்பு விழுங்கிவிட்டால் அவர்களின் நிலைமை என்னாவது ?

மேலும், கஷ்ட காலத்தில் நண்பனைக் காப்பாற்றுபவனே உண்மையான தோழன். நாம், இந்த பாம்பின் வாய்க்குள் முதலில் செல்வோம். அது வாயை மூடிக் கொண்டு போய்விடும். கிருஷ்ணன் தப்பி விடுவான் என்றான். எல்லா தோழர்களும் ஆஹா... அருமையான யோசனை என்றனர். வேகமாக ஓடி பாம்பின் வாய்க்குள் சென்றுவிட்டனர்.

பின்னால் வந்த கிருஷ்ணர் இதைப் பார்த்து விட்டார். தன் நண்பர்களுக்காக வருத்தப்பட்டார். அவர் நின்ற நிலையிலேயே அந்த பாம்பைக் கொல்ல முடியும் ! ஆனால், மனுஷ ஜென்மாவாக பூமிக்கு வந்திருக்கிறாரே .... அந்த எல்லையை அவ்வப்போது அவர் கடைபிடிக்கத்தான் செய்வார். தன் நண்பர்கள் சென்ற அதே வாய்க்குள் புகுந்து விட்டார். சதிகார பாம்பு வாயை மூடிவிட்டது வானத்து தேவர்களே இதைக்கண்டு கலங்கிவிட்டனர்.

கிருஷ்ணர் இல்லாவிட்டால் தங்கள் கதி என்னாவது என்று ! வயிற்றுக்குள் இருந்த நண்பர்களும் அலறினர். கிருஷ்ணர் அவர்களை தன் கருணைப் பார்வையால் அமைதிப்படுத்தினார்... பெரிதாக்கிக் கொண்டே இருந்தார். அகாசுரப்பாம்புக்கு மூச்சடைத்தது. அதன் வயிறு கிழிந்தது. வலி தாளாமல் வாயைப் பிளந்தது. கிருஷ்ணரும், தோழர்களும் தப்பி வந்து விட்டனர். வயிறு கிழிந்த பாம்பு இறந்தது. கிருஷ்ணரின் பாதம்பட்ட காரணத்தால், அதன் உயிரொளி அவரிடமே கலந்தது. நண்பர்களைக் காத்த கண்ணன், தன்னைக் கொல்ல வந்தவனுக்கும் முக்தி கொடுத்தார்.



ஒரு சமயம் கிருஷ்ணர், யமுனை நதிக்கரைக்கு தனித்துச் சென்றார். அன்று பலராமன் உடன் வரவில்லை. அந்த ஆற்றில் காளிங்கன் என்ற நாகம் வசித்தது. அதற்கு நூறு தலைகள். அந்தக் கொடிய நச்சுப்பாம்பு, தன் விஷத்தை தண்ணீரில் பரப்பியது. கரைகளில் நின்ற பெரும்பாலான மரங்கள் அதன் விஷக்காற்று பட்டு கருகிவிட்டன. காளிங்களின் இந்தப் போக்கு கிருஷ்ணருக்கு கோபத்தைத் தந்தது. ஆனாலும், கரையில் ஒரே ஒரு மரம் மட்டும் பச்சை பசேலென கிளைகளுடன் உயரமாக நின்றது. இந்த மரத்தில் கிருஷ்ணர் பிற்காலத்தில் ஏறுவார் எனத்தெரிந்து, கருடபகவான் அதன் மீது அமிர்தத்தை தெளித்து வைத்திருந்தாராம்.

அதனால் அது அழியவில்லை. அந்த மரத்தின் மீதேறிய கிருஷ்ணர்

தண்ணீரில் குதித்தார். தண்ணீர் சிதறியது. அப்போது ஏற்பட்ட நீரலைகள், பல மிக்க காளிங்கனையே அசைத்தது. அது அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. யாரோ ஒரு சிறுவன் தண்ணீரில் குதித்து தன்னை இம்சை செய்ததைக் கண்ட காளிங்கன், ஆத்திரத்துடன் கிருஷ்ணரை நோக்கி வந்தான். கிருஷ்ணரின் அழகு அவனைக் கவர்ந்து விட்டது. அப்படியே அதிசயித்து பார்த்தான். இருப்பினும், தன் ஆக்ரோஷத்தைக் காட்டி அவரை வளைத்தான்.

கிருஷ்ணர் தன் பலத்தைப் பிரயோகித்து விடுபட்டு, அவனது தலையில் ஏறி நர்த்தனமாடினார். அப்போது, அவரது பாதங்களின் வலிமையை உணர்ந்தான் காளிங்கன். ஆட்டத்தின் ஒவ்வொரு அசைவும் தாங்க முடியாத வலியைத் தர, ஒவ்வொரு தலையாக உயர்த்தி தாக்குப் பிடித்தான். ஒரு கட்டத்தில் வலி தாளாமல் மரண ஓலமிடத் துவங்கினான். அப்போது, காளிங்கனின் பத்தினியர் அவர் பகவான் நாராயணின் அவதாரம் என்பதைத் தெரிந்து ஓடி வந்தனர்.

இங்கே இப்படி இருக்க, கரையில் நின்ற நண்பர்கள், கிருஷ்ணர் நீரில் குதித்து காளிங்கனால் இழுத்துச் செல்லப்பட்டதை அறிந்து, யசோதையிடம் தகவல் சொன்னார்கள். அவள் பதறியடித்து வந்தாள். பலராமனுக்கு தெரியும், காளிங்கனின் கதை முடிந்து விடுமென்று. எனவே, அவன் பதட்டமின்றி வந்தான். யாசோதை தண்ணீரில் குதிக்க முயன்றாள். என் மகனை இழுத்திச் சென்ற அந்த பாம்பு என்னையும் இழுத்துச் செல்லட்டும், என்றாள். யசோதயை கரையில் நின்ற கோபியர்கள் பிடித்து இழுத்து வந்தனர். அவள் மூர்ச்சையாகி விட்டாள். காளிங்கனின் பத்தினிகள், கிருஷ்ணரிடம் சென்றனர்.
.

மகாபிரபு ! உமது சக்தியை அறியாமல் எங்களது கணவர் உம்மிடம் தவறு செய்து விட்டார். அவரை ரட்சிக்க வேண்டும். எங்களுக்கு மாங்கல்ய பாக்கியம் தர வேண்டும், என்றனர். கிருஷ்ணர் அதை ஏற்றார். காளிங்கன் அவரை தன் தலையில் உயர்த்தி நீர்மட்டத்துக்கு மேலே கொண்டு வந்து விட்டது. கிருஷ்ணர் கரைக்கு வந்த பின்னர் தான் எல்லாருக்கும் உயிர் வந்தது. காளிங்கனின் பத்தினியர் அவருக்கு நன்றி தெரிவித்தனர். காளிங்கன் அவரிடம், முன்வினைப்பட்டது. நான் கொடுத்து வைத்தவன். கடிப்பதும், சீறுவதும் எனது இயற்கை குணம். அது உம்மால் தரப்பட்டது. அதை உம்மால் தான் மாற்ற முடியும். எனவே, நான் சீறியது குறித்து கவலைப்படவில்லை.

இருப்பினும், மகாபிரபு தண்டிக்க நினைத்தாலும் அதையே ஏற்கிறேன், என்றது பணிவுடன். உடனே கிருஷ்ணர், காளிங்கா ! நீ உனது மனைவி, குழந்தை மற்ற சகாக்களுடன் கடலுக்கு போய்விடு. யமுனையை அசுத்தப்படுத்தாதே. பசுக்களும், சிறுவர்களும் அதை குடிக்கிறார்கள். அதில் விஷத்தன்மை ஏற்படுவதை அனுமதிக்கமாட்டேன். நீ கருடனுக்கு பயந்தே இங்கு வந்தாய். இப்போது, நான் நடனமாடியாதால் ஏற்பட்ட குறிகள் உன் தலையில் உள்ளன. இதைப் பார்க்கும் கருடன் உன்னை ஏதும் செய்யமாட்டான், என்றார். காளிங்கனும் அதை ஏற்று, கடல் நோக்கி போய்விட்டது. கோகுலமக்கள் நிம்மதி பெற்றனர்.

கிருஷ்ணரின் உறுதியான மனம், வீரம், அலங்காரம் ஆகியவை கோபியர்களை பெரிதும் கவர்ந்திருந்து. பல சிறுமிகள் கிருஷ்ணன் தனக்கும்

கணவனாக மாட்டானா என எண்ணத் துவங்கினர். அவரது புல்லாங்குழல் இசையால் ஈர்க்கப்படும் அவர்கள் தங்களை மறந்து நிற்பார்கள். சில சமயங்களில் அவர்களது ஆடைகள் விலகியோ, நெகிழ்ந்தோ இருக்கும்.

ஆனால், இசையிலும் கிருஷ்ணரின் அழகிலும் லயித்துப் போகும் அவர்கள் இவ்வாறு ஆடை நெகிழ்ந்தது கூட தெரியாமல் அவரையே கண்கொட்டாமல் பார்த்து கொண்டிருப்பார்கள். அப்பகுதியில் வசித்த பழங்குடி இனப்பெண்களும் கிருஷ்ணரை காதலித்தனர். கிருஷ்ணர் நடந்து செல்லும்போது, அவரது திருவடிப்பட்டு மண் சிவந்து போகும். அந்த சிவந்தமண்னை எடுத்து குழைத்து தங்கள் மார்பிலும், முகத்திலும் பூசிக்கொள்வார்கள் பழங்குடிப் பெண்கள்.

மேலும், கோபியர் கிருஷ்ணரின் நினைவிலேயே மூழ்கிக்கிடந்தனர். கிருஷ்ணர் கடவுள். கடவுளின் நினைப்பில் மூழ்கிக் கிடப்பது எவ்வகையிலும் தவறாகாது. இப்போதும், இது தொடரத்தான் செய்கிறது. திருமணத்துக்கு முன்னும், பிறகும், நம் பெண்கள் சிவனையோ, திருமாலையோ, முருகனையோ உள்ளன்போடு வணங்கத்தான் செய்கிறார்கள். அது பக்தி என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறதே தவிர, ஒரு ஆணுடன் கொண்ட உறவாகக் கொள்ளப்படாது. காமம் என்ற உணர்வு கிருஷ்ணனை நினைத்தாலே போய்விடும். காமம் நீங்கிவிட்டால் உலகில் பிறப்புகளே இருக்காதே ! மீண்டும் பிறக்கக்கூடாது. கிருஷ்ணனுடன் கலந்திருக்க வேண்டும் என்பதே கோபிகிருஷ்ண காதல் மூலம் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது.

கிருஷ்ணர் யமுனையில் அதிகாலையில் குளிக்கும் பெண்களின் பின்னால் செல்வார். ஒரு மரத்தின் மீது அமர்ந்து கொள்வார். கோபியர், தங்கள் ஆடைகளை முழுமையாகக் களைந்து விட்டு, ஆற்றில் இறங்கி நீராடினார்கள். கோபியர் கரையில் கழற்றி வைத்திருந்த ஆடையை எடுத்து மரப்பொந்தில் ஒளித்து வைத்தார் கிருஷ்ணர். கரைக்கு வந்த கோபியர் ஆடையைக் காணாமல் தவித்தனர். எப்படி வீட்டுக்குச் செல்வது என தவித்த வேளையில், உங்கள் ஆடைகள் என்னிடம் உள்ளன என மரத்தின் மீதிருந்து குரல் கேட்டது. கோபியர் நிமிர்ந்து பார்த்தனர். மரத்தின் உச்சியில் அமர்ந்திருந்த கிருஷ்ணரைக் கண்டு வெட்கப்பட்டனர்.

கண்ணா ! பெண்கள் குளிக்கும் இடத்தில் உனக்கு என்ன வேலை ? போதாக்குறைக்கு எங்கள் ஆடைகளையும் கவர்ந்து கொண்டாய். இப்போது, நாங்கள் எப்படி மேலே வருவது ? என்றாள். கிருஷ்ணர் கலகலவென சிரித்தபடியே, நானாகவே இங்கு வந்தேன். நீங்கள் என்னை மனதில் நினைத்தீர்கள் ! என்னைப் பற்றி பாடினீர்கள். என்னையே அடைய வேண்டுமென மனதார வேண்டினீர்கள். அது எனக்கு கேட்டது வந்தேன் என்றார். இது நிஜம் தானே ! கோபிகைகளால் அவருக்கு பதிலளிக்க முடியவில்லை.



இருந்தாலும் உடைகளைப் பெறும் பொருட்டு, அதற்காக, நாங்கள் ஆடைகளை எப்படி மேலே வந்து பெற முடியும். நீயாக கீழே வைத்து விட்டு போய்விடு என்றனர். கோபியரே ! ஒரு பெண் கணவனைத்தவிர பிறர் முன்னிலையில் ஆடையின்றி இருக்கலாகாது. நீங்கள் என்னைத் திருமணம் செய்து கொள்ள

வேண்டுமென துர்க்கையை வழிபட்டு விரதம் இருந்தீர்கள். உங்கள் கணவனாகிய என் முன்னால் வருவதற்கு என்ன வெட்கம் ? வாருங்கள். வந்து பெற்றுக் கொள்ளுங்கள், என்றார். அவர்கள் தயங்கவே, பெண்களே ! ஆடையின்றி தண்ணீரில் இறங்குவது குற்றம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உங்கள் செயலால் வருணன் கோபமடைந்துள்ளான். எனவே, நீங்கள் வருணனை நினைத்து மனதார வணங்கி, இனி இவ்வாறு ஆடையின்றி குளிக்கமாட்டோம். எனச் சொல்லி அவனிடம் மன்னிப்பு கேளுங்கள்.

பிறகு மேலே வந்து ஆடையைப் பெற்றுக் கொள்ளுங்கள், என்றான். இப்படி கிருஷ்ணரின் லீலைகள் தொடர்ந்து கொண்டிருக்க நாரத முனிவர் கம்சனை அழிப்பதற்குரிய காலம் நெருங்கி விட்டதை அறிந்தார். அவர் நேராக கம்சனிடம் சென்றார். கம்சா ! சவுக்கியமாக இருக்கிறாயா ? உன் சவுக்கியம் நீண்டு நீடிக்க வேண்டும் என்ற ஆசையில் நான் இங்கே வந்திருக்கிறேன்.

ஆனால், நீயோ, உன்னை அழிக்கப்போகும் கிருஷ்ணனும், பலராமனும் பெரியவர்களாக வளர்ந்து விட்டதை அறியாமாலேயே இருக்கிறாய். அவர்களை சீக்கிரம் கொன்றுவிடு. இல்லாவிட்டால், உன் அழிவை யாராலும் தடுக்க இயலாமல் போய்விடும் நீ சுதாரிப்பாக இருக்க வேண்டும் என்பதாலும், உன்மீது நான் அக்கறை கொண்டவன் என்பதாலும் சொல்கிறேன். உன்மீது ஏமாற்றிய வசுதேவரையும், நந்தகோபனையும் விட்டுவிடாதே, என்றார். கம்சனும் அவரது கருத்தை ஆமோதித்து, வேண்டிய ஏற்பாடுகளை உடனடியாகச் செய்வதாகச் சொன்னான். நாரதர் தன் கடமை முடிந்த திருப்தியுடன் சென்றார்.

கம்சன் கிருஷ்ணரைக் கொல்வதற்குரிய ஏற்பாடுகளைத் துவங்கினான். சிவசக்தியான காலபைரவருக்கு மிருகபலி கொடுத்தான். சில யாகங்களையும் செய்தான். கிருஷ்ணர் வளர்ந்து கொண்டிருக்கும் யது வம்சத்தைச் சேர்ந்த அக்ரூரர் என்பவரை அழைத்து, அன்பு நண்பரே ! பிருந்தாவனத்தில் வசிக்கும் கிருஷ்ணர், பலராமன், வசுதேவர், நந்தகோபர், எனது தங்கை தேவகி, எனது தந்தை உக்கிரசேனன், சித்தப்பா தேவகன் ஆகியோரைக் கொல்லப் போகிறேன். எனது அரசியல் காரியங்களில், என் தந்தை தலையிடுவதால், அவரையும் கொல்ல வேண்டியுள்ளது. எதிரிகளே இல்லாத நிலையில் இவ்வுலகை சிரமமின்றி ஆள்வேன். எனக்கு என் மாமனார் ஜராசந்தன், துவிவிதா என்ற குரங்கு அரசன், சம்பரன், நரகாசுரன், பாணாசுரன் என்ற எனது நண்பர்கள் உதவுவர். நீங்களும் உதவ வேண்டும், என்றான்.

அக்ரூரர் அவன் சொல்வதைக் கேட்டு, எம்மாதிரியான உதவி என்றார். அக்ரூரரே! கிருஷ்ண பலராமர்களை இங்கே ஒரு மல்யுத்தப் போட்டி நடப்பதாகச் சொல்லி, அழைத்து வாருங்கள். அவர்கள் வரும் வழியில் குவலயாபீடம் என்ற யானையை அவிழ்த்து விடுவேன். அது அவர்களைக் கொல்லும். ஒருவேளை தப்பிவிட்டால், எனது மல்யுத்த வீரர்கள் கொல்வார்கள், என்றான். அக்ரூரர் கிருஷ்ணரின் பக்தர். அவருக்கு கம்சன் சொன்னது பிடிக்கவில்லை. இருப்பினும், கம்சனே ! உன் நண்பன் என்ற முறையில் சொல்கிறேன். திட்டம் தீட்டுவது மனித அறிவு. அதை வெற்றி பெறச் செய்பவன் இறைவனே ! ஒருவேளை இவ்விஷயத்தில் நீ தோற்றுப்போகலாம். நல்லதைச் சொல்லவேண்டியது நண்பனின் கடமை என்பதால் சொன்னேன்.

இருப்பினும், உனக்காக கிருஷ்ணரிடம் சென்று அவரை அழைத்து வருகிறேன், என்றார். சொன்னபடியே பிருந்தாவனம் சென்று, கிருஷ்ணரைச் சந்திக்கும் நாளுக்காக காத்திருந்தார். அவரது பக்தர் என்ற முறையில், கிருஷ்ணரை அருகில் இருந்து தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கப்போவது பற்றி மகிழ்ந்தார். அதே நேரம், கம்சனின் பிரதிநிதியாக வந்திருப்பதால், கிருஷ்ணர் தன்னை என்ன செய்வாரோ என்ற பயமும் மனதில் எழுந்தது. இருப்பினும், தனது தேரில் சென்று கிருஷ்ணர் இருக்கும் இடத்தை அடைந்தார்.

பிருந்தாவனத்துக்குள் அக்ரூரரின் ரதம் நுழைந்தது. ஓரிடத்தில் மரகத மலையும், வெள்ளிமலையும் சேர்ந்து ஒளி வீசியது போன்ற பிரகாசம் ஏற்படவே ரதத்தை நிறுத்தினர். அங்கே கிருஷ்ணரும், பலராமரும் ஒளிபொங்கும் உடலுடன் நின்று கொண்டிருந்தனர். ஆங்காங்கே நடந்ததால் மணலில் பதிந்த அவர்களது பாதச்சுவடுகளைத் தான் அக்ரூரர் முதன்முதலாகப் பார்த்தார்.

அவற்றை மனதார தரிசித்தார். அந்த பாதசுவடுகளை பார்த்த பிறகு, கிருஷ்ண, பலராமரின் முகங்களை உற்று நோக்கினார் அக்ரூரர். கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. கிருஷ்ண, பலராமர் அவரை எதிர்கொண்டு வரவேற்றனர். எதிரியின் தூதராய் வந்தாலும், தனது பக்தர் அக்ரூரர் என்பது அந்த பரந்தாமனுக்கு தெரியும் ! அவர்கள் விரைந்து வந்து அக்ரூரரை வரவேற்றனர். அவரது கையைப் பிடித்து அழைத்துச் சென்றனர். அவருக்கு ஒரு பசுவைத் தானமாக வழங்கினர். அவரை உணவருந்தச் செய்து, சந்தனம் முதலானவை பூசி உபசரித்தனர். இதன்பிறகு, அக்ரூரர் கம்சனின் திட்டம் பற்றியும், நாரதர் அங்கு வந்து சென்றது பற்றியும் தகவல் தெரிவித்தார்.

மதுராவில், தனுர் யக்ஞ விழா நடக்க இருப்பது பற்றியும், அதில் கோகுலத்திலுள்ள இளைஞர்கள் அனைவரும் வரவேண்டும் என்ற கம்சனின் உத்தரவு பற்றியும் சொன்னார். கிருஷ்ணர் அதற்குரிய ஏற்பாட்டை உடனடியாக முடித்தார். அவர்கள் மதுராவுக்கு புறப்பட்டனர். தேர் புறப்பட்டது. கோபியர்கள் வந்துவழிவிடமறித்தார்கள்.

கண்ணா ! நீ போகாதே என கண்களாலேயே தடுத்தார்கள். அவர்களில் மனநிலையைப் புரிந்து கொண்ட கிருஷ்ணர் அவர்களிடம், அருமை கோபியரே ! என்னை உங்கள் மனதால் கட்டிப் போடாதீர்கள். என்னை அவிழ்த்து விடுங்கள் உங்களுடன் களித்து விளையாடுவேன், என உறுதியளித்தார். கோபியர் ஒருவழியாய் வழிவிட ரதங்கள் புறப்பட்டன. செல்லும் வழியில் யமுனை நதி வந்தது. அங்கே ஒரு ஐந்துதலை நாகம் ! அது தன் உடலை மடித்திருக்க, அதன் மீது விரிக்கப்பட்ட பஞ்சு மெத்தையில் பரமாத்மா சயனித்திருக்கும் காட்சி அக்ரூரருக்கு தென்பட்டது. ஆம்... மாயக்கண்ணன் தன் பக்தனான அக்ரூரருக்கும் இப்படி காட்சி தந்தார். இந்த தரிசனத்தின் போது, அக்ரூரர் மனம் குளிர்ந்து கிருஷ்ணரைத் துதித்தார். தேர்கள் மதுராபுரிக்கு நுழைந்தன. அக்ரூரர் தனது இல்லத்துக்கு வரும்படி கிருஷ்ணரை அழைத்தார்.

கிருஷ்ணர் அவரிடம், அக்ரூரரே ! மதுராவிலுள்ள என் குல எதிரிகளை அழித்தபிறகு, உமது இல்லத்துக்கு வருகிறேன், என்றார். அக்ரூரருக்கு மனதுக்கு கஷ்டமாயிருந்தாலும், அந்தக் கடவுளின் வார்த்தையில் நிச்சயம் அர்த்தமிருக்கும் என்பதைப் புரிந்து கொண்டு, கம்சனிடம் சென்றார்.

கிருஷ்ணர் மதுராவுக்கு வந்துவிட்ட செய்தியை அவனுக்கு அறிவித்தார். கிருஷ்ண, பலராமர் தம் திட்டப்படி மதுராவுக்கு வந்துவிட்டாலும், கம்சனுக்கு உள்ளூர பயம். அவர்களை எப்படியும் மடக்கிவிடலாம் என திட்டம் தீட்டியிருந்தான். கிருஷ்ண பலராமர்கள் மதுரா நகரை தங்கள் நண்பர்களுடன் சுற்ற ஆரம்பித்தனர். அந்த நகரம் மிக நேர்த்தியாக இருந்தது. மாளிகை போன்ற வீடுகளில் உள்ள கதவுகள் பத்தரை மாற்று பசும்பொன்னால் செய்யப்பட்டிருந்தன. செல்வச்செழிப்புக்கு இலக்கணமான ஊர் அது. எதிரிகளை மடக்க ஆங்காங்கே அகழிகள் தோண்டப்பட்டிருந்தன.

கிருஷ்ணர், வழியில் சென்ற ஒரு சலவைத் தொழிலாளியை அழைத்தார். நீ எனக்கு அரண்மனைவாசிகள் உடுத்தும் விலை உயர்ந்த ஆடைகளைக் கொடு, என்றார். அந்த தொழிலாளி, சிறுவனே ! கம்சமகாராஜாவின் ஆடையைக் கேட்குமளவுக்கு உனக்கு தைரியம் வந்து விட்டதா ? ஓடிப்போய்விடு. மன்னரின் தண்டனைக்கு ஆளாகாதே, என்றார். கிருஷ்ணருக்கு கோபம் வந்துவிட்டது. அவனை ஒரு அடி அடித்தார். அவன் இறந்து விட்டான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு தையல்காரன் ஓடி வந்தான். ஐயா ! இது என் கடையில் ஒருவர் தைக்கக் கொடுத்தார். இதை நீங்கள் அணிந்துகொள்ளுங்கள். பொருத்தமாயிருக்கும், என்றான். அவர் அதை அன்புடன் அணிந்து கொண்டார். அந்த மட்டிலேயே அந்த தையல்காரன் ஸாரூப்ய முக்தி அடைந்து விட்டான். அந்தத்தெரு வழியே ஒரு கூன் விழுந்த பெண் வந்தாள். அவள் கிருஷ்ண சகோதரர்களை கவனித்தாள். அவள் இளமையானவள். ஆனால் ஊனமுற்றவள். கம்சனுக்கு சந்தனம் பூசுவது அவளது பணி. அவள் அவர்களைக் கண்டதும் அழகில் சொக்கி நின்றாள்.

பெண்ணே ! நீ யார் ? இந்த சந்தனக்கிண்ணத்துடன் எங்கே செல்கிறாய் ? என்றதும், அவள் கம்சனின் அரண்மனைக்குச் செல்வதாக தெரிவித்தாள். இந்த சந்தனம் மிக அருமையான மணம் கொண்டதாக உள்ளதே ! எங்களுக்கு இதை பூசமாட்டாயா ? என்றதும், அவள் மகிழ்ச்சியுடன், இது ராஜாவுக்கு உரியதுதான். இருப்பினும், அவரை விட மிக உயர்ந்தவர்களாக உங்களைக் கருதுகிறேன். மனதளவில் உயர்ந்தவர்களுக்கே சந்தனம் பூசும் உரிமையுண்டு. நான் பூசுகிறேன். எனச் சொல்லி, கிருஷ்ணரின் மார்பில் தடவினாளோ இல்லையோ, அந்த உடல் ஸ்பரிசம்பட்டதும், அவளது கூன் நிமிர்ந்தது.

அவள் அழகிய வடிவத்தை அடைந்தாள். தன்னையே அவளால் நம்ப முடியவில்லை. முற்பிறவி ஞாபகம் வந்தது. ஆ ராமா ! நீயா ! உனக்கு நான் துரோகம் இழைத்தேன். உன் சிற்றன்னையிடம் சொல்லி காட்டுக்கு அனுப்பி வைத்த கொடுமைக்காரியடா ! இப்பிறவியிலும், நான் அதே ஊனத்துடன் பிறந்தேன். இருப்பினும், நீ எனக்கு செய்த உதவியை என்ன சொல்லி வர்ணிப்பேன் ! எனக்கு பேச்சே வரவில்லை. ராமா ! உன் சிற்றன்னைக்கு நான் செய்த சேவைக்கு பரிசாக இப்படி செய்துவிட்டாயே !

முற்பிறவியில், கொடுமைக்காரியாயினும் கூட, உனது தரிசனம் எனக்கு கிடைத்தது என்பதன் பலனை இப்போது அனுபவித்து விட்டேனோ ! பரந்தாமா ! நான் எவ்வளவு பெரிய பாக்கியவதி. அன்று ராமதரிசனம், இன்று கொடுமைக்காரனான கம்சனுக்கு பணியாளாக இருந்தும் கிருஷ்ண தரிசனம்

காட்டினாய். உனக்கு சேவை செய்யும் பாக்கியம் தந்தாய், என மனதில் நினைத்துக் கொண்டிருக்கும் போதே, அந்த நினைவலைகளை மறக்கச் செய்துவிட்டார் கிருஷ்ணர். இப்போது, தன்னிலைக்கு திரும்பிய அந்த இளம்பெண், கிருஷ்ணரின் மீது காதல் கொண்டவளாய், கிருஷ்ணா ! இத்தனை அழகிய உருவத்தை கொடுத்த நீயே என்னை அடையவேண்டும். வா, என் இல்லத்துக்கு என்றாள்.

பெண்ணே ! நான் உன் இல்லம் வருவேன். கவலைப்படாதே. நான் வந்த காரியத்தை முடித்துவிட்டு வருகிறேன். என சொல்லிவிட்டு கிளம்பி விட்டார். இதற்குள் கம்சன் கிருஷ்ணரைக் கொல்வதற்கான ஏற்பாடுகளை முடித்து விட்டான். மிகப்பெரிய மல்யுத்தத்துக்கு ஏற்பாடு செய்து சிறந்த வீரர்கள் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தான். மல்யுத்தப் போட்டிக்கான களம் தயாராகி விட்டது. மதுராபுரியின் பிரபல மல்யுத்த வீரர்களான சாணூரன், முஷ்டிகன், சாலன், தோசாலன், கூடன் ஆகியோர் தயார் நிலையில் இருந்தனர்.

எல்லாருமே மிக பலசாலிகள். வயதிலோ, வீரத்திலோ கிருஷ்ண, பலராமருக்கு சற்றும் ஒத்து வராதவர்கள். அவர்கள் களத்தில் காத்திருந்த வேளையில், கம்சன் கிருஷ்ணரைக் கொல்ல மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்திருந்தான். அவர் வரும் வழியில், குவாலயாபீட என்ற யானையை கம்சன் நிறுத்தியிருந்தான். அந்த யானையைக் கண்டால், பிற யானைகள் ஓட்டமெடுக்கும். அப்படிப்பட்ட சக்திமிக்க அந்த யானையை கிருஷ்ண பலராமர் வரும் வழியில் வேண்டுமென்றே மறைத்து நிறுத்தியிருந்தான் அதன் பாகன்.

கிருஷ்ணர் யானையை ஒதுக்கி நிறுத்தும்படி பாகனிடம் சொல்லவே, அவன் கண்டுகொள்ளவில்லை. பாகனின் நோக்கம் கிருஷ்ணருக்கும் புரிந்து விட்டது என்றாலும், முறையாக அவனிடம் சொல்லிப் பார்த்தார். அவன் முடியாது என வம்பு செய்யவே, கோபமடைந்த கிருஷ்ணர் யானையை மிக லாவகமாகத் தாண்டிச் செல்ல, அவர்களை பிடிக்கும்படி யானையை பாகன் ஏவினான். யானை தும்பிக்கையை அவர்களை நோக்கி நீட்ட, கிருஷ்ணர் யானையை ஓங்கிக் குத்தினார்.

அவரது பலம் தாங்காத யானை சுருண்டது. அதன் வாலை பிடித்து தரதரவென இழுத்தார். பாகன் நிலைதடுமாறி கீழே விழுந்தான். யானை பிளிறித்துடித்தது உயிர்விட்டது. பாகனையும் ஒரே அடியில் வீழ்த்திய மாயக் கிருஷ்ணர், வெற்றி வீரராக மல்யுத்த களத்துக்குள் புகுந்தார். அவர்கள் வருவதற்குள் முன்னால் ஓடிச்சென்ற வீரன் ஒருவன், கம்சனிடம் யானை கொல்லப்பட்ட விபரத்தைச் சொல்லி விட்டான். கூட்டத்தினருக்கும் விஷயம் தெரிந்துவிட்டது.

அந்த மாவீரர்கள் அரங்கில் நுழையவும், ஒவ்வொருவரும் கிருஷ்ணரை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது பற்றி மகிழ்ச்சியடைந்தனர். பார்வையாளர்கள் வரிசைக்கு கிருஷ்ணரும் பலராமரும் சென்றனர். அப்போது சாணூரன் கிருஷ்ணா ! பலராமா ! ஏன் ஒதுங்கி நிற்கிறீர்கள் ? போட்டியில் நீங்கள் பங்கேற்கவில்லையா ? என்றான். கிருஷ்ணர் அவனிடம், சாணூரா ! இங்கே பலத்திலும், வீரத்திலும், அனுபவத்திலும் சிறந்த வீரர்கள் இருக்கிறீர்கள்.

நீங்கள் ஒருவருக்கொருவர் மோதினால் தான் போட்டி சுவாரஸ்யமாக இருக்கும். நாங்கள் சிறுவர்கள். எங்களோடு நீங்கள் மோதினால், பார்ப்பவர்களுக்கு ரசனை இருக்காது. மேலும், அது நியாயமும் அல்ல, என்றார். கிருஷ்ணா ! நீங்கள் குவாலயபீட யானையையே கொன்றவர்கள் என்ற தகவல் எங்களுக்கு நீங்கள் வரும் முன்பே கிடைத்துவிட்டது. அதை விடவா நாங்கள் பலசாலிகள். அதனால், நீங்கள் எங்களோடு மோதலாம், வாருங்கள் என்றான். கிருஷ்ணர் சாணுரனையும், பலராமர் முஷ்டிகனையும் எதிர்த்து யுத்தம் செய்தனர்.

அவர்களது அடியை அந்த மல்லர்களால் தாங்க முடியாமல் கூக்குரலிட்டு இறந்தனர். அடுத்து மற்ற மல்லர்கள் சிலர் களமிறங்க அவர்களும் கொல்லப்பட்டார்கள். இதைக் கண்ட மற்றமல்லர்கள் களத்தில் இருந்து தப்பி ஓடிவிட்டனர். மக்கள் கைத்தட்டி மகிழ்ந்தனர். கம்சன் அதிர்ந்து போனான். கிருஷ்ண பலராமரை பாரட்ட மனமில்லாதது மட்டுமின்றி, வீரர்களே ! இந்த கிருஷ்ணனையும், பலராமனையும் மதுராபுரியை விட்டு விரட்டி அடியுங்கள்.

இவர்களது தந்தை நந்தகோபன், தாய் யசோதா, வஞ்சகம் புரிந்த வசுதேவர், இவர்களுக்கு ஆதரவளித்த எனது தந்தை உக்ரசேனன் உட்பட அனைவரும் கொல்லப்பட வேண்டும், என ஆணையிட்டான். கிருஷ்ணருக்கோ மகாகோபம். சற்றும் நியாயமின்றி நடந்த அந்தக் கொடியவன் மீது பாய்ந்தார். அவனது கிரீடத்தை தட்டிவிட்டார். அவனது தலைமுடியை பிடித்து இழுத்தார். ஆசனத்தில் இருந்து சரிந்து விழுந்த அவனை இழுத்து வந்தார். மல்யுத்த களத்தில் அவனைக் கொண்டு வந்து கீழே தள்ளினார். மார்பின் மீது ஏறி அமர்ந்தார்.

கம்சனுக்கு மூச்சு முட்டியது. ஒரே குத்தில் அவன் உயிரை விட்டான். அவனது உயிர் வைகுண்டத்தை அடைந்தது, கொடுமைக்காரனாயினும், சதாசர்வகாலமும் கிருஷ்ணரையே நினைத்தவன் அவன். அவரால் தனக்கு மரணம் ஏற்படுமோ என பயந்து கொண்டே சிந்தித்தவன். வைகுண்டத்தில் அவனுக்கு ஸாரூப்ய சொரூபம் கிடைத்தது. இந்த சொல்லுக்கு நாராயணனைப் போலவே உருவமெடுத்தல் என்பது பொருள். வைகுண்டத்தில் இருப்பவர்கள் நாராயணனை வணங்கி, நாராயண வடிவத்தைப் பெறுவார்களாம். அந்த வடிவத்தை கருணைக்கடலான நாராயணன், கம்சனுக்கு அளித்தருளினார்.

ஒருவன் பூமியில் இருக்கும் போது என்ன நினைக்கிறானோ அதற்கேற்ற மறுபிறவியை அடைகிறான். கம்சன் பயத்தின் காரணமாக கிருஷ்ணரை நினைத்தாலும், அவரையே நினைத்துக் கொண்டிருந்தால் இந்த உயர் நிலையை அடைய முடிந்தது. கம்சனுக்கு கங்கர் என்பவர் உள்ளிட்ட எட்டு சகோரர்கள் இருந்தனர். கிருஷ்ணரால், அவன் கொல்லப்பட்டதை அறிந்ததும் ஆத்திரமடைந்தனர். அவர்கள் கிருஷ்ணரை பழி வாங்க விரைந்து புறப்பட்டனர்.

தாய்மாமனைக் கொல்வதை வேதம் அனுமதிக்கவில்லை. ஆனால், கம்சனைக் கொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் கிருஷ்ணருக்கு ஏற்பட்டது. ஏனெனில், கம்சனை கிருஷ்ணரை தவிர வேறு யாராலும் கொல்ல முடியாது என்பது அசரீரி வாக்கு. அதன் காரணமாக, பகவான் இங்கே வேதத்தின் கட்டளையை மீற வேண்டியதாயிற்று. சரி.... இது அனுமதிக்கப்பட்ட ஒன்றானால்,

இப்போது தன்னைத் தாக்க வரும் மற்ற தாய் மாமன்களை என்ன செய்வது ? எல்லாருமே தேவகியின் சகோதரர்கள். இவர்களை அழிக்க ஒரே வழி தன் அண்ணன் பலராமன் தான்.

ஏனெனில், அவர் ரோகிணியின் மகன். அவ்வகையில், எதிரே நிற்பவர்கள் தாய்மாமன்மார் ஆக முடியாது. அந்த எட்டு பேரையும் கொல்லும் பணியை பலராமர் ஏற்றுக் கொண்டார். குவலாய பீட யானையைக் கொன்ற போது, கிருஷ்ணரும் அவரும் ஆளுக்கொரு தந்தத்தை ஒடித்து வந்திருந்தனர். அந்த தந்தத்தைக் கொண்டு, கம்சனின் சகோதரர்களைத் தாக்கினார் பலராமர். ஒருவன் பின் ஒருவராக அவர்களை கொன்றார்.

கம்ஷனால் அனுப்பப் பட்ட அசுரர்களை அழித்து, இடையர்களானக் கோகுல வாசிகளின் ஆபத்துகளைக் கண்ணன். பயமின்றி ஒழித்தார். அம்மக்கள் மாயப் பெருமாளாய் வந்த கண்ணனை அன்போடு தன் பிள்ளையைப்போல் வளர்த்ததால் கம்சனால ஒன்றும் செய்ய இயலவில்லை.

கம்சன் பாடு

கம்சனுக்கு ஆயுள் முடியும் காலம் வந்தது. தெய்வசக்தி நிறைந்தக் கிருஷ்ணனை உறவு முறை மாமன் என்று அறிமுகப்படுத்திக் கம்சன் மருமகனைக் காண ஆசை உள்ளவனாக அவர்களை அழைத்து வர அனுப்பினார்.அழைப்பை ஏற்றுக் கண்ணன் மகிழ்ச்சி கொண்ட தன்னோடு சில வீரர்களையும் கூட்டிக்கொண்டு கம்சனை சங்காரம் செய்து தலை மெழுகி விடவேண்டுமென்றுச் சென்றார்.

இறந்த வீடுகளில் அடைக்கப்பட்டத் தப்பட்டை என்கின்றத் தாளத்தை முன்னறிவிப்பாக அடித்துக்கொண்டு ஆரவாரத்துடன் சென்றார்கள். கம்சனின் யானைப் படை, குதிரைப் படைகள் எச்சரிக்கையாகும்படிச் செய்து அவன் ஆட்சிச் செய்து வந்த மதுராவை சென்றடைந்தார்கள்.

ஆயர்பாடியில் வாழும் யசோதையின் அற்புத புதல்வன் வந்துவிட்டான் என்றுக் கோபத்தோடுக் கொண்டு, கண்ணனைக் கொன்றுத் தீர்க்க எண்ணம் கொண்டான் கம்சன். கம்சனுடைய வீரர்களை எல்லாம் கண்ணன் சாகடித்தார். நயவஞ்சகம் கொண்ட கம்சன் கண்ணனை எதிர்த்துப் போரிட வந்தான். இருவருடையக் கைகளும் மோதியதில் நாடும் நகரங்களும் அதிரும்படி மிகவும் கோரமாக இருந்தது. போர்க்களமாக மாறியது மாயக்கண்ணனுடன் கம்சனால் எதிர்த்துப் போரிட முடியாமல் தள்ளாடி தடுமாறி கீழே விழுந்தான்.

கிருஷ்ணன் மிகவும் சாமர்த்தியமாக கம்சனின் மார்பில் குதித்து அவன் மார்பைப் பிளந்து குடலையும் பிடுங்கி நான்கு திசைகளில் வீசி எறிந்தார். கண்ணியமாய் வாழ்ந்த தேவலோகத்தாரையும், பூலோகத்தாரையும் கம்சனின் அடிமை தனத்தில் இருந்து விடுவித்து அருள்புரிந்தார். கோபத்தோடு கம்சனின் உடலை தூக்கி வீசி எறிந்தார். அப்போது, தேவலோகத்தில் இருந்து மலர் மாரி பொழிந்தது.

கிருஷ்ணபலராமரின் வீரமான செயல்களால் யசோதையும், நந்தகோபனும்

ஆனந்தமாகி கண்ணீர் வடித்து நின்றனர். கிருஷ்ணர் கடவுள் என்பது நன்றாகத் தெரிந்து விட்டதால், அவரைத் தொட அவர்களுக்கு தைரியம் வரவில்லை. கிருஷ்ணரோ அவர்களின் பாதத்தில் விழுந்து ஆசி வழங்கச் சொன்னார். அவர் கடவுள் என்பதால் அவருக்கு ஆசி வழங்கும் தகுதி தங்களுக்கு இல்லை எனக்கருதி, அவர்கள் ஒதுங்கி நின்றனர்.

அப்போது கிருஷ்ணர் அவர்களிடம், தாயே ! தேவகி என்னைப் பெற்றவள் என்றாலும் நீயே என்னை வளர்த்தாய். என் பால்ய பருவ விளையாட்டுகளை நீயே ரசித்தாய். அம்மா ! இந்த உடல் தாய் தந்தையின் உறவால் பிறக்கிறது. அதன் காரணமாக பெற்றவர்களுக்கு கடன்படுகிறது. இந்தக் கடனை தீர்க்கும் அளவுக்கு சமஅளவுள்ள பொருள் எவ்வுலகிலும் இல்லை. ஏனெனில், மனிதனாகப் பிறந்தவனுக்கு மட்டுமே எல்லாவற்றையும் அனுபவிக்கும் பாக்கியம் கிடைக்கிறது. மனிதப்பிறவிக்கு மட்டுமே இந்த உடலை விடுத்து, இறைவனிடம் சேர்வதற்குரிய அறிவு தரப்பட்டிருக்கிறது. பெற்றவர்கள் வேறு, வளர்த்தவர்கள் வேறல்ல ! அவ்வகையில், நீங்கள் என்னை ஆசீர்வாதிக்க தகுதியுள்ளவர்கள் ஆகிறீர்கள்.

இதைக்கேட்டு மகிழ்ந்த யசோதையை தம்பதியர் தங்கள் அன்பு மகனை வாரியணைத்தனர். பலராமனுக்கு முத்தமழை பொழிந்தனர். அவர்களது கண்களில் கண்ணீர் பெருகியது. இதன் பிறகு தன் தாத்தா உக்ரசேனரை (கம்சனின் தந்தை) சந்தித்த கிருஷ்ணர், யது ராஜ்யத்தின் அதிபதியாக அவரை அறிவித்தார். கம்சனுக்கு பயந்து ஒளிந்திருந்த மன்னர்களெல்லாம் மகிழ்ந்து, உக்ரசேனரை பணிந்து வணங்கினர். மதுரா மக்கள் கிருஷ்ணரை தினமும் வணங்கும் பாக்கியம் பெற்றனர். முகுந்தா எனக் கூறி அழைத்தனர். இதற்கு முக்தியும் பரமானந்தமும் தருபவன் எனப் பொருள். நிச்சயமாக, மதுரா மக்கள் பரமானந்தத்தில் மூழ்கினர் என்றால் மிகையல்ல.

சில நாட்களுக்கு பிறகு, பிருந்தாவனத்துக்கு யசோதையும், நந்த குமாரரும் புறப்பட்டனர். கிருஷ்ணரை அவர்கள் அழைத்தனர். அம்மா ! எனக்கு இன்னும் சில கடமைகள் இங்குள்ளன. வசுதேவர், தேவகியை சிறையில் இருந்து விடுவித்து, அவர்களுடன் சில நாட்கள் தங்கி வருகிறேன். என்னை வளர்த்த உங்களை என்னால் மறக்க முடியாது. அண்ணாவும் என்னுடன் தான் இருப்பார். நாங்கள், நிச்சயம் பிருந்தாவனத்துக்கு வருவோம், என்றார். அவர்கள், மகன்களைப் பிரிந்து கண்ணீருடன் புறப்பட்டனர்.

இதன் பின்னர் தேவகியையும், வசுதேவரையும் கிருஷ்ணர் சிறையில் இருந்து விடுவித்தார். கம்சன் தேவகியையும் வசுதேவரையும் சிறையில் இருந்து விடுவித்து உக்கிரசேன மகாராஜாவுக்கு நாட்டைக் கொடுத்து ஆளும்படிச் செய்தான்.கம்சனைக் கொன்ற மாயக் கண்ணன் நினைத்தக் காரியத்தை முடித்துவிட்டுத் தன்னைத் தேடி பாதுகாப்பு நாடி சரண் அடைந்தத் தேவர்களுடையத் துன்பங்களையும் மாற்றி எல்லோருக்கும் நல்ல புத்தியையும், வாழும் முறைகளையும் கூறி தன்னுடைய நாட்டுக்குச் சென்றார்

தன்னை மதுராபுரிக்கு கம்சன் உத்தரவின் பேரில் அழைத்து வந்த அக்ரூரனின் இல்லத்துக்கு புறப்பட்டார். அக்ரூரர் மிகச்சிறந்த ராஜதந்திரி. கிருஷ்ணரின் மகாபக்தர். அவர், கிருஷ்ணரை தகுந்த முறையில் வரவேற்று அவரது பாதத்தை கழுவி தீர்த்தத்தை தலையில் தெளித்துக் கொண்டார். அவரது

பாதத்தை தன் மடியில் தூக்கி வைத்து வருடினார். கண்ணீர் மல்க அவரைப் பிரார்த்தித்தார். கம்சனையும் அவனது கொடிய நண்பர்களையும் கொன்றதற்காக நன்றி கூறினார். அக்ரூரரை மிக முக்கிய காரியம் நாடியும் கிருஷ்ணர்பார்க்கவந்திருந்தார்.

அக்ரூரரைப் பார்த்து திரும்புகின்றப போது கம்சனின் மனைவியின் தந்தையான ஜராசந்தன் கம்சனின் மாமன் முறையை கொண்டு கண்ணனை எதிர்க்க வந்தான். கண்ணன் இவனை என்னச் செய்யலாம் என்று யோசித்தார். இவனிடம் போரிடுவது இப்போது நியாயம் இல்லை. நான் இவனோடு யுத்தம் செய்தால் வேறு விதமான விளைவுகள் நேரிடும். சப்த சக்திகளையும் கொண்டவன் ஜராசந்தன். இவனோடுப் போரிட்டு வதம் செய்ய வேண்டியது குந்தியின் மகனான வீமனின் செயலாகும். அவனுக்குத்தான் இவனை கொல்லும் விதி அமைந்திருக்கிறது. ஆகையால் அவனிடம் கண்ணன் யுத்தம் செய்ய விரும்பவில்லை. ஆகையால் ஜராசந்தன் உயிர் தப்பினார். கம்சனைக் கொன்ற பாவத்தை போக்க பகவான் கண்ணன் கடலில் நீராடி கன்னியாகுமரி கடலுக்குள் சென்ற கோட்டை அமைத்து மாயக்கண்ணன் துவரையம்பதியில். நிம்மதியாக அமர்ந்திருந்தார்.

## உச்சிப்படிப்பு

(உச்சிவேளையில் படித்து உச்சந்தலையில் இருக்கும் சகஸ்ரதளதில்
வீற்றிருக்கும் இறைவனை காண்பதே உச்சிபடிப்பாகும்)

உடற்குள்குறியாய்ஒத்துமிகவாழுங்கள் _ அகிலம்

மூலாதாரத்தில் சுருண்டு உறங்கி இருக்கின்றக் கனலானக் குண்டலினிச் சக்தியை ஆறு ஆதார சக்தி வழியாக மேல் எழுப்பி ஒவ்வொரு ஆதாரச் சக்திகளையும் விழிப்படைய செய்து உச்சந்தலையிலே ஏழாவதாக இருக்கும் சகஸ்ரதளத்திலே கொண்டு நிறுத்தி அங்கு கவிழ்ந்து விழிப்பற்று இருக்கின்ற ஆயிரத்தி எட்டு இதழ்களை உடைய மலரை மலரச் செய்து விழிபடைந்து, சகஸ்ரதளத்தில் பள்ளிகொள்ளும் இறைவனைக் காண்கின்ற அற்புத நிலையை பெறச் செய்வதே உச்சிப்படிப்பு ஆகும்.

உச்சப்படிப்பு தினந்தோறும் உச்சி வேளையில் படிப்பதால் ஏற்படும் பலன்கள்:-

“உச்சிப்பாட்டு பாடச் சொல்லு உளம் மகிழ்ந்து என் என்பேரில் அந்நேரம் நான் வருவேன், அனல் மாற்றி நான் தருவேன்”—அகிலத்திரட்டுஅம்மானை

மனிதப்பிறவி எடுத்திருப்பதன் நோக்கமே இறைவனை அடைவதற்காகவே. ஆனால் நாம் அதை மறந்து இந்த உலகியல் இன்பங்களில் மனதை செலுத்தி பலவிதமான துன்பங்களுக்கு ஆட்படுகிறோம். போன பிறவியல் செய்த நன்மைத் தீமைக்கு ஏற்ற வாறு தான் இப்பிறவி அமைகிறது. நாம் இப்போது இந்தப் பூமியல் பிறந்திருப்பதே நாம் செய்த கர்மவினையை அனுபவிப்பதற்காக தான். நாம் பிறருக்கு செய்கின்ற தீமையானது கர்மவினையாக அடுத்தடுத்து

பிறப்பெடுக்க வைத்து நம்மை பல விதங்களில் துன்பப்படுத்துகிறது. இந்த காரண சரீரமானது நாம் செய்த தீமையின் காரணமாகத் தொடர்ந்துப் பிறவி எடுத்துக்கொண்டே இருக்கும்.

இப்பிறவியில் நம்முடைய பழைய ஊழ்வினை என்றுச் சொல்லப் படும் கர்ம வினையை மாற்ற வேண்டுமென்றால் அதற்கு உச்சிப் பாட்டு படிப்பது அவசியம். ஊழ்வினை என்கிற கர்ம வினைகள் மாற்றப்பட்டு அய்யாவினுடையப் பிள்ளைகளாக நாம் மாறுகின்றோம். இதனால் மீண்டும் கர்மவினைகள் நம்மை தொடராது. அதாவது உச்சப்படிப்பு படிக்கின்றபோது நாம் போன பிறவியில் தெரிந்தோ தெரியாமலோ செய்த அத்தனை பாவங்களும் நம்மைவிட்டு விலகி விடுகிறது.

இப்படி நமக்கு ஏற்படுகின்ற கர்ம வினைகளை மாற்றவும், நோய் நொம்பலங்கள் இல்லாமலும் எந்த தீயச் சக்தியும் நம்மை அண்டாமலும், வறுமை நீங்கி நலமுடன் வாழவேண்டும் என்றால் நாம் தினந்தோறும் உச்சிப்படிப்பை படிக்க வேண்டும். பிறவி பிணியை மாற்றி எந்த விதமானத் துன்பமும் நம்மை அண்டாதவாறும், மேலும் அடுத்த பிறவியில்லால் தர்மயுகவாழ்வைப் பெறுவதற்கு உச்சிப்பாட்டு துணைப் புரிகிறது அய்யா நம்மைக் காத்தருள்வார். மேலும், உச்சிப்பாட்டின் அடுத்த பலன் என்னவென்றால்,

"உச்சி கிரகமடா ஒருவருக்கும் தெரியாது,

உன் பச்சம் உண்டால் போதுமடா பகை எனக்கு இல்லையடா"

நம் தலையெழுத்து (விதி) எப்படி பட்டதாக இருக்கும் என்றோ, அடுத்து நடக்க இருப்பது என்னவென்றோ நாம் ஒருவருக்கும் தெரியாது. ஆனால் அடுத்து என்ன நடக்கும் என்பது நம்மை படைத்த ஆதிப்பரம்பொருளுக்கு மட்டுமே தெரியும். நாம் ஜோதிடம் , ஜாதகம் என்று எதைப் பார்த்தாலும் நடந்ததையும், நடந்துக் கொண்டிருப்பதையும் கூறுவார்கள். . ஆனால் நடக்க இருப்பதை யாரும் கூறமாட்டார்கள். ஆனால் ஆதிபரம்பொருளுக்குத் தெரியும் அடுத்து என்ன நடக்கும் என்பது, நமக்கு ஊழ்வினை பயனால் ஒரு துன்பம் வரப்போகிறது என்றால், பெரிதாக வரவிருக்கின்றத் துன்பத்தை சிறிதாக அதாவது, தலைக்கு வருவதைத் தலைப்பாகையோடுப் போக வைப்பதைப் போன்று பெரும் துன்பம் நம்மை அண்டவிடாதப் படி, நாம் உச்சிப்பாட்டை இறைவன் மீது பற்றுதல் கொண்டு மனம் மகிழ்ந்துப் பாடும்போது, இறைவன் நம்மோடு இருப்பதால் பகையாகிய எந்த துன்பமும் நம்மை அண்டாதவாறு இறைவன் நம்மைப் பாதுகாப்பார்.

அதாவது நம் தலையெழுத்து (விதி) சொல்லப்படுகின்ற என்றுச் காலநிலைகளை எல்லாம் இறைவன் துணையோடு, எந்த தீயச் சக்தியும் நம்மை அண்ட விடாதப்படி, எப்படி பட்டதாக இருந்தாலும் அது நன்மையே நமக்கு அளிக்கும் படி செய்வதற்கு, நாம் தவறாமல் மன, மகிழ்ச்சியோடு எந்த பிரதிபலனையும் எதிர்பாராமல் உச்சி பாட்டை இறைவன் மீதுப்பற்றுதலோடுப்

படிக்க வேண்டும்அவ்வாறு உண்மையான அன்போடு இறைவனை துதித்து. . .உச்சிப்பாட்டை படித்தோமேயானால் ஊழ்வினை பயனாலும் ,இந்த கலியின் தாக்கத்தால் ஏற்படுகின்ற அந்த தீமையை அறுத்து இறைவன் நம்மோடு இருந்து எப்போதும் நமக்கு நல்லதையே செய்வார். எனவே நாம் நம் ஊழ்வினை மாற்ற உச்சிவேளையில் உச்சிப் படிப்பை படித்தால் நாம் இந்தப் பூவுலகில் எந்தவிதமான துன்பங்களும், துயரங்களும், மன சஞ்சலங்களும் இல்லாமல் மனநிறைவோடு சந்தோசமான வாழலாம்.

உச்சிப்படிப்பின் சிறப்புகள்

உச்சிப்படிப்பானது தியானபயிற்சி, மூச்சுபயிற்சி, பிராத்தனை ஆகிய மூன்றும் சேர்ந்து மனதை பக்குவப்படுத்தி, கட்டுப்படுத்துகின்ற ஒரு தவபயிற்சியாகவிளங்குகிறது.

மேலும் இப்பயிற்சி காலத்தோடுச் சேர்ந்துப் பயணிப்பதாலும் உச்சிப்படிப்பு என்று அழைக்கப்படுகிறது,

அதாவது காலை சந்தி ஆறுமணி (இருளில் இருந்து வெளிச்சதிற்க்கு மாறும் வேளை), உச்சி சந்திப் பன்னிரண்டு மணி (வெளிச்சம் உச்சம் பெறுகிற வேளை), மாலை சந்தி ஆறுமணி (வெளிச்சத்தில் இருந்து இருளுக்கு நகருகிற வேளை), இரவு சந்திப் பன்னிரண்டு மணி (இருள் உச்சம் பெறும் வேளை), இச்சந்தி வேளைகளில் நம்உடற் கூறு தத்துவங்களிலும், மனங்களிலும், நாடி துடிப்புகளிலும், மூன்று குணங்களிலும் பலமாற்றம் நடைபெறுகிறது. இதையே இன்றைய அறிவியலும் பறைச் சாற்றுகிறது. எனவே இச்சந்தி வேளைகளில் இறைவனை வழிபடுவது உடலுக்கும், மனதிற்கும் பயன்தரும் சிறப்பு வாய்ந்தது ஆகும்.

நமது சானதன தர்மத்தில் மூன்று நேரச் சந்தியா வழிபாட்டினைப் பற்றி மிக சிறப்பாகச் சொல்லி வந்தும், காலபோக்கில் காலை சந்தி மற்றும் மாலை சந்தி என இரு நேர வழி பாடாக மட்டுமே செயல்பட்ட போது, அய்யா வைகுண்டபரம் பொருள் நமது பழையத் தர்மத்தை மீண்டும் நிலை நாட்டும் வண்ணம் இந்த உச்சசந்தி வழிபாட்டையும் சேர்த்துக் கொடுத்து அதன்படி வழிப்பட வைத்தது நமது அய்யா வழிபாட்டின் மிக பெரியச் சிறப்பு அம்சமாகும்.

இந்த உச்சி படிப்பினை உச்சவேளையில் தினமும் ஒரு வேளை படித்துவிட்டு உணவு அருந்தும் படி அய்யா வைகுண்ட பரம் பொருள் திருவாய் மொழிந்துள்ளார், ஆனால் எல்லோராலும் தினமும் உச்சிவேளையில் படிக்க முடியவில்லை என அய்யாவிடம் வேண்டியதால் முடியாதவர்கள் ஏழுநாட்களுக்கும் சேர்த்து வாரத்தில் ஒரு நாள் அதாவது ஞாயிற்றுக்கிழமை உச்சசந்தியில் ஏழு முறை படியுங்கள் என தனது அவதாரகாலத்தில் சொல்லியுள்ளார். இந்த உச்சிபடிப்பின் மூலம் அய்யா வைகுண்டபரம் பொருளே நமக்கு குரு, வேறு யாரும் குரு ஆக முடியாது என்பதை தெளிவு படுத்துகிறார் பகவான்.

உச்சிப்படிப்பு மனப்பாடம்

சிவசிவா அரிகுரு சிவசிவா
சிவசிவா ஆதிகுரு சிவசிவா
மூலகுரு சிவசிவா சிவசிவா சிவமண்டலம்
அல்லா இல்லா இறைசூல் மகிலல்லா சிவசிவா சிவமண்டலம்
அரி நாராயணகுரு சிவசிவா சிவமண்டலம்
நாதன் குருநாதன் சிவசிவா சிவமண்டலம்
பரலோகம் அளந்த பச்சைமால் நாராயணர் சிவசிவா சிவமண்டலம்
திருவுக்கும் சடைகுரு சிவசிவா சிவமண்டலம்
செங்கண் திருகுரு சிவசிவா சிவமண்டலம்
சன்னியாசிகுரு சிவசிவா சிவமண்டலம்
மகாகுரு சிவசிவா சிவமண்டலம்
அரி சங்கராகுரு சிவசிவா சிவமண்டலம்
மகாகுரு சிவசிவா சிவகுருமண்டலம்
மண்டலம் குருமண்டலம் மாயன் குருமண்டலம்
குண்டலம் குருகுண்டலம் சிவசிவா குருமண்டலம்
சங்கம்நிதி குண்டலம் தரணி குருகுண்டலம்
தரணியது குண்டலம் தரணிபுகழ் குண்டலம்
சிவசிவா எங்கும் நிறைந்தவர் ஏகமயமாய் நின்றவர் சிவசிவா
ஏககுருவாகப் படைத்தது நிறைந்தவர் சிவசிவா
படைத்து நிறைந்தவர் பாலன்வடிவு கொண்டவர்
பங்காளர் பங்காளர் பாருலோகம் அளந்தவர்
அளந்தவர் திருமால் ஆதிகுரு சன்னியாசி
சிவசிவா சன்னியாசி செந்தில்வேல் வடிவுமவர்
செந்தில்வேல் சன்னியாசி செந்தி வேல்லவர்
வடிவும் புகழ்படைத்தவர் மாயநிற மானவரவர் சிவசிவா
கங்கை கண்ணானவர் காரணம் நிறைந்தவர்
நிறைந்து நிறைந்தவர் ஏகமெல்லாம் நிறைந்தவர்
எங்கும் நிறைந்தவர் ஏகமாய் நின்றவர்
மண்டலம் புகழ்படைத்த மாயன்குரு சன்னியாசி
சிவசிவா தந்தேனன்னாய் தன்னானாய் தந்தேனன்னாய் தன்னானாய்
சிவசிவா த..ம்...அ...சி அரி நன்றாகக் குருவே துணை
சிவசிவா தெந்திநன்னாய் தென்னானாய் தெந்தி நன்னாய் தென்னானாய்!
சிவசிவா தன்னானாய் தன்னானாய் தன்னானாய தன்னானாய்
சிவசிவா தானானோம் தானானோம் தானானோம் தானானோம்
சிவசிவா நானானோம் நானானோம் நானானோம் நானானோம்
சிவசிவா தந்தேநன்னம் தந்தேநன்னம் தந்தேநன்னம் தந்தேநன்னம்

மகாலிங்கம் அரிலிங்கம்
சிவலிங்கம் லிங்காலிங்கம்
குருலிங்கம் சொக்கலிங்கம்
திருலிங்கம் சுகலிங்கம்
ஏக்காலிங்கம் ஆதிலிங்கம்
ஏகலிங்கம் அருள்லிங்கம்
அடங்காலிங்கம்

**உச்சிப்படிப்பின் முழு மூலமும மனப்பாடம் செய்யவேண்டும் .

உச்சிப்படிப்பு படிக்கும் வழிமுறைகள்

பதிகளில் சரியாக உச்சிவேளையில் ஆரம்பிப்பது சிறப்பு. பதிகளில் உச்சிபடிப்பினை ஒருவர் சொல்லி தர மற்ற அனைவரும் பின் தொடர்ந்து ஒரே போல் படிக்க வேண்டும். எனவே பதிகளில் இதுவும் ஒரு கூட்டு பிரார்த்தனையாகவே திகழ்கிறது. உச்சிப் படிப்பினை ஆரம்பிக்கும் முன் எப்பொழுதும் சொல்லித் தருபவர் எப்படி நிற்க வேண்டும், அமரவேண்டும்படிக்கவேண்டும் என்ற முறையினைச் சொல்லித் தந்து பின் ஆரம்பிக்க வேண்டும்

பதிகளில் இப்பயிற்சியினை மேற்கொள்ளும் போது அனைவரும் வரிசையாக நின்றும் அமர்ந்தும் பள்ளியறையை நோக்கி வண்ணம் செய்வது மிக முக்கியமானதாகும்.ஞாயிறு அன்று ஏழு முறை படிக்கும் போது அன்றைய நாளுக்கான ஒரு முறை படிப்பை நின்று கொண்டும், முந்தைய ஆறு நாள்கள் படிக்க வேண்டியதை அமர்ந்தும் படிக்கவேண்டும். படிப்பு ஆரம்பிக்கும் முன் நம் இரு புருவங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள சுழிமுனையாகிய ஆக்ஞாசக்கரத்தில் நினைவை நிறுத்தி ஆரம்பிக்க வேண்டும்

படிக்கும் போது மூச்சுபயிற்சி மேற்கொள்ள வேண்டும், அதாவது சொல்லித் தருபவர் படிக்கும் போது மற்றவர்கள் சுவாசத்தினை மூக்கு வழியாக உள்வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும் பிறகு பின் தொடர்ந்துப் படிக்கும்போதுச் சுவாசத்தினை வாய் வழியாக வெளியே விட வேண்டும்.

உச்சபடிப்பின் ஒவ்வொரு மந்திரத்தையும் நாம்சொல்லும் போதும் ஒரே மூச்சில் சொல்ல வேண்டும், இடையில் மூச்சுவிட்டு விட்டுச் செய்ய கூடாது. நின்று படிக்கும் போது உடலை நேராகவும் இரு கரங்களைக் கூப்பி வணங்கிய வண்ணம் நின்றுப் படிக்க வேண்டும். அமர்ந்து படிக்கும் போது சுகாசனத்தில் அதாவது உடலை நேராகவும் கால்களைச் சம்பளங்கால் கூட்டிகரங்களைக் கூப்பிவணங்கிய வண்ணம் அமரவேண்டும்

குறிப்பு :

தினமும் ஒரு முறை என்கிற கணக்கில் தவறாதுப் படித்து நமது வாழ்க்கைப் பயணத்தைப் பயணிப்போம்.

உச்சப்படிப்பு தினந்தோறும் உச்சி வேளையில் படிப்பதால் நமது உடலுக்கு கிடைக்கும் நற்பலன்கள்.

1 இரத்த ஓட்டமும், நாடி துடிப்பும் சீராகிறது.
2. மன அழுத்தம் குறைந்து எண்ண ஓட்டங்கள் ஒன்றாகிறது.
3. மனஅமைதி பெற்று மகிழ்ச்சிப் பெருகிறது.
4. அய்யா வைகுண்டபரம் பொருளின் தரிசனம் கிடைக்கப் பெறுகிறோம்.
5. அய்யா வைகுண்டபரம் பொருள் சொன்ன இல்லறத் தவத்தை நாம் சரியாகக் கடைபிடிக்க உச்சிப்படிப்பு நமக்கு உறு துணையாய் இருக்கிறது.
6.மொத்தத்தில் உச்சிபடிப்பு நம்மைக் கலியில் இருந்து கடந்து அய்யா வைகுண்டபரம் பொருளிடம் சென்றடையச் செய்கிறது.

உச்சிப் படிப்பு மூலம் அய்யா வைகுண்டப்பரம் பொருளை அடைய நாம் என்னச்

செய்ய வேண்டும் என்பதை அய்யாவே நமக்கு இந்த புதிய வழிபாட்டு முறைகள் வகுத்துக் கொடுத்து இருக்கிறார், இதை நாம் கருத்தில் கொண்டு வேறு முறைகளில் மனம் அலை பாயாமல் அய்யா வகுத்துக் கொடுத்த இந்த வழிமுறைகளின் சூட்சமத்தை உணர்ந்துச் செயல்படுவோம் தர்மயுக வாழ்வுப் பெறுவோம்.

********அய்யா உண்டு*******